Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

பொழிவு - 11
குவிப்பு - 08
பக்கங்கள் - 20
விலை ரூபா 30.00
ஓகஸ்ட் - 2008
(ISSN 1800-2641)

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/75/News/2008

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, St. Sebastian's St., Mannar, Sri Lanka.
Telephone No : 023-2222377/ 060-2233276, Fax No - 023 - 2222377, E-mail - nesanmn@yahoo.com

### கனடா நாட்டின் கியூபெக் நகரில் சிறப்பாக நடைபெற்ற

# அனைத்துலக நற்கருணை மகாநாடு



## கனடா நாட்டின் கியூபெக் நகரில் 49வது அனைத்துலக நற்கருணை மாநாடு கடந்த யூன் மாதம் 15 தொடக்கம் 25ம் திகதி வரை சிறப்பாக நடைபெற்றது

இதில் பதினோராயிரம் பேர் வெளி இடங்களிலிருந்து வந்து பங்கேற்றார்கள். ஒவ்வொரு நாளும் இருபதாயிரம் பேர் கலந்துகொண்ட இம்மாநாட்டில் 68 விழுக்காடு உறுப்பினர்கள் கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

55 பேராயர்களும் 218 ஆயர்களும் ஆயிரக் கணக்கான குருக்கள், துறவியரும் இதில் பங்கேற்றனர். 70 நாடுகளில் இருந்து இவர்கள் இம்மாநாட்டிற்கு வந்திருந்தனர். இந்த நற்கருணை மாநாட்டிற்கு திருத்தந்தை வர விரும்பியபோதும் ஏற்கனவே அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற இளைஞர் மாநாடு போன்றவற்றில் திருத்தந்தை பங்கேற்றதினால் இம்மாநாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை.

எனினும் உரோமிலிருந்து திருத்தந்தை ஒலி, ஒளி மறை உரையை வழங்கினார். "நற்கருணை எமது விலைமதிக்க முடியாத பொக்கிஷம், அருட்சாதனங் களிலெல்லாம் மேலானது, மீட்பின் மறைபொருள், அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. திருச்சபையின் வாழ்வின் ஊற்றாகவும் செயற்பாடுகளின் மையமாகவும் திகழ்கின்றது" என திருத்தந்தை தெரிவித்தார்.

# வன்னியில் தொடரும் மனித அவலம்

### வன்னிப்பகுதியில் அடிப்படை மருந்துகளுக்கும் அத்தியவசிய உணவுகளுக்கும் பாரிய தட்டுப்பாடு

### 20 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஐ. நா. கவலை.

வடக்குப் பிரதேசத்தின் முன்னரங்க நிலைகளில் கடும் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் இடம் பெறுவதோடு, வன்னிப்பகுதியினுள் கிளேமோர் தாக்குதல் களும் விமானக் குண்டு வீச்சுக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் வன்னியினுள் 20 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா. முகவர் அமைப்புக்களின் நிலையியற் குழு தெரிவித்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தினுள் உள்ள வைத்தியசாலைகளின் அடிப்படை மருந்துகளுக்குக்கூட பாரிய தட்டுப்பாடு நிலவிவருவதாகவும் அது மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, அத்தியவசிய உணவுப்பொருட்களுக்கு வன்னியில் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாகவும் நிவாரண உதவிகள், உணவுப்பொருட்களின் விநியோகத்தில் பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு செயற்பட்டு வரும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

# மடுமாதாவின் திருச்சுரூபம் மீண்டும் மடுவில் சிம்மாசனம் ஏற்றப்பட்டது

## மடு அன்னையின் பக்தர்கள் மகிழ்ச்சி


பல மாத இடைவெளியின் பின்னர் கடந்த ஓகஸ்ட் மாதம் 13ம் திகதி ஆலயத் தூய்மைப்படுத்தும் திருச்சடங்குகள் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து மடு அன்னையின் திருச்சுரூபம் மீண்டும் சிம்மாசனம் ஏற்றப்பட்டது என்பதை மன்னா மகிழ்வோடு அறிவிக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி மடு அன்னை தனது மடு ஆலய சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டு அகதிகளோடு அகதியாக இடம்பெயர்ந்தார். தேவன்பிட்டி புனித சவேரியார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த இத்திருச்சுரூபம் அப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த யூன் மாதம் 22ம் திகதி அங்கிருந்து கிளிநொச்சி, ஓமந்தை, வவுனியா ஊடாக மன்னாருக்கு எடுத்துவரப்பட்டது.

மன்னார் ஆயர் இல்லத்தில் மக்கள் வணக்கத் திற்காக வைக்கப்பட்டிருந்த அன்னையின் திருச்சுரூபம் கடந்த ஓகஸ்ட் மாதம் 09ம் திகதி மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை மற்றும் குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் மடுவிற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஓகஸ்ட் 11ம் திகதி மன்னார் ஆயர் தலைமையில் 25 குருக்கள் மடுத்திருப்பதிக்கு மடுறோட் வழியாகச் சென்று தூய்மைப்படுத்தும் சடங்கை மேற்கொண்டனர். ஆயரின் தலைமையில் அங்கு திருப்பலியும் ஒப்புக்கொடுத்தனர். ஆலயத் தூய்மைப்படுத்தும் திருச்சடங்கு முடிவுற்றதும் மடுப் பரிபாலகர் அறையில் வைக்கப்பட்டிருந்த மடு அன்னையின் திருச்சுரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டு ஆயரால் சிம்மாசனம் ஏற்றப்பட்டது.







## பொதுநிலையினருக்கான வலுவூட்டல் கருத்தமர்வு

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு கடந்த யூலை மாதம் 11ம் 12ம் திகதிகளில் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பொது நிலையினருக்கான வலுவூட்டல் கருத்தமர்வு நடைபெற்றது.

இந்தியாவின் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி எஸ். சூசை மாணிக்கம் ஆண்டகை இக்கருத்தமர்வை நெறிப்படுத்தினார். மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்ற இக்கருத்தமர்வின் முதல் நாளில் அரச பணியாளர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள் என 500 பேரும், இரண்டாம் நாளில் மறை ஆசிரியர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள், தன்னார்வ இறைவார்த்தை பணியாளர்கள், பக்திச்சபை உறுப்பினர்கள் என 700 பேரும் பங்கேற்றனர்.

இறைவார்த்தையின் முக்கியத்துவம் பற்றியும் பொதுநிலையினரின் வாழ்வு, அழைப்புப் பற்றியும் ஆயர் அவர்கள் தெளிவான கருத்துக்களை முன் வைத்தார்.







# மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## வன்னியின் மனிதப் பேரவலத்தைத் தடுக்க உரத்துக் குரல் கொடுப்போம்

வன்னியின் போர்முனைத் தகவல்கள் நெஞ்சை நெகிழ வைப்பதாக உள்ளன. வடக்குப் பிரதேசத்தின் முன்னரங்க நிலைகளில் கடும் மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் இடம்பெறுவதோடு, வன்னிப்பகுதியினுள் கிளேமோர் தாக்குதல்களும் விமானக் குண்டு வீச்சுக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் வன்னியினுள் 20 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. வன்னிப் பிரதேசத்தினுள் உள்ள வைத்திய - சாலைகளில் அடிப்படை மருந்துகளுக்குக்கூட பாரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது. அத்தியவசிய உணவுப்பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது. நிவாரண உதவிகள், உணவுப் பொருட்களின் விநியோகத்திலும் பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மன்னாரின் வெள்ளாங்குளம், முழங்காவில் பகுதிகளிலும் ஒட்டங்குளம், கல்விளான், மல்லாவி, துணுக்காய் பகுதிகளிலும் இரு தரப்புக்குமிடையில் கடுமையான நேரடி மோதல்கள் இடம்பெற்று வருவதாக செய்திகள் வருகின்றன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தின் கட்டுப்பாடற்ற பகுதிகளில் மக்கள் முற்றாக வெளியேறி கிளிநொச்சி மாவட்டத்தின் மையப்பகுதியை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர். மன்னார் மாவட்ட செயலகத்தின் மதிப்பீட்டின்படி இறுதியாக 6,217 குடும்பங்களைச் சேர்ந்த 22,797 பேர் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இடம்பெயர்ந்த மடு, பண்டிவிரிச்சான் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை இதில் உள்ளடக்கப்படவில்லை. மடு, மாந்தை மேற்கு பிரதேச செயலகங்கள், அடம்பன், மடு வைத்தியசாலைகள், மடு கல்வி வலயம் என்பன கிளிநொச்சிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சியின் கரைச்சி பிரதேச செயலகப் பகுதியைச் சேர்ந்த 9,392 குடும்பங்களும் பூநகரிப் பகுதியைச் சேர்ந்த 2,291 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளதாகத் தகவல்கள் தெரி - விக்கின்றன.

இதேபோன்ற நிலைமையே முல்லைத்தீவு மாவட்டத்திலும் காணப்படுவதாகவும் அங்கு 2,500க்கும் அதிகமான சுமார் 1,500க்கும் அதிகமான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் முல்லைதீவு மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வன்னியிலுள்ள வைத்திய - சாலைகளில் பென்சிலின் ஊசி மருந்துகள், மெட்பேர்மின், அஸ்ட்ரோவாஸ்ட்டெயின், போலிக் அசிட், பண்டேஜ், கோஸ், சர்ஜிக்கல் ஸ்பிறிற் உள்ளிட்ட அவசர வேளைகளில் உபயோகிக்கப்படும் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேவேளை அங்குள்ள வைத்தியசாலைகளில் சாதாரண நிலையில் தேவைப்படும் அடிப்படை மருந்துகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதிதாக இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை ஆற்றுவதில் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. வன்னிப் பிரதேசத்துக்குத் தேவையான உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு ஓமந்தை ஊடான ஒரேயொரு பாதை மாத்திரமே தற்போதுள்ளதால் விநியோகத்திலும் பாரிய தாமதம் ஏற்பட்டுள்ளது.

இப்படியானதொரு சூழ்நிலையில் வன்னியின் மனிதப்பேரவலத்தை தடுத்து நிறுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். போரில் சம்மந்தப்படாத அப்பாவி மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும். இதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் மனித நேயமிக்க அனைவரும் உரத்துக் குரல் கொடுக்க வேண்டும் என துன்புறும் மக்கள் சார்பாக மன்னா வேண்டுகோள் விடுக்கின்றது.

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணியாளர் நேசன்.*
*மன்னா பதிப்பாசிரியர்*



# வாசகர் எண்ணங்கள்

### தடைகளைத் தாண்டி சாதனைகள் படைக்கும் சரித்திர நாயகன் நீ

அன்பிற்கினிய மன்னாவே, வாசகர் எம் உணர்வுகளை அறிந்து
எமக்காக பல பக்கங்களை சுமையோடு
தாங்கி வருகின்ற தியாக தீபம் நீதான்.
தடைகளைத் தாண்டி சாதனைகள் பல படைத்த
சரித்திர நாயகன் நீதான்.
மாணவர் எம் அறிவிற்காய் குறுக்கெழுத்துப் போட்டி
போன்றவற்றை வைத்து அறிவை வளர்க்கும் புத்திமான் நீதான்
வாழ்க உன்பணி, தொடர்க உன் சேவை!

*பி. மதுசாளினி, மடுக்கோவில், மடு.*

### சுவை மிகுந்த தமிழாலே வாழ்த்துகிறேன்!

ஒற்றுமைபோல் உயர்வளிக்கும் உடமையில்லை.....
ஒப்பரிய சமாதானமே உலகின் எல்லை.....
வெற்றிதரும் வாழ்வுதனை விதந்துரைக்கும்
வேதநெறி ஏடான மன்னாவில்
சுற்றிவரும் ஆக்கங்கள் சுபீட்சம் பெற
சுவை மிகுந்த தமிழாலே வாழ்த்துகிறேன்.....!

*சி. நிஹால் ஜோசப்*
*28/4, பொல்லத்தாவெல, லுணுகலை.*

### ஆக்கங்களை அள்ளிவரும் மன்னாவே!

என் அன்பார்ந்த இனிய மன்னாவே!
மனம் திறந்து வாழ்த்துகிறேன். எமது ஆக்கங்களை அள்ளி வருகின்றாய். உன் புகழ் மென்மேலும் வளரவும், உன் சேவைகள் சுடர்விட்டு இன்னும் பிரகாசிக்கவும் அணையா விளக்குப்போன்று என்றும் அணையாமல் தொடரவும் வாழ்த்துகிறேன். மாணவர்களையும் மக்களையும் எதிர்கால நற்பிரஜைகளாக்கும் உன்னுடைய பணிகள் தொடர்ந்து வாழையடி வாழையாக வளரட்டும்!
வாழ்த்தும் உன் அன்பு வாசகி,

*ஞா. குயின்சி கிறிசாந்தி,*
*சாளம்பன், ஆட்காட்டிவெளி*

### திறமைகளுக்கு களம் அமைக்கும் மன்னா!

அறிவூட்டும் மன்னாவே, எமது திறமைகளுக்கெல்லாம் களம் அமைத்துத் தருகின்றாய். அதற்கு நன்றி என்ற சொல் போதாது. எம் திறமைகளை எல்லாம் யார் ஊக்குவிப்பார் என ஏங்கித் தவிக்கும் வேளை உன் வரவானது எமக்கு புது நம்பிக்கையை ஏற்படுத்தியது. உனக்கு ஆக்கங்கள் எழுதுவதற்காக எமது புத்தியை கூர்மையாக்கினோம். உன்னில் வரும் ஆக்கங்களை வாசித்து நாம் விழிப்படைகின்றோம். எம்மை விழிப்படையச் செய்த மன்னாவே நீ வாழ்க! வளர்க! பதிப்பாசிரியரின் சேவை இன்னும் தொடர்ந்து வளர்க!

*ஞா. கிறேசியன், பொன்தீவுகண்டல், முருங்கன்.*

## 42வது உலக தொடர்பாடல் தினத்துக்காக திருத்தந்தை 16ம் பெனடிக்ற் விடுக்கும் செய்தி

### (ஞாயிறு வைகாசி 4, 2008)

**ஊடகம்:** சுயவளப்படுத்தலுக்கும், சேவைக்கும் இடையிலான சந்தியில் உண்மையை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதற்காக அதற்கான தேடலில் ஈடுபட்டுள்ளது.

**அன்பான சகோதர, சகோதரிகளே,**

1. இவ்வாண்டு உலக தொடர்பாடல் தினத்துக்கான கருப்பொருள், "ஊடகம் : சுயவளப்படுத்தலுக்கும், சேவைக்கும் இடையிலான சந்தியில் உண்மையை ஏனையோருடன் பகிர்ந்துகொள்வதற்காக அதற்கான தேடலில் ஈடுபட்டுள்ளது" என்பதாகும். இது தனிப்பட்டவர்களது வாழ்விலும், சமுதாயத்தினது வாழ்விலும் ஊடகங்கள் வகிக்கும் முக்கிய பங்கை எடுத்துக் காட்டுகின்றது. உண்மையிலேயே சமூக, பொருளாதார, மத, வளப்படுத்தல்கள் போன்றவற்றின் ஆட்தன்மையான, உறவின் ஒருங்கிணைந்த பகுதியாக ஊடகம் இராதபோது மனித பட்டறிவுக்கும் விசேட விதமாகப் பரந்த அளவிலான உலகமயமாக்கலுக்கும் இடமில்லை.

இவ்வாண்டு உலக அமைதி தினத்துக்கான எனது செய்தியில் நான் கூறியது போன்று (1 ஜனவரி 2008) "சமூகத் தொடர்பாடல் ஊடகங்கள் தமக்குச் சாத்தியமாகும் விதத்தில் விசேடமாகக் குடும்பங்களுக்கு மரியாதையை அளித்து அவற்றின் எதிர்பார்ப்புக்களையும், உரிமைகளையும் தெளிவுபடுத்தி அதன் அழகை முன்வைக்கும் விசேட பொறுப்பைக்கொண்டுள்ளன. (இல 5)

2. ஊடகங்கள் தங்களது வேகமான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக புதியதும் இதுவரையில் கற்பனை பண்ணிப்பார்க்க முடியாததுமான வினாக்களையும், பிரச்சினைகளையும் எழுப்பும் அதேவேளை அசாதாரண நிகழ்வுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளன. அறிவுசார் செய்திகளைப் பரப்புதல் மற்றும் தகவல்களை அளித்தல் ஆகியவற்றில் ஊடகங்களின் பங்களிப்பை மறுப்பதற்கில்லை. எடுத்துகாட்டாக எழுத்தறிவுப்பரம்பல், சமூக மயமாக்கல் அதேபோன்று குடியரசு, மற்றும் மக்களிடையேயான உரையாடல், போன்றவற்றை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் அவை நிறைவான பங்களிப்பை நல்கியுள்ளன.

சுயதீனமான சிந்தனை ஓட்டங்களை விசேடமாக ஒருமைப்பாடு சமூகநீதி ஆகியவற்றை வளப்படுத்தும் சிந்தனைகளை நிச்சயப்படுத்தும் அதேவேளை தேசங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துதல், உலகம் முழுவதும் அமைதிக்கான உரையாடலுக்கு உயிரூட்டம் அளித்தல், தகவல்களை வழங்குவதற்கான ஆரம்ப செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உத்தரவாதம் அளித்தல் ஆகியவை இவற்றினது பங்களிப்பின்றி முன்னெடுக்கப்படுவதும் பலப்படுத்தப்படுவதும் கடினம்.

உண்மையில் ஊடகங்கள் தமது கருத்துக்களை இவ்விதம் பரவச் செய்வதற்கு வாகனங்களை மட்டும் எடுத்துச்செல்வதில்லை. நீதியும், ஒருமைப்பாடும் உள்ள ஒரு உலகிற்கான சேவையில் இவை ஒரு கருவியாக இருக்க முடியும்; இருக்கவும் வேண்டும். துரதிஷ்டவசமாக நாளாந்த செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் நிகழ்ச்சி நிரல்கள் மனுக்குலத்தை அடக்கி ஆளும் முறைகளை நோக்கமாகக் கொண்டுள்ளதால் இவை உருமாற்றம் பெறும் ஆபத்தையும் கொண்டுள்ளன. கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக அன்றேல் நுகர்வோருக்கான உற்பத்திப் பொருட்களை விளம்பரம் செய்வதற்காக தொடர்பாடல் உபயோகிக்கப்பட்டபோது நடந்தது இதுதான். உண்மையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரிமை கொண்டாடும் அதேவேளை நியாயமான விதத்தில் அதனைக் காப்பாற்றுவதற்கும் தனிப்பட்ட, குடும்ப, சமூக வாழ்வின் மாதிரிகளை எடுத்துக்கூறுவதற்குமான கடமையையும் கொண்டுள்ளன. மேலும் செவிமடுப்போரின் கவனத்தை இழுத்தெடுப்பதற்கும், பார்வையாளரின் தொகையை அதிகரிப்பதற்கும் மற்றும் சில சமயங்களில் அநாகரீகமான செயற்பாடுகள், வன்செயல்கள் ஆகியவற்றிற்கான வழிவகைகளை மீறுவதற்கும் இவை தயங்குவதில்லை. ஊடகங்கள் வளப்படுத்தலுக்கான மாதிரிகளை முன்வைப்பதன் மூலமும் அவற்றிற்கு ஆதரவு வழங்குவதன் மூலமும் செல்வந்த நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையிலான தொழில் நுட்பவியல் பங்கீட்டைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரிக்க உதவுகின்றன.

3. மனுக்குலம் இன்று சந்தியில் நிற்கின்றது. "கிறிஸ்தவ நம்பிக்கை" (Spe salvi) என்ற சுற்றுமடலில் நான் எழுதியது போன்று ஊடகங்கள் உண்மைக்குச் சார்பானவற்றை அளிக்கும் அதேவேளை முன்னர் எப்பொழுதும் இல்லாத வகையில் தீமைகளுக்குச் சார்பானவற்றிற்கு வழிதிறக்கும் நிச்சயமற்ற முன்னேற்றங்களிலும் அக்கறை கொண்டுள்ளது. (Cf No: 22) ஆகவே சுயமுன்னேற்றத்தை சீர்தூக்கிப் பாராது சுயநலத்திற்காக சமூகத் தொடர்புக கருவிகளை உபயோகிப்பது புத்திசாலித்தன-மானதா அன்றேல் அவற்றை உபயோகிப்பவர்களின் கரங்களிலேயே அவற்றை முடிவுறச் செய்வதா என்பதை நாம் கேட்க வேண்டும். அவை மனிதருக்கும் பொதுநன்மைக்காவும் சேவைகளை வழங்குகின்றன. மனிதனது ஒழுக்க உருவாக்க வளர்ச்சியிலும், மனிதனது உள்ளார்ந்த வளர்ச்சியிலும் ஈடுபடுகின்றன என்பதை நிச்சயப்படுத்துவது முக்கியமல்லவா? தனிப்பட்டவர்களதும், சமூகத்தினதும் வாழ்வில் அவற்றினது அசாதாரண தாக்கம் பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தும் இவற்றின் அடிப்படையான நுகர்வுக்கு இன்று அழுத்தம் கொடுத்தல் அவசியம். தாங்கள் வாழும் வாழ்வு இவற்றின் முழுமையான மாற்றத்திற்கு உதவக்கூடும் என்று ஒருவர் கூறக் கூடும்.

இன்று தொடர்பாடலானது சாதாரணமாக உண்மை நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உரிமை கொண்டாடுவது மட்டுமல்ல கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையில், தன்னுள்ளே கொண்டுள்ள திறமைகளையும், சக்திகளையும் உறுதிப்படுத்தவும் வேண்டும். எடுத்துக்காட்டாக சில சமயங்களில் ஊடகங்கள் செய்திகளைப் பிரச்சாரம் செய்வதற்குப் பதிலாக நிகழ்ச்சிகளை மட்டுமே உருவாக்குகின்றன என்பது தெளிவு. இத்தகைய ஆபத்து நிறைந்த மாற்றத்தைப்பற்றி திருச்சபை அதிகாரிகள் பலர் கவனம் செலுத்தியுள்ளனர். மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களிலும் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தும் உண்மை நிலைகளுடன் நாம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதால் (ஒழுக்கம், புத்தி, மதம், உறவு, அன்பு கலை) போன்றவைகளில் மனிதனது நலன் ஆபத்திற்குட்பட்டுள்ளது. தொழில் நுட்பவியலின்படி சாதகமானவைகள் ஒழுக்கவியலின்படி அனுமதிக்கப்படக்கூடியவையே. இதுமுதற்கொண்டு நவீன வாழ்வில் தொடர்பாடல் ஊடகங்களின் தாக்கம் மேலும் தாமதப்படுத்த முடியாத அளவுக்குத் தெரிவையும், தீர்வையும் வேண்டி நிற்கும் தவிர்க்க முடியாத வினாக்களை எழுப்புகின்றன.

*(தொடர்ச்சி 19ம் பக்கம்...)*

## மடுமாதாவின் திருச்சுரூபம் மீண்டும் மடுத்திருப்பதியில் வைக்கப்பட்டுள்ளது!

# திருவிழாவை நடாத்துவதற்கு ஏற்ற சூழல் தற்போது இல்லை

மடுத்திருப்பதியின் பாரம்பரியமான ஆவணித் திருவிழா இம்முறை கொண்டாடப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் மடுத்திருப்பதியை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்த முன்வராததாலும், ஆலயத்திற்கு அவசியமான திருத்த வேலைகள், உட்கட்டமைப்பு வசதிகள் போன்றவை செய்யப்பட வேண்டிய தேவையின் காரணமாகவும் இந்த முடிவு எடுக்கப் - பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடுத்திருப்பதியின் தற்போதைய நிலையில் ஆவணித் திருவிழா தொடர்பாக மன்னார் ஆயர் இல்லம் யூலை மாதம் 7ம் திகதி விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அதில் மேலும் கூறப் - பட்டுள்ளதாவது, மடுத்திருப்பதிக்கு மடு மாதாவின் திருச்சுரூபம் விரைவில் எடுத்துச் செல்லப்படும். அத்தோடு, தூய்மைச் சடங்குகள் நடத்தப்பட்டு மீண்டும் வழிபாடுகள் வழமை போன்று நடத்தப்படும்.

மடுப் பரிபாலகர் மற்றும் குருக்கள், உதவியாளர்கள் அடங்கிய குழு, நான்கு மாதங்களின் பின்னர் யூலை 6ம் திகதி அங்கு சென்றுள்ளனர். இந்த நிலையில் திருப்பதியின் சில அவசர தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதோடு, பிரதேசத்தின் உட்கட்மைப்பு வசதிகளை விருத்திசெய்ய வேண்டியுள்ளது.

மேலும், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் வேண்டுகோளுக்கமைய அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இதுவரை மடுத்திருத்தலப் பிரதேசத்தை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தவில்லை. மேற்குறித்த காரணங்களால் இம்முறை மடுத்திருப்பதியின் பாரம்பரிய ஆவணித் திருவிழாவை நடத்த முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### இந்தியாவின் முதல் பெண் புனிதை

தமது மண்ணின் மகளாகிய முத்திப்பேறு பெற்ற அருட்சகோதரி அல்போன்சா புனித நிலைபெற்று பீடத்தில் ஏற்றப்படும் திகதியாகிய ஒக்ரோபர் 12ம் நாளுக்காகக் காத்திருப்பதாக கேரளக் கத்தோலிக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் கிளறேசியன் சபையைச் சேர்ந்த இச்சகோதரியே இந்தியாவின் முதல் பெண் புனிதையாகத் திகழ்வார்.

### நீங்கள் வழங்கக்கூடிய சிறந்த பரிசு

வெளிநாட்டிலோ அல்லது உள்நாட்டிலோ உள்ள உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக்கூடிய மிகச் சிறந்த பயனுள்ள பரிசுகளில் ஒன்று அவர்களுக்கு மன்னா பத்திரிகையை அறிமுகம்செய்து வைப்பதுதான்.

உங்கள் உறவினர் .நண்பரின் முகவரியையும் உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு வருடத்திற்கான சந்தாப் பணமாக 600 ரூபாவையும் வெளிநாட்டில் உள்ளவராயின் 2500 ரூபாவையும் எமக்கு அனுப்பிவைத்தால் உங்கள் உறவினர் நண்பரின் வீட்டிற்கு மன்னா மாதாமாதம் தவறாமல் பறந்து செல்லும். (மன்னா நிர்வாகம்)

### இறைவார்த்தை ஆண்டையொட்டி மன்னார் மறைக்கல்வி நிலையம் நடாத்தும் திருவிவிலிய வினாவிடைப் போட்டி

இறைவார்த்தை ஆண்டையொட்டி மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் திருவிவிலிய வினாவிடைப்போட்டி நடாத்தப்படவுள்ளது. இதற்கு உதவியாக கீழ்ப்பிரிவு (3- 5ம் தரம் வரை), மத்தியபிரிவு (6 - 9ம் தரம் வரை) மேற்பிரிவு (10 - 13ம் தரம் வரை) ஆகிய மூன்று பிரிவினருக்குமாக முறையே 300, 750, 1000 என்ற அடிப்படையில் வினா விடைகளைக் கொண்ட மூன்று நூல்கள் வெளியிடப் - பட்டுள்ளன. எதிர்வரும் நவம்பர் மாதம் இப்போட்டிகள் இடம்பெறும்.

## மன்னார் ஆயர் இல்லத்திற்கு அமைச்சர்கள் குழு விஜயம்

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் குழு ஒன்று கடந்த யூலை மாதம் 30ம் திகதி மன்னார் ஆயர் இல்லத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

ஆயர் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த மடு அன்னையின் திருச்சுரூபத்தை வணங்கவும் மடுத்திருத்தலத்தில் மடு அன்னையின் திருச்சுரூபத்தை மீண்டும் கொண்டுசென்று மடுத்திருப்பதியில் வைப்பது தொடர்பாகவும் ஆவணித் திருவிழாவை நடாத்துவது தொடர்பாகவும் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையுடன் கலந்துரையா - டுவதற்காகவே அவர்கள் இந்த விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆயருடன் நடைபெற்ற இச்சந்திப்பின்போது அமைச்சர்களான கௌரவ பந்து பண்டார நாயக்க (சமய விவகார அமைச்சர்), மில்றோய் பெனாண்டோ (பெருந்தோட்ட முகாமைத்துவ அமைச்சர்), தயஸ் மித்த (திறமைகள் அபிவிருத்தி அமைச்சர்) சரத் குணவர்த்ன (விமான சேவைகள் பிரதி அமைச்சர்) திஸ்ஸ கரலியத்த (சிரேஷ்ட வைத்தியத்துறை அமைச்சர்), கேரத் (சமய விவகார பிரதி அமைச்சர்) ஆகிய 6 அமைச்சர்கள் கலந்துகொண்டனர். இவ்விசேட சந்திப்பில் மன்னார் அரசாங்க அதிபர் உயர்திரு ஏ. நீக்கொலஸ்பிள்ளை மற்றும் பொலிஸ் இராணுவ உயரதிகாரிகளும் மன்னார்க் குருக்களும் கலந்துகொண்டனர்.


## மடுத்திருப்பதிக்கு யாத்திரைவர மக்கள் அதிக ஆர்வம் நிபந்தனையோடுகூடிய மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி!

மடுமாதா திருத்தலத்திற்கு வருகைதர பெருமளவு மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஓகஸ்ட் மாதம் 12ம் திகதி தென்பகுதியில் இருந்து ஒரு தொகுதி யாத்திரிகர்கள் மதவாச்சி சோதனைச் சாவடியூடாகச் சென்றனர். பொலிஸ் பாதுகாப்புடன் இவர்கள் மடுவுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர். தினமும் பகலில் மட்டும் 200 பக்தர்கள் மடுவுக்கு சென்றுவர பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளதையடுத்து தெற்கில் இருந்து பெருமளவு பக்தர்கள் மடுவுக்குவர விரும்பியுள்ளதாக தெரிவிக்கப்- படுகிறது.

மடுத்தேவாலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் வழிபாடுகளை முடித்துக்கொண்டு அன்றே திரும்பி விடவேண்டும் என நிபந்தனையும் விதிக்கப் பட்டுள்ளது. பக்தர்கள் மன்னார் - மதவாச்சி வீதியூடாகச் சென்று மடு றோட் சந்தி - மடு வீதியால் மடுவுக்கு செல்ல வேண்டும். இதற்காக மடு றோட், மடு வீதியும் திறக்கப்பட்டுள்ளது.

மதவாச்சி சோதனை நிலையத்தில் மடுவுக்கு செல்லும் பக்தர்கள் காலை 6.00 மணிக்கு சமூகமளிக்க வேண்டும் எனவும், காலை 8.00 மணிக்கு சோதனை முடிவடைந்து மடுவுக்குச் செல்லலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மடுவில் நடைபெறும் வழிபாடுகளின் பின்னர் 2.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உதய நாயக்கா அறிவித்துள்ளார்.

## முருங்கன் புனித இயாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா





முருங்கன் புனித இயாகப்பர் ஆலய நூற்றாண்டு விழா (1908 - 2008) கடந்த யூலை மாதம் 25ம் திகதி புனித இயாகப்பர் ஆலய விழாவோடு இணைந்ததாக நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக இவ்விழாவில் கலந்துகொண்டார். திருவிழாத் திருப்பலி முடிவில் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.

## கிளாறாட் சபை ஸ்தாபகரின் 200வது பிறந்தநாள் நிகழ்வுகள்

### உலகிலும் இலங்கையிலும் இச்சபையினரின் பணிகள்

### – ஓர் பார்வை –

கிளாறாட் துறவற சபை ஸ்தாபகர் தூய அந்தோனி மரிய கிளாறாட்டின் 200வது அகவை இவ்வாண்டு கொண்டாடப்படுகின்றது. ஸ்பெயின் நாட்டில் 1807ஆம் ஆண்டு டிசம்பர் 24ம் திகதி தூய மரிய கிளாறாட் பிறந்தார். "நான் நரகத்தின் வாயிற்காப்போனாக நிற்பேன். அங்கு செல்ல ஒருவரையும் அனுமதிக்க மாட்டேன்" என்ற உறுதிப்பாட்டை இவர் தனது சிறுபராயத்திலேயே கொண்டிருந்தார்.

1835ம் ஆண்டு யூன் மாதம் 13ம் திகதி இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1849ம் ஆண்டு இவர் கிளாறட் துறவற சபையை நிறுவினார். 1870ம் ஆண்டு ஒக்ரோபர் 24ம் திகதி இவர் இறைவனடி சேர்ந்தார். 1926ம் ஆண்டு திருத்தந்தை 11ம் பத்திநாதர் இவரைக் குறித்துக் கூறும்போது "இவர் உண்மையில் நவீன காலத்தின் திருத்தூதுவராக வாழ்ந்தவர்" என்று உரைத்துள்ளார். 1950ம் ஆண்டு மே மாதம் 7ம் திகதி திருத்தந்தை 12ம் பத்திநாதரால் இவர் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

இறைவார்த்தையை அறிவிப்பதையே தமது தார்மீக அழைப்பாக உணரும் இத்துறவற சபை இந்த 200வது ஆண்டு நிகழ்வுகளின் மையப்பொருளாக "நற்செய்தி அறிவிக்கவே நீ பிறந்தாய்" என்னும் தமது ஸ்தாபகரின் அறைகூவலைத் தேர்ந்தெடுத்துள்ளது. அருள்தரும் இந்த யூபிலி ஆண்டில் இச்சபை தனக்குள் பல புதுப்பித்தல்களை மேற்கொண் - டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

70ற்கும் மேற்பட்ட நாடுகளில் தன்னுடைய நற்செய்திப் பணியை முன்னெடுத்துச் செல்லும் இச்சபையில் தற்போது 19 ஆயர்களும், 2038 குருக்களும், 03 தியாக்கோன்களும், 209 அருட்சகோதரர்களும், 685 துறவு மாணவர்களும் 122 நவசந்நியாசிகளும் உள்ளனர்.

இலங்கையில் இச்சபை குறுகிய காலத்தில் துரித வளர்ச்சி கண்டுள்ளது. இந்தியாவிலும் பிலிப்பைன்ஸ் நாட்டிலும் தங்களது கல்வியை நிறைவுசெய்துகொண்ட எட்டு அருட் - சகோதரர்கள் 1991ம் ஆண்டு முதல் படிப்படியாக குருக்களாக அருட்பொழிவு பெற்று இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இன்று இவர்களில் 12 சுதேச குருக்களும் நான்கு இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட குருக்களும் பணியாற்றுகின்றார்கள். அதேபோன்று பதினெட்டுத் துறவற மாணவர்கள் தமது பயிற்சியை பல்வேறு நிலைகளில் பெற்றவண்ணம் உள்ளனர்.

இலங்கைத் திருச்சபைக்கு இவர்களின் பங்களிப்புகளாக பங்குத்தளப் பணிகள், மறையுரைகள், தியான உரைகள், புத்தக வெளியீடுகள், சுனாமி பாதிப்பு உதவிகள், யுத்த பாதிப்பு உதவிகள், இளையோர் சிறுவர் வழிகாட்டல்கள், சமாதான முயற்சிகள், அசிப்பா செயற்பாடுகள் போன்ற பல பணிகளைச் செய்து வருகின்றனர்.

விசேடவிதமாகப் பின்தங்கிய கிராமப்புற பங்குகளைப் பொறுப்பேற்று சகல வழிகளிலும் அப்பங்கை முன்னேற்றமடையச் செய்தபின் மீள மறைமாவட்டத்திடம் ஒப்படைக்கின்றனர். தமது சபை ஸ்தாபகரின் 200வது அகவையைக் கொண்டாடும் கிளாறாட் சபையினருக்கு 'மன்னா' தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்படும்

# கிறிஸ்தவ இலக்கிய விழா நிகழ்வுகள்

மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்படும் கிறிஸ்தவ இலக்கிய விழா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவையொட்டி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் மறைக்கல்வி மாணவர்களுக்கான பாடல், பேச்சு, கட்டுரை, நாடகப் போட்டிகள் பங்கு, மறைக்கோட்டம், மறைமாவட்டம் ஆகிய நிலைகளில் நடாத்தப்பட்டன.

தேசிய மட்டத்திலான போட்டிகள் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் 6ம் 7ம் திகதிகளில் கொழும்பு மருதானை சென். ஜோசப் கல்லூரியில் இடம்பெறும்.

### எதிர்பாருங்கள்


மன்னார் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட கிறிஸ்தவ இலக்கிய விழாப் போட்டிகளின் மறைக்கோட்ட - மறைமாவட்ட ரீதியிலான முடிவுகளை அடுத்த மன்னா இதழில் எதிர்பாருங்கள்!

## திருக்குடும்ப சகோதரிகளின் நித்திய அர்ப்பணம்

திருக்குடும்ப சபை யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரிகளான மில்றெட் சந்தியாப்பிள்ளை (நானாட்டான்) லூமினா ஜோர்ஸ் (மண்டைதீவு/தற்காலிகமாக முழங்காவில்) யூடினா செல்வநாயகம் (வவுனியா) மரியமலர் ஆரோக்கியம் (முழங்காவில்) சுபாஜினி ஞானப்பிரகாசம் (முல்லைத்தீவு) ஆகியோர் கடந்த 02.07.2008 வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் தமது நித்திய அர்ப்பணத்தைச் செய்தனர்.

அருட்தந்தை ஞா. அற்புதராஜா (அமதி) அவர்கள் நித்திய அர்ப்பணக் கூட்டுத்திருப்பலிக்கு தலைமை தாங்கினார். இந்த அருட்சகோதரிகளின் பெற்றோர், உறவினர், பங்குமக்கள், குருக்கள், துறவியர் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். "இறைவனுக்கு மாத்திரமே மகிமை" என்னும் தமது விருதுவாக்கிற்கேற்ப இவர்கள் தமது வாழ்விலும், பணியிலும், "இறை மகிமை" ஒன்றையே தேடவும் "எங்கும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்தும்" தமது ஆன்மீகத்தில் ஆழ வேரூன்றவும்" அருள்வேண்டி மன்னா வாசகர்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம்.

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்



## கிறிஸ்துவுக்காகத் தமது இன்னுயிரை அர்ப்பணித்த புனித இயாகப்பரின் தியாகம் விசுவாச வாழ்வுக்கு உயிரூட்டுகிறது

### புனித இயாகப்பர் திருவிழாவில் சுரேந்திரன் றெவல் அடிகளார்

கிறிஸ்துவுக்காகத் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த திருத்தூதரான புனித இயாகப்பரின் தியாகம் எமது விசுவாச வாழ்வுக்கு உயிரூட்டுகிறது என கடந்த 25.07.2008 அன்று தோட்டவெளி யோசவ்வாஸ் நகர் ஆலயத்தில் நடைபெற்ற புனித இயாகப்பர் திருவிழாவின்போது மறையுரையாற்றிய மன்னார் ஆயரின் செயலர் அருட்பணியாளர் சுரேந்திரன் றெவல் (சுரேஸ்) அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அங்கு அவர் மறையுரை ஆற்றுகையில்; புனித இயாகப்பர் கிறிஸ்துவின் துன்பக்கிண்ணத்தைப் பருக முன்வந்தவர். கிறிஸ்துவை அறிவிப்பதில் துன்பங்களையும் வாதைகளையும் சுமந்து கிறிஸ்துவுக்காக மரணித்தவர். போர்ச்சூழலில் பல இன்னல்கள் மத்தியில் வாழும் நாமும், போரில் சிக்குண்டு தவிக்கின்ற எமது மக்களும் விசுவாச வாழ்வில் உறுதியாகவும் இறைவனின் பாதுகாப்பில் அமைதி வாழ்வைப் பெறவும் புனிதர் மூலமாக இறைவனின் அருளாசியை வேண்டுவோம் என்றார்.



விடத்தல்தீவில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனித இயாகப்பரின் வருடாந்த திருவிழாவை விடத்தல்தீவிலிருந்து இடம்பெயர்ந்து தோட்டவெளி யோசவ்வாஸ் நகரில் வசிக்கும் விடத்தல்தீவு மக்கள் அண்மைய ஆண்டுகளில் வருடாவருடம் கொண்டாடி வருகின்றனர். இவ்விழாவை தோட்டவெளிப் பங்குத்தந்தை அருட்பணியாளர் யூட் குரூஸ் அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

### அளவக்கையில் இறைவார்த்தை முழக்கம்

அளவக்கைப் பங்கில் இறைவார்த்தையை மையப்பொருளாக வைத்து இறைவார்த்தை முழக்க நாள் கடந்த யூலை மாதம் 20ம் திகதி காலை 9.00 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகியது.

ஆரம்ப உரையை முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும் அளவக்கைப் பங்குத் தந்தையுமான டெஸ்மன் குலாஸ் அடிகளார் நிகழ்த்தினார். ஞானோதயம்கல்வி நிறுவனத்தின் பயிற்சி இணைப்பாளர் அருட்பணியாளர் ஸ்ரனி அடிகளார் இந்த இறைவார்த்தை முழக்க நிகழ்வை நெறிப்படுத்தினார். இதில் 80கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றுப் பயன் அடைந்தனர்.

### அளவக்கையில் இளைஞர் கருத்தமர்வு

கடந்த யூலை மாதம் 18ம் திகதி மாலை 6.00மணி தொடக்கம் 19ம் திகதி மாலை 3.00 மணி வரை அளவக்கைப் பங்கில் இளைஞர் யுவதிகளுக்கான கருத்தமர்வு இடம்பெற்றது. இதில் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த 100ற்கும் அதிகமான இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர்.

வவுனியாக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. பேனாட் அவர்களும் அவரது குழுவினரும் இக்கருத்தமர்வை நடாத்தினார்கள். இந்நிகழ்வை இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் இயேசுராஜா அடிகளார் ஒழுங்கமைத்திருந்தார்.

## பங்குத்தளங்களின் செய்தித் துளிகள்!

### பம்பைமடுப் பங்கில் திருவிவிலியப் பவனி

இறைவார்த்தை ஆண்டைச் சிறப்பிக்கும் முகமாக பம்பைமடுப் பங்கில் கடந்த 15.06.2008 அன்று திருவிவிலியப் பவனி இடம்பெற்றது.

பம்பைமடுப்பங்கின் பிரதான ஆலயமாகிய வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து காலை 6.45 மணியளவில் ஆரம்பமாகிய இப்பவனி ஏறக்குறைய மூன்றரை கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள தவசிகுளம் புனித செபஸ்தியார் ஆலயத்தினை சென்றடைந்தது. தொடர்ந்து அருட்பணி. ஸ்ரீபன் றாஜ் அடிகளார் தலைமையில் ஞாயிறு திருப்பலி இடம்பெற்றது. இப்பவனியில் பல மக்கள் பங்கேற்று பயனடைந்தனர். மன்னார் மறைமாவட்டத்தில் இடம்பெற்ற முதலாவது திருவிவிலியப் பவனி இது என்பது குறிப்பிடத்தக்கது.

### பம்பைமடுப் பங்கில் இறைவார்த்தைக் கருத்தமர்வு

பம்பைமடுப் பங்கில் இறைவார்த்தை ஆண்டையொட்டிய இறைவார்த்தைக் கருத்தமர்வு கடந்த 07.06.2008 அன்று நடைபெற்றது இதில் 40ற்கும் அதிகமான பக்திச்சபை உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இக்கருத்தமர்வை ஞானோதய ஆன்மீகக்கல்வி இயக்குனர் அருட்பணி. ஸ்ரனி அன்ரனி (அமதி) அவர்களும் அவருடன் வருகை தந்து பொதுநிலையினரும் நடாத்தினார்கள்.

### மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம்

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம் கடந்த யூலை மாதம் 6ம் திகதி தொடக்கம் 11ம் திகதி வரை மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.


தமிழ் நாட்டில் உள்ள சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு சூசைமாணிக்கம் ஆண்டகை அவர்கள் இத்தியானத்தை வழிநடாத்தினார். மேதகு மன்னார் ஆயர் உட்பட மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துக் குருக்களும் இதில் பங்கேற்றனர்.

### உயர்தர மாணவர்களுக்கான 'வாழும் கலை' பயிற்சி

மன்னார் நகரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கான 'வாழும் கலை' பயிற்சி அமதிகளின் ஆன்மீகக் கல்வி மையமான ஞானோதயத்தினால் நடாத்தப்பட்டது.

கடந்த யூன் மாதம் 21ம் திகதி மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்ற இக்கருத்தமர்வானது ஞானோதயப் பயிற்சி இயக்குனர் அருட்பணி. ஸ்ரனி அன்ரனி அடிகளின் நெறிப்படுத்தலில் வளவாளரான அருட்சகோதரி றெஜி அவர்களின் வழிநடத்தலில் நடாத்தப்பட்டது. ஏறக்குறைய 40 மாணவர்கள் இதில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### பம்பைமடுப் பங்கில் நடைபெற்ற விவிலியக் கண்காட்சி நிகழ்வு



இறைவாரத்தை ஆண்டையொட்டி பம்பைமடுப் பங்கில் கடந்த மே மாதம் 24ம் 25ம் திகதிகளில் நடைபெற்ற விவிலியக் கண்காட்சியை மன்னார் மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகளுக்கான இயக்குனர் அருட்பணியாளர் நேசன் அடிகளார் திறந்துவைக்கிறார். அருகில் பம்பைமடுப் பங்குத்தந்தை அருட்பணி. அன்ரன் மற்றும் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. அசிசி ஆகியோர் காணப்படுகின்றனர். இக்கண்காட்சியை 2000ற்கும் அதிகமானவர்கள் பார்த்து பயனடைந்தனர்.

## மாண்புறும் மண்ணின் மைந்தவர்கள்

### கிராம சேவையாளர் இராதா அவர்கள் நிர்வாக உத்தியோகஸ்தராகப் பதவி உயர்வு



மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட, தற்போது மன்னார் எஸ்பிளேற் வீதியில் வசித்துவரும் 'ராதா ஜி.எஸ்.' என அனைவராலும் அன்பாக அறியப்படும் திரு. செபமாலை அந்தோனிதாசன் பெர்ணாண்டோ அவர்கள் கிராம அலுவலர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்றுள்ளார். தற்போது இவர் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் மன்னார் பிரதேச செயலகத்தில் பதவி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

1984ம் ஆண்டு விசேட சேவை உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் 1987ல் கிராம அலுவலராக உள்ளீர்க்கப்பட்டு 2002ல் தரம் ஒன்று கிராம அலுவலராக பதவி உயர்வுபெற்றார். 2006ம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் சேவையின் அதி உயர் தர (சுப்ரா) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட முதலாவது உத்தியோகத்தர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய ஆண்கள் தோழமைக்குழு உறுப்பினராகவும் வழிபாட்டுக்குழுகுவின் உறுப்பினராகவும் இருந்து ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

நாட்டுகூத்து, நாடகம், வில்லுப்பாட்டு, திருப்பாடுகளின் காட்சி போன்றவற்றில் கலைஞராகவும், நடிகராகவும் இருந்ததுடன், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வு - களின் நிகழ்ச்சித் தொகுப்பா - ளராகவும், அறிவிப்பாளராகவும் இருந்து கலைச் சேவையும் புரிந்து வருகிறார்.

அகில இலங்கை சமாதான நீதவான், வடக்கு கிழக்கு மாகாண தாய்ச்சங்கத்தின் மன்னார் மாவட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்க கிளைச் செயலாளர், மன்னார் நகர பிரதேச நலன்புரிச் சங்க செயலாளர் போன்ற பதவிகளை வகித்து சமூக சேவைப் பணிகளிலும் இவர் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தின் புகழ்பூத்த முதன்மைக் கல்லூரியான புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பழைய மாணவரும், அப்பாடசாலையின் தற்போதைய அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினருமாவார். இவர் தொடர்ந்தும் தனது பல்துறைப் பணிகளை சிறப்பாகச் செய்ய மன்னா பத்திரிகை வாழ்த்தி நிற்கின்றது.

## சமாதான நீதவானாக நியமனம்



உயிலங்குளம் பங்கு சிறுநீலா சேனையைச் சேர்ந்த திரு. திருமதி யேசுதாசன் அந்தோனி -யம்மா தம்பதிகளின் புதல்வன் திரு. றொபேட் புறூஸ் கிங்ஸ்லி அவர்கள் மாவட்ட சமாதான நீதிவானாக கடந்த 03.07.2008ல் வவுனியா மாவட்ட நீதிபதி திரு. எச். வை. எம். இர்ஷான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் மன் /புனித சவேரியார் தேசிய கல்லூரியின் பழைய மாணவரும், உயிலங் - குளம் பங்கு மேய்ப்புப்பணிச் சபையின் முன்னாள் செயலாளரும், மன்னார் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையப் பொது முகாமையாளரும், சிறுநீலாசேனை புனித யாகப்பர் ஆலயசபை செயலாளரும் சிறந்த சமூக சேவையாளருமாவார். இவரை மன்னா பத்திரிகை வாழ்த்திப் பாராட்டுகின்றது.

## கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்தில் யாத்திரிகர்களுக்கான கட்டிடம்



கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்தில் யாத்திரிகர்களுக்கான கட்டிடம் ஒன்று கோமரசன் குளம் பங்குத்தந்தை அ. சகாயநாதன் அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு வவுனியா பிரதேச செயலாளர் செல்வி. துரைசாமி அவர்களால் கடந்த 11.05.2008 அன்று திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டிடத்திற்கான நிதியாக 15 இலட்சம் ரூபா "கமநகும" வேலைத்திட்டத்தின்கீழ் பிரதேச செயலாளர் செல்வி. துரைச்சாமி அவர்களால் ஒதுக்கப்பட்டது.



பங்கு மக்களின் ஒத்துழைப்பால் 2 இலட்சம் ரூபா பெறுமதியான சிரமதான வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கட்டிடத்திற்கான அடிக்கல் சென்ற ஆண்டு ஆவணி மாதம் 24ம் திகதி பிரதேச செயலாளர் மற்றும் பங்குத்தந்தை ஆகியோரால் நாட்டப்பட்டது. இக்கட்டிடம் ஐந்து மாதங்களில் கட்டி முடிக்கப்படவேண்டுமென கேட்கப்பட்டது. இடைநடுவில் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இந்நிதி நிறுத்தப்பட்டது. இருந்த போதிலும் வவுனியா பிரதேச செயலாளரின் கடின முயற்சியால் இந்நிதி திரும்பப் பெறப்பட்டு பங்கு மக்களின் ஒத்துழைப்போடும் பங்குத்தந்தையின் ஊக்கத்தோடும் முழுவேலையும் துரிதகெதியில் சிறப்பாக செய்து முடிக்கப்பட்டது.



கல்வாரித் திருத்தலத்தில் யாத்திரிகள் தங்கி ஆறுதல் அடைய ஒரு மண்டபம் தேவை என்பதை பங்குத்தந்தை பிரதேச செயலாளரிடம் பரிந்துரை செய்திருந்தார். அதற்கமைவாகவே இக்கட்டிடத்திற்கான நிதி வழங்கப்பட்டது. பிரதேச செயலாளர் செல்வி துரைசாமி அவர்களுக்கு பங்குத்தந்தையும் பங்கு மக்களும் நன்றி தெரிவிக்கின்றனர். - *திருமதி. திலீபன் றஜனி*

# இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

## தூய பவுலின் வாழ்வு, பணி, இறையியல், ஆன்மீகம் போன்றவை திருச்சபையினுடைய வாழ்வுக்கும், பணிக்கும் உந்துசக்திகளாகும்

### தூய பவுலின் ஆண்டையொட்டி வெளியிட்ட திருமடலில் யாழ் ஆயர்

தூய பவுலின் வாழ்வு, பணி, இறையியல், ஆன்மீகம் மற்றும் அவரது கடிதங்கள், பயணங்கள் போன்றவை திருச்சபையினுடைய வாழ்வுக்கும், பணிக்கும் உந்துசக்தியாகவே இருந்து வருகின்றன. இவைகள் எமக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிசங்களே என யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார். தூய பவுலின் ஆண்டையொட்டி அவர் வெளியிட்டுள்ள திருமடலிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அம்மடலில் அவர் கூறியிருப்பதாவது; தூய அன்னையாம் திருச்சபை யூன் மாதம் 28ம் திகதி 2008ம் ஆண்டிலிருந்து யூன் மாதம் 28ம் திகதி 2009ம் ஆண்டுவரையான காலப்பகுதியை தூய பவுலின் ஆண்டாக நினைவுகூர்ந்து கொண்டாட விழைகின்றது.

தூய பவுலின் பிறப்பின் 2000மாம் ஆண்டென வரலாற்று ஆசிரியர்கள் தரும் சான்றிற்கேற்ப அனைத்துலகத் திருச்சபை தூய பவுலின் வாழ்வு, பணிக்காக இறைவனுக்கு நன்றிகூறி கொண்டாடுவதும் அவர் எமக்களித்த அரும்பெரும் செல்வங்களைத் தொடர்ந்து பெற்றுக்கொள்வதும் இன்றியமையாததாகும்.

பல்வேறுவிதமான வழிபாட்டு, கலாசார நிகழ்வுகள் உலகளாவிய ரீதியாக இதையொட்டி நிகழ்கின்றபோது, எமது தலத்திருச்சபையும் இக்கொண்டாட்டத்தில் இணைந்து பயன் அடையுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தூய பவுலின் வாழ்வு, பணி, இறையியல், ஆன்மீகம், மற்றும் அவரது கடிதங்கள், பயணங்கள், திருச்சபையினுடைய வாழ்வுக்கும், பணிக்கும் உந்துசக்தியாகவே இருந்து வருகின்றன. இவைகள் எமக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிசங்களே.


எனவே இப்புனிதமான ஆண்டிலே எமது மறைமாவட்டத்திலேயுள்ள குருக்கள், துறவிகள், இறைமக்களாகிய நீங்கள் அவரது எழுத்துக்களிலேயுள்ள ஆழமான உண்மைகளை பின்வரும் செயற்திட்டங்கள் வழியாக பெற்றுக் கொள்ளவேண்டுமென அன்போடு அழைக் - கின்றேன். பங்கிலே நீங்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு மறைக்கல்வி, திருவழிபாட்டு நிலையங்கள் உதவி செய்யும்.

♦ புனித பவுலின் பணி மற்றும் அவரது மடல்களில் பொதிந்திருக்கும் இறையியல் பற்றி பல்வேறு மட்டங்களில் வகுப்புக்களையும் கருத்தமர்வுகளையும் நிகழ்த்துதல்.

♦ மறைக்கல்வி நிலையத்தால் நிகழ்த்தப்படும் மாணவர்களுக்கான வினாடி வினாப்போட்டி குறுக்கெழுத்துப் போட்டி மூலம் தூய பவுலின் மடல்களைப்பற்றி அறிதல்.

♦ மறைக்கல்வி நிலையத்தால் நிகழ்த்தப்படும் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளில் மாணவர்கள் மற்றும் பங்கு மக்களை பங்குபற்றத் தூண்டுதல்.

♦ தூய பவுலின் வாழ்வு, அழைப்பு, மறைப்பயணங்கள், ஆன்மீகம் சம்பந்தமான தொகுப்பறிவூட்டல் (Symposium) நிகழ்வில் மாணவர்கள், பக்திச் சபையினர் துறவற சபையினர் பங்குபற்றி பயன்பெற ஊக்குவித்தல்.



♦ பங்கு மட்டங்களில் கண்காட்சிகள், கலைநிகழ்வுகள், போட்டி நிகழ்வுகளை பங்குச்சபையினருடன் முன்கூட்டியே திட்டமிட்டு நடத்துதல். இதற்கு ஆணைக்குழுக்களின் உதவியையும் நாடல்.

இறுதியாக பலவிதமான சவால்களுக்கு முகம் கொடுத்து, துன்ப வேதனைகளை பல வடிவங்களில் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற எமக்கு சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை வாழ்வின் மையமாகக் கொண்டு வாழ்ந்த தூய பவுலின் ஆண்டுச் செயற்பாடுகள் அர்த்தம் நிறைந்ததாகவும், நம் மீட்பர் எமக்களித்த சமாதானத்தை உள்ளூர அனுபவிக்கின்ற கொண்டாட்டமாகவும் அமையவேண்டுமென்று ஆசிக்கின்றேன்.

## கிளி/முல்லை மறைக்கோட்டத்தில் அமைதியின் அரசிக்கு ஒரு சிற்றாலயம்



கிளிநொச்சி, செல்வநகர் கிராமத்தில், கத்தோலிக்க, இந்துமத சகோதரர்களின் பூரண ஒத்துழைப்போடு கட்டி முடிக்கப்பட்ட 'அமைதியின் அரசி' சிற்றாலயம் உலக அமைதி தினமாகிய கடந்த ஆகஸ்ட் திங்கள் 06ம் நாளன்று திறந்துவைக்கப்பட்டது. பங்குத்தந்தை அருட்பணியாளர் சரத் ஜீவன் தலைமையில் கிளி / முல்லை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. ஏ. எவ். பெனற் அடிகளாரால் இப்புதிய ஆலயம் திருப்பொழிவு செய்து திறந்துவைக்கப்பட்டது. "அமைதியின் அரசி" திருவிழாவும் திருச்சுரூபப் பவனியும் திரிதின வழிபாடுகளுடன் ஆகஸ்ட் திங்கள் 22ம் நாள் இடம்பெற இருக்கின்றன.

கன்னி மரியா, "அரசி" என்ற பிரகடனத்தை, திருத்தந்தை 12ம் பத்திநாதர் 11.10.1956ல் நிலைநாட்டினார். "திருச்சபை தொடக்கத்தி-லிருந்தே, அன்னை மரியாவை "அரசி" என்று விசுவசித்து வந்திருக்கிறது! .... அவரே மனுக்குலத்தின் நம்பிக்கை! திருச்சபை வெற்றிபெறவும், கிறீஸ்தவ அமைதி நிலவவும் அவரே துணைபுரிய வேண்டும். அனைவரும் இருளில் ஒளியையும், துன்பதுயரங்களில் ஆறுதலையும் இவர் வழியாக தேடியடைவோம். பாவ அடிமைத்தனங்களில் இருந்து தங்களை விடுவித்தால், தாங்கள் கேட்ட காரியங்களை அடைவர். இந்த அன்னை உண்மையாகவே நமது அரசி. அமைதியைப் பெற்றுத் தருபவர் - எனத் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

*எஸ். ஏ. நாதர் (நிரந்தர மறையாசிரியர்)*

## திருச்சபை வரலாற்று அறிஞர் பேணியோலா அடிகளார் 95வது வயதிலும் ஆய்வு செய்கிறார்!

'இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாறு' (The Catholic Church in Sri Lanka) என்ற புகழ்பெற்ற தொடர் நூல்களை (Volumes) வெளியிட்ட திருச்சபை வரலாற்று ஆய்வறிஞர் அருட்தந்தை வி. பேணியோலா அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்து யாழ் ஆயர் இல்ல ஆவணக் காப்பகத்தில் ஆய்வு முயற்சியை மேற்கொண்டிருந்தார். அவ்வேளையில் பாதுகாவலன் பத்திரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணலில் பல்வேறு சுவாரஸ்யமான தகவல்களை அவர் வெளியிட்டார்.

தனது யாழ் விஜயத்திற்கான காரணத்தைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, "இலங்கைத் திருச்சபையின் வரலாறு என்ற எனது நூல் தொடரின் 18வது நூலை விரைவில் வெளியிடவுள்ளேன். அது யாழ் திருச்சபை பற்றியதாக அமையவுள்ளது. சில தகவல்களை கொழும்பிலும், றோமாபுரியிலும் பெற்றுவிட்டேன். இருப்பினும் நேரடியாக இங்கு வந்து பார்த்து சில தகவல்கள் பெற வேண்டியிருந்தமையால் இங்கு இந்த ஆய்வைச் செய்துவருகிறேன்."

"போரின் காரணத்தினால் அழிவுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் பயன் தரும் பல ஆவண அறிக்கைகளை ஆவணக் காப்பறையில் பெறக்கூடியதாக இருக்கின்றது. இங்கிருந்து குருக்களும் ஆயர்களும் றோமாபுரிக்கு அனுப்பிவைத்த கடிதங்கள் ஊடாகவும், 1876ம் ஆண்டுப் பகுதியில் வெளிவந்த சத்தியவேத பாதுகாவலன் ஊடாகவுமே தகவல்களைப் பெறமுடிகின்றது என்றார்.

யாழ்ப்பாண மக்களின் கலாச்சாரம் பற்றி அவர் குறிப்பிடும்போது, "இவர்கள் ஜேர்மனிய நாட்டு மக்களை ஒத்தவர்கள். கடின உழைப்பாளிகள், சிறிய மூலவளத்தைக் கொண்டு பல சாதனைகளையும், உற்பத்திகளையும் மேற்கொள்ளக்கூடியவர்கள். விடாமுயற்சி உடையோர். இவர்கள் இலகுவில் மனம் சலித்துப் போகமாட்டார்கள்" என்றார்.

எப்போதும் சிரித்த முகத்துடனும் ஆன்மீகப் பொலிவுடனும் 95 வயதில் ஆரோக்கியமாக இருக்கிறீர்களே அதன் மர்மம்தான் என்ன என்று கேட்கப்பட்டபோது, "நேரத்திற்கு இரவில் படுக்கச்செல்வேன். எதிர்மறையான விடயங்களை எனது சிந்தனைக்கு எடுத்துக்கொள்ள மாட்டேன். இதுவே எனது இளமையின் இரகசியம்" என்றார். இயேசுசபைக் குருவாகிய இவர், பிறப்பால் இத்தாலி நாட்டவர். "18வது நூல் எழுதுகிறேன். அது யாழ்ப்பாணம் பற்றியதாக அமைகின்றது. எனது 19வது நூல் கொழும்புத் திருச்சபை பற்றியதாக அமையும் அதற்கு வேண்டிய உடல் ஆரோக்கியம் கிடைக்க மன்றாடுகிறேன்" என்றார் அடிகளார்.

# செய்திகள் சில வரிகளில் ...

### பேரவை உறுப்பினராக மீண்டும் யஸ்ரின் அடிகளார்

யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக அருட்கலாநிதி யஸ்ரின் பி. ஞானப்பிரகாசம் அடிகளார் பல்கலைக்கழக மானியக் குழுவினால் மீண்டும் தெரிவாகியுள்ளார். 1997ஆம் ஆண்டு முதல் இவர் பேரவை உறுப்பினராக இருந்து பணிபுரிந்து வருகின்றார். புதிய பணிக்காலம் அடுத்த 3 வருடங்களாக அமையவுள்ளது. ஏற்கனவே இவர் யாழ் மறைமாவட்ட குருமுதல்வராகவும், புனித வளன் அச்சக முகாமையாளராகவும் பணி - யாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### இறையியலகத்தில் பட்டமளிப்பு விழா

புனித யோசவ்வாஸ் தேவா தர்மா நிகர்தன்யா சிங்கள - தமிழ் இறையியலகத்தில் இறையியல் கல்வியைப் பூர்த்திசெய்த 28 மாணவர் - களுக்கான பட்டமளிப்பு நிகழ்வு கடந்த மே மாதம் 8ம் திகதி நீர்கொழும்பு கர்தினால் கூறே நிலையத்தில் இடம்பெற்றது. கொழும்பு பேராயர் மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

### புனித அந்தோனியார் பற்றிய நூல் வெளியீடு

"பதுவைப் புனிதர் அந்தோனியாரின் வரலாற்றுச் சுருக்கமும் அற்புதங்களும் - தொகுப்பு" என்னும் தலைப்பில் ஓர் நூல் ஓய்வுபெற்ற ஆசிரியர் சு. அடைக்கலம் (தமிழமுதன்) அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. நூற்றுமுப்பது பக்கங்களை கொண்ட இந்நூல் கத்தோலிக்கர்கள், பிறசமய சகோதர சகோதரிகள், மறை உரையாளர்கள் போன்றோர் புனிதரைப் பற்றி அறியத் துணை புரியும். இந்நூலின் முதல் பிரதி யாழ் ஆயர் அவர்களுக்கு பாசையூர் புனித அந்தோனியார் திருவிழாவின்போது வழங்கப்பட்டது.

### மனக்காயங்களை ஆற்றும் குணமாக்கல் வழிபாடு

யாழ் மறைமாவட்டத்தின் துறவியர் திருமட சார்பற்ற சபைகளுக்கான மறைமாவட்ட ஆணைக்குழுவினால் *'மனக்காயங்களை ஆற்றும் இயேசுவை சந்திப்போம்'* என்ற தலைப்பிலான சிறப்பு வழிபாடு கடந்த யூலை மாதம் 19ம் திகதி பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தலத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பகல் 1.00 மணிவரை இடம்பெற்றது.

### ஆயர் தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை

யாழ் மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம் ஒழுங்குசெய்த ஆயர் தியோகுப்பிள்ளை அறக்கொடைப் பேருரை கடந்த 28.07.2008 அன்று மாலை 3.30 மணிக்கு யாழ் அச்சக வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. இப்பேருரைத் தொடரின் முதலாவது பேருரையினை அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளார் நிகழ்த்தினார். 'பாலம் அமைத்த பணியாளன்' என்னும் தலைப்பில் இப்பேருரை இடம்பெற்றது.

### அசோகா விருது பெற்ற கத்தோலிக்க குரு

அருட்பணி. நந்தனமனத்துங்க கண்டி மனித உரிமைகள் அலுவலகத்தின் இயக்குனராக இருந்து செயல்பட்டு வருகிறார். அசோகா சமூக சேவைகள் விருது பெற்ற பதினொருவரில் இவரும் ஒருவராகக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அசோகா இயக்கம் 1980ம் ஆண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டது. உலக - மெங்கிலும் 60 நாடுகளில் 1800ற்கும் மேற்பட்டவர்களை அசோகா தெரிந்தெடுத்துள்ளது. இவர்கள் கல்வி, சுற்றுச் சூழல், சுகவாழ்வு, மனித உரிமைகள், பொருளாதார முன்னேற்றம், நகர முன்னேற்றத்தில் பங்குபற்றல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அருட்தந்தை நந்தனமனத்துங்க மனித உரிமை விவகாரங்களிலும் மற்றும் வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் பலவித வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

### அங்கிலிக்கன் ஆயரின் யாழ்ப்பாண விஜயம்

கொழும்பு அங்கிலிக்கன் பேராயர் டிலிப் டி சிக்கேரா யாழ் அங்கிலிக்கன் சபையின் உறுதிப் பூசுதல் சடங்கிற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்தார். யாழ்ப்பாணத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களை ஆயர் இல்லத்தில் சந்தித்தார். யாழ்ப்பாணத்திற்கான சமாதான நல்லெண்ணக் குழுவினருடனும், கத்தோலிக்க குருக்கள் துறவிகளுடனும் அவர் சந்திப்புக்களை மேற்கொண்டு யாழ் நிலவரங்களைக் கேட்டறிந்தார்.

'நேஸன்' பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் திரு. கீர்த்தி றொயற் அண்மையில் ஆயுததாரிகளால் தாக்கப்பட்டமைக்கும், பத்திரிகையாளர்கள் பலர் தாக்கப்படுவதையும் தாம் கண்டிப்பதாக அறிக்கை விடுத்துள்ளார்.

## வெள்ளை வான் கடத்தல்காரரிடமிருந்து இளைஞன் ஒருவரைக் காப்பாற்றியமைக்காக அலெக்ஸ்சாண்டர் அடிகளாருக்கு தங்க விருது



அருட்தந்தை அல்பிரட் அலெக்சாண்டர் (எஸ்.எஸ்.எஸ்) அவர்கள் யூன் மாதம் 4ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் டாக்டர் பீற்றர் கைஸ் முன்னிலையில் சமாதானத்திற்கான தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 16ம் திகதியன்று கொழும்பு கடற்கரைத் தெருவில் ஆறு பேர் கொண்ட வெள்ளை வான் கடத்தல்காரர்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சொந்த முகவரியாகக் கொண்ட இளைஞன் ஒருவரைக் கடத்த முற்பட்டவேளை தானும் அவர்கள் வாகனத்தில் ஏறியமர்ந்து அவர்களோடு வாதாடி அவ்விளைஞனை மீட்டமையால் தன்னுயிரைப் பணயம் வைத்து அந்த இளைஞனைக் காப்பாற்றியமைக்காக சமாதானத்திற்கான தங்க விருது இவருக்கு வழங்கப்பட்டது. இறைபணியோடு சமாதானத்திற்கும், நீதிக்கும், ஒற்றுமைக்கும் தன்னாலான பணிகளைச் செய்துவரும் தந்தையவர்கள் தன்னுடைய குருத்துவ திருநிலைப்படுத்தலில் நாற்பதாண்டு நிறைவைக் காணுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# ஓ! இதயத்திலே அணையாத குருவே ஜிம்பிறவுண்! கண்டதை, கேட்டதை உணர்வுகளோடு உரைக்கிறோம்

**எழுத்துரு : அருட்பணி. எல். சுரேஸ் றெவல்**

ஜிம்பிறவுன் அடிகளார் காணாமல்போய் இரண்டு ஆண்டுகள் நினைவாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது

*2008 ஆவணி 20ம் திகதி நம் பாசத்திற்குரிய ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல்போய் இரண்டு ஆண்டுகள் கண்ணீரோடு கரைகின்றன. ஜிம்பிறவுணை நினைக்காமல் ஒரு நாள்கூட கடந்து போவதிலலை. என்ன வேலை செய்தாலும், எங்கு சென்றாலும் என் நிழல்போல என்னோடு நினைவுகளில் வந்துகொண்டிருக்கும் இந்தப் பாசப்பிறவியை எப்படி மறப்பது?*

*"ஜிம்பிறவுண், உன் நினைவில் தினமும் கண்ணீரோடு நாட்கள் நகர்கின்றன! ஜிம், உன்னை நான் நினைப்பதில்லை, ஏனென்றால் உன்னை மறந்தால்தானே நினைப்பதற்கு! நீ எப்போதும் எம்மோடு வாழ்கிறாய். ஜிம், எம் மக்கள் படும் துன்பங்களைப் பார். நீ மக்களை அதிகம் நேசிப்பவன். எம் மக்களுக்காய் இறைவனிடம் மன்றாடு. எம் ஆயர்களுக்காக, குருக்களுக்காக, துறவிகளுக்காக நீ நிறைய மன்றாடு.*

*இன்று நாம் கதிகலங்கி நிற்கின்றோம். இனியும் எம் மக்களின் துன்பங்களைத் தாங்க எம்மிடம் சக்தி இல்லை. எம் மக்கள் இன்று சொந்த ஊர்களை, வீடு வாசல்களைவிட்டு அவலமாக, அநியாயமாகத் துரத்தப்பட்டுள்ளார்கள். காலங்கள் கண்ணீரில் கரைகின்றன. பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோரும், பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகளும், உறவுகளை அவல மரணத்தில் பறிகொடுத்த மக்களுமாக ... இது அநாதைகளின், விதவைகளின் தேசமாக மாறிவிட்டது. ஜிம், நீ இதையெல்லாம் இங்கே இருந்து பார்த்துக்கொண்டு சகித்துக்கொள்ள மாட்டாய் என்பதாலா எம்மிடமிருந்து மறைக்கப்பட்டாய்?*

***ஜிம்பிறவுண் காணாமல்போய் இரண்டாவது ஆண்டு நினைவில் இந்தத் தொகுப்பைச் சமர்ப்பிக்கிறேன்.***

• "வடக்கின் யாழ்ப்பாணத்தில் யார் யார் எல்லாம் அருட்தந்தை ஜிம்பிறவுண் எனும் கத்தோலிக்க குரு காணாமல்போகக் காரணமாய் இருந்தார்களோ அவர்கள் எல்லாம் அவரை விடுதலைசெய்ய முன்வரவேண்டும். 34 வயது நிரம்பிய இந்தக்குரு ஆவணி 20ல் கடைசியாக அல்லைப்பிட்டி கடற்படைச் சோதனைச்சாவடியிலேயே காணப்பட்டார். நாம் இவர் காணாமல் போனதால் கவலையும், வேதனையும்பட்டு மனம் உடைந்துள்ளோம். இலங்கை ஜனாதிபதியிடம் ஜிம்பிறவுண் அடிகள் பற்றியும், உதவியாளர் பற்றியும் நாம் எழுதிய கடிதத்துக்குப் பதில் தரும்படி கேட்டுள்ளேன்"
**(பேரருட்திரு மாரியோ செனாரி, திருத்தந்தையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி).**

• 19 ஆவணி 2006 சனிக்கிழமை மாலை என்னுடன் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார். தான் புதிதாகப்பொறுப் - பெடுத்திருக்கும் அல்லைப்பிட்டி பங்கைப் பற்றியும், கடற்படையின் எதிர்செயல் பற்றியும், மக்களுக்காக அனுமதிகள் பெறுவது பற்றியும் என்னுடன் நீண்ட நேரம் கதைத்தார். ஜிம்பிறவுணைப் பற்றியும், உடன் சென்றவர் பற்றியும் நான் வடமாகாணக் கடற்படைத் தளபதியைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் அல்லைப்பிட்டி கடற்படை முகாமுடன் தொடர்புகொண்டுவிட்டு NP GO 6486 எனும் சிகப்பு நிற மோட்டார் சைக்கிளில் மதியம் 1.50க்கு உள்வந்து 2.10க்கு திரும்பிவிட்டதாக என்னிடம் கூறினார். ஆனால் கடந்த 72 மணித்தியாலங்களாக அவர் யாழ்ப்பாணம் வரவில்லை. உண்மை எப்போது தெரியும்?
**(22-08-2006ல் யாழ் ஆயர் ஜனாதிபதிக்கு எழுதிய முதலாவது கடிதத்தில்).**

• யாழ் ஆயரிடமிருந்து ஜிம்பிறவுண் அடிகளார் காணாமல் போனதாக எமக்கு அவசர செய்தி கிடைத்துள்ளது. இவர் காணாமல் போனது குறித்து நாம் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம். நாட்டின் ஜனாதிபதியாகிய நீங்கள் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுத்து காணாமல்போன அருட்தந்தையினதும், உடன் சென்றவரினதும் பாதுகாப்பை உடனடியாக உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
**(23-08-2006ல் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றம் இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில்).**

• ஜனாதிபதியின் அலுவலகத்திலிருந்து காணாமல்போன ஜிம்பிறவுண் அடிகள் பற்றியும், உதவியாளர் பற்றியும் ஆவலோடு பதில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன். இவர்கள் இருவர் பற்றியும் நாம் கடந்த 15 நாட்களாக மிக மிக வேதனையடைந்துள்ளோம். தங்களிடமிருந்து எதுவித பதிலும் இதுவரை இல்லாத நிலையில் அவர்கள் உயிருடன் உள்ளார்களா இல்லையா என்று அஞ்சுகின்றோம். இது நான் இரண்டாவது முறையாக தங்களுக்கு எழுதும் மடல். நாம் இரண்டு கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்:
01. குருவினதும், உதவியாளரதும் விடுதலை அல்லது அவர்கள் அல்லைப்பிட்டிக் கடற்படையால் ஏதாவது குற்றச் செயலின்படி கைதுசெய்யப்பட்டிருந்தால் அவர்களை நீதி மன்றத்தின் முன் நிறுத்துங்கள். 02. பாதுகாப்புப் படையின் தலையீடு இன்றி பாகுபாடற்ற விசாரணை நடத்தப்பட்டு இதன் பின்னால் உள்ள



உண்மை அறியப்பட வேண்டும் என்னும் இரண்டு கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.
**(05-09-2006ல் யாழ் ஆயர் ஜனாதிபதிக்கு எழுதிய 2வது கடிதம்).**

• தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவை ஆயர்கள் அனைவருக்கும் முதலில் அன்பு வணக்கங்கள்.... ஆவணி மாதம் 20ம் திகதி ஜிம்பிறவுண் அடிகளாரும் அவரோடு சென்ற விமலதாஸ் எனும் துணையாளரும் காணாமல்போயுள்ளமை எம்மை மிகுந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. யாழ் மறைமாவட்ட இறைமக்களும் இன்னும் சிறப்பாகக் குருக்களும் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். துன்பமான வேளைகளில் எமக்காய் பணிபுரிய, குரல் கொடுக்க நின்ற கத்தோலிக்க குருக்களுக்கே இந்த நிலமை ஏற்பட்டால் நமது கதி என்ன என இறைமக்கள் ஏங்கிப்போய் உள்ளனர். குருக்களும் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வில் இருக்கின்றார்கள.
**(யாழ். ஆயர், பாதுகாவலன் 15-09-2006).**

• ஜிம்பிறவுண் அடிகளாருக்கு முன் அல்லைப்பிட்டியில் பங்குத்தந்தையாக இருந்தவர் 13-05-2006ல் ஒரே இரவில் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட 10 பொதுமக்களுக்காகக் குரல் கொடுத்தார். இதனால் இவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது அவர் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஜிம்பிறவுண் அடிகள் அங்கு சென்றார். கடற்படை அவர்மீது கோபமாய் இருந்தது. சில நாட்களின்பின் நடந்த ஒரு கூட்டத்தில் கடற்படை அதிகாரியால் கடுமையான தொனியில் ஜிம்பிறவுண் அடிகளார் எச்சரிக்கப்பட்டார். பின் ஆவணி 20ல் காணாமல்போனார்.
**(யாழ் மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு ஆவணி 2007ல்).**

• 2006 ஆவணி 25ல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலிருந்து மன்னார் கச்சேரியை நோக்கி மன்னார் நகர் ஊடாக அமைதிப் பேரணியில் சென்ற 6000க்கும் மேற்பட்ட பொதுமக்களும், 75க்கும் மேற்பட்ட குருக்கள், துறவியரும் இலங்கை ஜனாதிபதியிடம் கேட்டது எங்கள் குருவை எங்களுக்கு விடுதலை செய்யுங்கள் என்பதையே. மீன்பிடி நிறுத்தப்பட்டு, கடைகள் பூட்டப்பட்டு கச்சேரியிலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடமும் கொடுத்த இந்த மன்னார் மக்களின் வேண்டுதலுக்கு இன்னும் பதில் இல்லை **(மன்னார் மக்கள்).**

• காலம் தடுத்தபோதும் உன் கால்கள் பயணித்தனவே. எங்களுக்கெல்லாம் தாய் ஒருத்திதான். போடா......... நீ கொடுத்து வைத்தவன். எல்லோரும் உன்னை "என் பிள்ளை" என்றல்லவா சொல்கிறார்கள். என் மக்களுக்கு வழிவிடுங்கள் என்று கேட்டு ஏன் உன் வாழ்வையே விட்டுவிட்டாய்? இளங்கன்று பயம் அறியாது என்று உன்னை நினைத்தா பழமொழி சொன்னார்கள்? ஜிம்பு! நாங்கள் இன்னும் இமைகளைக் கத்தரிக்கவில்லை. எங்களின் கனவு நீதிமன்றங்களில் நீ வந்து பேசு. இன்னும் பல வெள்ளிளம் கன்றுகள் பணி(லி)க்குத் தயாரென்று திருச்சபை மகிழட்டும்.
**(யாழ் மறைமாவட்ட Fraternity எனும் பத்திரிகையில் கார்த்திகை 2007ல்).**

• ***எங்கே நம் அருட்பணியாளர் ஜிம்பிறவுண்? தமிழ் மறைமாவட்டங்களில் சோகம். உண்மை நிச்சயமாக ஒரு நாள் வெல்லும். ஆனால் எப்போது என்று தெரியாது.*** "அந்தப் பயங்கரத் தாக்குதல்கள் அல்லைப்பிட்டியில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது காதைப்பிளக்கும் சத்தங்கள் கேட்டன. அப்போது எனக்குள்ளே ஒரு குரல் ஒலித்துக் - கொண்டிருந்தது. எனது மரணம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற உள்ளுணர்வு எனக்குள் மேலோங்கியது. எனவே நான் உடனே எழுந்து நற்கருணை ஆண்டவர்முன் முழந்தாள்படியிட்டு செபித்தேன். என்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன். தொடர்ந்து ஆலயத்தில் தங்கியிருந்த அனைத்து மக்களுடன் சமாதானத்தின் இராக்கினியாகிய மரியன்னைக்கு ஒரு செபமாலை ஒப்புக்கொடுத்தேன். பின்னர் நான் தனியாக மரியன்னைக்கு ஒரு செபமாலை ஒப்புக்கொடுத்தேன். தொடர்ந்து எனது அறையில் தங்கியிருந்த சிறுவர்களுடன் சேர்ந்து இன்னும் ஓர் செபமாலை ஒப்புக் கொடுத்தேன். இது ஜெஸ்தசமெனி அனுபவம். **(25-08-2006 தொடுவானம், ஜேர்மனி).**

• எனக்கு ஜிம்பிறவுணை நன்கு தெரியும். அவர் யாழ் புனித சவேரியார் குருமடத்தில் எனது மெய்யியல் மாணவன். குருமட நாட்களிலேயே அவர் சமூகப்பணி செய்வதிலே மிகவும் உற்சாகமாக இருப்பார். குருமடத்தில் சமூகப்பணிக் குழுவில் மிகவும் துடிப்புள்ள பங்காளி. எப்பொழுதும் ஏழைகளை, தேவையில் உள்ளோரைத் தேடி உதவுவதும், இரத்ததானம் செய்வதும் அவரது ஓய்வுநேர வேலையாக இருந்தது. உண்மை ஒரு நாள் நிச்சயம் வென்று எல்லாம் வெளிப்படும். அந்த நாள் விரைவில் வரும்.
**(அருட்தந்தை போல் றொகான், யாழ்ப்பாணம்)**

• வலியோடு சில வரிகளை வரைய நினைக்கின்றோம். முடியவில்லையடா! நீ இங்கே இல்லை என்பதை நியாயப்படுத்த எம்மால் முடியவில்லையடா. குருக்குழந்தையாய் நீ நடமாடிய இந்தக் குருமடமோ உன் வருகை எண்ணிப் பார்த்திருக்கிறாள்
**(இறையியல் கோலங்கள், புரட்டாதி – மார்கழி 2006).**

• யாழ் ஆயர் அவர்கள் ஜிம்பிறவுண் அடிகளாரை யாழ் ஆயர் இல்லத்தில் தங்கும்படி கேட்டபோது அவர் யாழ் ஆயருக்குச் சொன்ன பதில்: ஆயர் அவர்களே! எனது மக்கள் தண்ணீர் தாகத்தால் தவிக்கின்றார்கள். நான் இந்தத் தண்ணீர் போத்தல்களை இடம்பெயர்ந்த மக்களுக்கு கொடுத்துவிட்டு திரும்பி வருகின்றேன் .... என்று சென்றவர் இன்னும்......
**(சண்டே லீடர் பத்திரிகை).**

• ஜிம்பிறவுண் அடிகள் பணி செய்த அல்லைப்பிட்டி ஆலயத்தில் செல் விழுந்து 20 பேர் கொலைசெய்யப்பட்டு, பலர் காயமடைந்தார்கள். அவர் காயப்பட்டவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல காயப்பட்ட குழந்தையைக் கையிலேந்தி முழந்தாள் படியிட்டு கடல் படையிடம் அனுமதி கேட்டார். இது அவர்மீது அவர்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.
**(கிளி - முல்லை குருக்கள், துறவிகள், மக்கள்).**

• காணாமல்போன கத்தோலிக்க மதகுருபற்றி சர்வதேச மன்னிப்புச்சபை ஒரு அவசர வேண்டுகோளை 2006 ஆவணி 29ல் விடுத்து காணாமல் போனவர் பற்றி விசாரணை செய்யுமாறு கேட்டுள்ளது. தீவுப்பகுதி கடல்படையின் உயர் பாதுகாப்புப் பகுதியாக இருப்பதால் இவர்கள் இருவரும் கடல்படையால் கைது செய்யப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது
**(தமிழ் ரைம்ஸ், பிரித்தானியா, புரட்டாதி 2006).**

• பாதுகாப்புப் படையினரின்கீழ் உள்ள சோதனைச் சாவடியில் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றதுதான் கடைசியாகப் பார்த்தது. இந்நாள்வரை அவர்களைப் பற்றிய எந்த அடையாளமும் இல்லை. அவர்களுக்காக நாம் எதுவும் செய்ய முடியாது. எனவே, கடவுளை நம்பி அவர்களை அவர் கையில் ஒப்படைப்போம். மேலும், அவர்களுடைய உறவினர்களுக்கு இறைவன் ஆறுதல் அளிக்க வேண்டுவோம்.
**(02-09-2007, நம்வாழ்வு, இந்தியா).**


• 28 மார்கழி 2006ல் இலங்கையில் நடைபெற்ற கடுமையான மனித உரிமை மீறல்களை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஜிம்பிறவுண் அடிகளாருடைய காணாமல்போன விடயத்தையும் விசாரணைக்காக எடுத்தது. 2006ல் யாழ் சென்ற திருத்தந்தையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பேரருட்திரு மாரியோ செனாரி ஆண்டகை ஜிம்பிறவுணினதும், உதவியாளரதும் குடும்பங்களைச் சந்தித்தார். நான் பரிசுத்த பாப்பரசருக்கு இதுபற்றி எடுத்துச் சொல்லியுள்ளேன். பரிசுத்த பாப்பரசர் இதனால் மிகவும் அதிர்ச்சியும், வேதனையுமடைந்துள்ளார். யாழ் ஆயருடன் சேர்ந்து நானும் அரசாங்கத்திடம் ஜிம்பிறவுண் அடிகளாருடைய விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்து கேட்டுக்கொண்டிருப்பேன். **(வீரகேசரி பத்திரிகை).**

• காணாமல்போன ஜிம்பிறவுண் அடிகளார் எங்கு என்று அறிய நாம் மிக ஆவலாய் உள்ளோம். இவரைப்பற்றி நாம் ஆழ்ந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம். எமக்கு அதிக அதிர்ச்சியைத் தருவது இது கடற்படையின் உயர் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடந்துள்ளது என்பதுதான். ஜிம்பிறவுண் அடிகளார் பற்றிய தகவலை ஜனாதிபதியாகிய நீங்கள் கொடுக்கவில்லையென்றால், கடற்படை முகாம் பகுதியில் காணாமல்போனபடியால் சிங்கள தமிழ் உறவுகள் மேலும் மோசமடையும் என்று அஞ்சுகின்றோம்
**(நீர்கொழும்பு பழங்குதுறை பங்கு மக்களும், குருக்களும், துறவிகளும் இலங்கை ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில்).**

• ஒரு நாள், நாள் முழுவதும் இருவருமாக அலைந்து களைத்து திரும்பி வந்த நிலையில் நான் "அப்பாடா" என்று அமர நீ புதிய ஏற்பாட்டைத் தூக்கியபடி "அன்பியக் கூட்டத்திற்குப் போய் வாறன் பாதர்" என்று புறப்பட்டாய். அவசரமாய் மறைவதற்குத்தானா நீ இப்படி ஆக்கோரசமாகப் பணியாற்றினாய்?
**(அருட்தந்தை இரவிச்சந்திரன், பாதுகாவலன் 01-09-2007).**

• வணபிதா ஜிம்பிறவுண் அடிகளாரின் உருவப் படங்களைச் சுமந்து சென்ற மக்களை இராணுவத்தினர் இடைமறித்து திருப்பி அனுப்ப முற்பட்டனர். இதை அறிந்த பல கத்தோலிக்கக் குருக்கள் தலத்திற்கு விரைந்து மக்களுக்கு உதவினர். அவ்வாறு உதவிய குருக்களுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது
**(இறை ஒளி, சுவிஸ், ஐப்பசி, கார்த், மார்கழி 2006).**

# உலகத் திருச்சபைச் செய்திகள்



## பல்சமய உரையாடல் உண்மையானதாக இருக்க வேண்டுமெனில் அது விசுவாசப் பயணமாக அமைய வேண்டும்

### திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட்

**பல்சமய உரையாடல் உண்மையானதாக இருக்கவேண்டுமானால் அது விசுவாசப் பயணமாக அமைய வேண்டும். எனவே இவ்வுரையாடலை ஊக்குவிப்போருக்குப் பயிற்சி தேவைப்படுகின்றது என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார்.**



பல்சமய உரையாடல்கள் பெருகி வரும் இவ்வுலகில் அவற்றில் பங்குகொள்வோர் தங்களது சொந்த மதத்தின் விசுவாசத்தில் நன்கு உருவாக்கப்பட்டு மற்ற மதத்தினர் பற்றிய அறிவை நன்றாகத் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது என்று திருத்தந்தை மேலும் கூறினார்.

கிறிஸ்துவின்மீதான அன்பானது திருச்சபையில் எவ்வித பாகுபாடுமின்றி மக்களை அணுகவும் இவ்வன்பே ஒவ்வொரு விசுவாசியும் பிறருக்குச் செவிமடுத்துப் பிறருக்கு ஒத்துழைப்பை வழங்கவும் காரணமாக அமைகின்றது என்றும் அவர் கூறினார்.

திருப்பீட பல்சமய உரையாடல் அவை நடத்திய பத்தாம் ஆண்டுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அறுபது பிரதிநிதிகளை திருத்தந்தை திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றினார்.

பல சமயங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு ஒவ்வொரு மத மரபின் மிக உயரிய கொள்கைகளை வெளிப்படுத்துவதற்கு நல்ல வாய்ப்புக்களை வழங்குகின்றது என்றும் நோயாளிகளுக்கு உதவுதல், இயற்கைப் பேரிடர்களில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகளை எடுத்துச் செல்லுதல், முதியோர் மற்றும் ஏழைகளைப் பராமரித்தல் போன்ற பணிகளில் பல்வேறு மதங்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும் சமுதாயத்தில் துன்புறும் மக்களுக்கு பல்வேறு மதத்தவர் உதவவேண்டும் எனவும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

## ஏறத்தாழ நூறு கோடி மக்கள் எதிர்கொள்ளும் பசிக்கொடுமையும் ஊட்டச்சத்துக் குறைவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை!

போதுமான வளங்களைக் கொண்டுள்ள இன்றைய உலகில் ஏறத்தாழ நூறு கோடி மக்கள் எதிர்கொள்ளும் பசிக்கொடுமையும் ஊட்டச்சத்துக் குறைவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்று ஐ. நா உணவு உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஐம்பது நாடுகளில் தலைவர்கள் உட்பட 181 நாடுகளில் பிரதிநிதிகளிடம் திருத்தந்தை கூறினார்.

திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சியொ பொத்தோனே வாசித்த திருத்தந்தையின் இச்செய்தி, வளர்ச்சித் திட்டங்களுக்கென அமைப்பு முறையில் சீர்திருத்தம் இடம்பெறுவது இன்றியமையாதது என்றும், உலகில் ஒவ்வொருவரும் குறிப்பாக குழந்தைகளும் கடும் வறுமையில் வாடுவோரும் உணவைப் பெறுவதற்கு உரிமை கொண்டுள்ளார்கள் என்று கூறுகிறது.

## கத்தோலிக்க திருச்சபையில் பெண்கள் குருக்களாக வாய்ப்பில்லை

கத்தோலிக்கத் திருச்சபையில் பெண்களைக் குருக்களாகத் திருநிலைப்படுத்துவது செல்லுபடியாகாது என்று திருப்பீட விசுவாசக் காப்புப் பேராயம் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

குருத்துவம் என்ற திருவருட்சாதனத்தின் இயல்பையும் தன்மையையும் பாதுகாப்பதற்காக ஆணை வெளியிடப்பட்டது என்று திருப்பீட விசுவாசக் காப்புப் பேராயம் வெளியிட்ட அறிக்கை கூறுகிறது. பெண்களுக்குக் குருத்துவ திருநிலைப்பாடு வழங்க முயற்சிப்பவரும், குருத்துவ திருநிலைப்பாட்டைப் பெற முயற்சிக்கும் பெண்களும் தன்னிலே திருச்சபைக்குப் புறம்பாக்கப்படுகின்றனர் என்றும் திருமுழுக்குப் பெற்ற ஆண்கள் பெறும் குருத்துவ திருநிலைப்பாடு மட்டுமே செல்லுபடியாகும் என்றும் அதில் சொல்லப்பட்டுள்ளது.

## புனித தோமையார் பற்றிய திரைப்படம்



புனித தோமையார் பற்றிய இரண்டரை மணி நேரத் திரைப்படம் ஒன்றை எடுப்பதற்குச் சென்னை மயிலை உயர் மறைமாவட்டம் திட்டமிட்டுள்ளது. இத்திரைப்படத்தின் பணிகள் யூலை மூன்றாம் திகதி புனித தோமையார் திருவிழா அன்று தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதியின் கையால் தொடக்கி வைக்கப்பட்டது.


இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவரான புனித தோமையார் கி.பி.52ல் கேரளாவுக்கு வந்து அங்குள்ள மேற்குக் கடற்கரையில் ஏழு கோவில்களைக் கட்டினார். பின்னர் மயிலாப்பூரில் மறைப்பணியாற்றினார். அங்கு கொல்லப்பட்டார். இத்திரைப்படம் முதலில் தமிழிலும் பின்னர் மலையாளம் மற்றும் இந்தியிலும் அதன் பின்னர் பிரெஞ்ச், ஆங்கிலம் எனப் பிற மொழிகளிலும் திரையிடப்படும்.

### உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூலான

## விவிலியத்தை வாசிக்கும் மக்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை!

உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூலான விவிலியத்தை வாசிக்கும் மக்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதால் வருகிற ஒக்டோபர் உலக ஆயர் மன்றத்தில் இதை நிவர்த்திக்கும் வழிகளை ஆராயவிருப்பதாக இவ்வாயர் மன்றத்தின் பொதுச் செயலர் பேராயர் நிக்கோலா எத்தெரோவிச் கூறினார்.

"திருச்சபையின் வாழ்விலும் மறைப்பணியிலும் இறைவார்த்தை" என்ற தலைப்பில் வருகிற ஒக்டோபர் 5 முதல் 26 வரை வத்திக்கானில் நடைபெறவுள்ள உலக ஆயர் மன்றத்தின் முன்வரைவுத் தொகுப்பை நிருபர் கூட்டத்தில் வெளியிட்டுப் பேசிய பேராயர் எத்தெரோவிச், மேலும் அதிகமாக மக்கள் விவிலியத்தை வாசிப்பதற்கு வழிமுறைகள் ஆராயப்படும் என்றார்.



உலகில் இருக்கின்ற சுமார் 9,700 மொழிகளில் 3,000 பெரிய மொழிகளாகக் கருத்தப்படகின்றன. விவிலியம் 2,452 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்ற அவர் இந்நூலை அதிகமான மக்கள் வாசிக்கவில்லை என்பது வருத்தமாக இருக்கின்றது என்றார். இந்த முன்வரைவுத் தொகுப்பானது ஆயர் பேரவைகள் மறைமாவட்டங்கள், துறவு சபைகள், கீழை நீதி மன்றங்கள், உரோமைத் தலைமையகப் பொறுப்பாளர்கள் போன்றோருக்கு அனுப்பப்பட்ட கேள்விகளிடமிருந்து கிடைத்த பதில்களை வைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது.

## மதப்பாகுபாட்டுக்கு எதிராக சட்டம் வேண்டும்

### பாக்கிஸ்தான் திருச்சபை கோரிக்கை

சொந்த மக்களே மதத்தின் அடிப்படையில் பாகுபாட்டுடன் நடாத்தப்படுவதை நீக்க உதவும் நோக்கில் பாக்கிஸ்தான் அரசியலமைப்பில் திருத்தங்கள் கொணரப்பட வேண்டுமென்று பாக்கிஸ்தான் தலத்திருச்சபை நாட்டின் புதிய அரசைக் கோரியுள்ளது.

பாக்கிஸ்தான் அரசியலமைப்பை மேலும் ஜனநாயக மதிப்புடையதாக மாற்ற வேண்டுமெனில் அந்தநாட்டின் பல்மத மற்றும் பல்கலாச்சார கூறுகள் மதிக்கப்பட்டு ஏற்கப்பட வேண்டும். மத அடிப்படையில் நாடாளுமன்ற அங்கத்தினருக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று அந்நாட்டு ஆயர் பேரவையின் நீதி மற்றும் அமைதி ஆணையம் கூறியது. பாக்கிஸ்தானின் 16 கோடி மக்களுள் 95 விழுக்காட்டினர் முஸ்லீம்கள் 2 விழுக்காட்டியினர் கிறிஸ்தவர்கள்.

### தொழிலாளர்களின் நிலமைகள்

## ஆராயப்பட வேண்டும்

தங்குமிடம், உணவு, எரிசக்தி, எண்ணெய் போன்றவைகளின் விலையேற்றம், பங்குச் சந்தைகளின் நிலையற்ற தன்மை, உலக வளர்ச்சியின் தேக்க நிலை போன்றவைகளின் பின்னணியில் இன்றைய தொழிலாளர்களின் நிலைகள் ஆராயப்பட வேண்டும் என்று ஜெனிவாவில் உள்ள ஐ. நா அமைப்பிற்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் சில்வானோ தொம்மாசி கேட்டுக்கொண்டார்.

சர்வதேச தொழிலாளர் நிலைகுறித்த கருத்தரங்கில் உரையாற்றிய அவர் உலகில் பொருளாதாரம் வளர்ச்சிகண்டு வருவதற்கு இணையாக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்ற கவலையையும் தெரிவித்தார். இன்று உலகில் 48 கோடியே 67 இலட்சம் தொழிலாளர்கள் இன்னும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றார்கள் என்றும் பேராயர் வலியுறுத்தினார்.

## எய்ட்ஸ் நோயாளிகள் மாண்புடன் வாழ திருப்பீடம் அர்ப்பணத்துடன் உழைக்கிறது

எய்ட்ஸ் நோயாளிகள் மாண்புடன் வாழவும் அனைத்து மக்களின் தோழமையுணர்வைப் பெறவும் திருப்பீடமும் அதன் பிற நிறுவனங்களும் மிகுந்த அர்ப்பணத்துடன் உழைத்து வருவதாகத் திருப்பீட அதிகாரி ஒருவர் ஐ. நா. கூட்டத்தில் கூறினார்.

எய்ட்ஸ் நோய் குறித்த ஐ. நா. பொது அமர்வில் உரையாற்றிய ஐ.நா.வுக்கான திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளர் பேராயர் செலஸ்தீனோ மில்யோரே, தேசிய அளவில் குறிப்பாக இந்தியாவில் மட்டும் எயிட்ஸ் நோய்களுக்கென நூற்றுக்கும் மேற்பட்ட மையங்கள் இருக்கின்றன. மேலும் 45 மையங்கள் கிராம மற்றும் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் விரைவில் தொடங்கப்பட உள்ளன. அமெரிக்க ஐக்கிய நாட்டு ஆயர் பேரவையின் நிவாரண அமைப்பு ஏழை நாடுகளின் 250 திட்டங்களுக்கு உதவி வருகின்றது, 2007ல் மட்டும் 12 கோடி டாலருக்கு அதிகமான நிதியுதவி செய்திருக்கின்றது என்றார். சர்வதேச அளவில் என்கின்றபோது, அனைத்துக் கண்டங்களிலும் எயிட்ஸ் நோய்கள் மத்தியில் வேலை செய்வோருக்கு இனம், மதம், நாடு என்ற பாகுபாடு இன்றி திருப்பீடம் அதன் பல்வேறு நிறுவனங்கள் வழியாகப் பயிற்சி அளித்து வருகின்றது. இதுவரை ஏறத்தாழ 40 இலட்சம் மக்கள் இதனால் பயனடைந்துள்ளார்கள் என்றார்

ஏறத்தாழ 03 இலட்சத்து 50 ஆயிரம் எயிட்ஸ் நோயாளர்களுக்கு மருந்து மற்றும் ஊட்டச்சத்து உதவிகளையும் 90 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு எயிட்ஸ் நோய்க்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளது என்றும் பேராயர் ஐ. நா.வில் எடுத்துச் சொன்னார்.

## ஆசிய மண்ணில் அறிவிக்கப்படும் நற்செய்தி

ஆசிய மண்ணில் அறிவிக்கப்படும் நற்செய்தியானது அக்கண்டத்தில் வாழும் மக்களின் கலாச்சாரம், மரபுகள் ஆகியவற்றோடு ஒத்திணங்கியதாகவும் உள்ளார்ந்த ஆன்மீக இயல்பையும் நன்னெறி ஞானத்தையும் பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ட் கூறினார்.

மலேசியா, சிங்கப்பூர் புருனை ஆகிய நாடுகளின் 14 ஆயர்களை 'அற்லிமினா' என்ற ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெறும் சந்திப்பை முன்னிட்டு வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, கிறிஸ்தவ நற்செய்தியானது உலகாயுதக் கொள்கை - களிலிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதை வலியுறுத்தி மக்கள் தங்கள் பொது வாழ்க்கையிலிருந்து கடவுளை விலக்கி வைக்க முயற்சிப்பதற்கு எதிராகச் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

## 31ம் நாள் நினைவு



மலர்வு 05 - 08 - 1952

உதிர்வு 01 - 08 - 2008

**அமரர். திரு. செபமாலை எமிலியான் (சம்மாட்டி)**
**(தலைமன்னார் மேற்கு)**

"சீவியத்திலும் உம்மை நேசித்தோம், மரணத்திலும் உம்மை மறவோம"

*இவரின் பிரிவால் துயருறும்:*
மனைவி - செலஸ்ரின், *பிள்ளைகள் டிலோசன், டிவ்னன், டென்சில், மருமகள் தயா, மற்றும் உற்றார் உறவினர்கள்.*

# கலை இலக்கியச் சாளரம்

# சிறுகதை

# கவிதைக் களம்

## பேராசைப் புத்தகம்

பேசிடும் புத்தகங்களில்
பேராசைப் புத்தகமிது.
நாசியில் சுவாசம் உள்ளோரை
நாதியடைவிக்கும் புத்தகமிது.

அள்ளிக் கொடுத்த ஆண்டவர் வாக்கை
அடிக்கடி நினைவுறுத்தி - தேவ
அடித்தளச் சட்டங்களை
அழியாமல் காக்கும் காப்புறுதியிது.

மலைகளைத் தாண்டும் வித்தகமும்
மண்டியிடும் மனிதத் தலைமுறைகளும்
மங்காது ஒளிவீசும் மகிமையும்
மறக்காது பரப்பும் மங்களச் சோலையிது.

அதிகாரங்களையும் அடிமைகளையும்
ஆண்டுகொள்ளும் அரிச்சுவடிகள்.
அகலமும் நீளமும் அன்புக்குவியல்கள்.
அவனியில் விதைக்கும் களஞ்சியமிது.

ஆசீரும் சாபமும் வெளிவந்தது
அண்டிக் கொண்டவரும் தடம்மாறியவரும்
அருமைத் தேவனிடம் அண்டிவர
ஆற்றலளிக்கும் வைகறைப் புத்தகமிது.

*யே.வதனா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.*

## பிறவிக் கடன்

தாயே உந்தன் பெயர் சொல்ல
தானே எவரும் பிறந்ததில்லை.
கரையில் பிறக்கும் உப்புக்கூட – கடல்
நுரையில் இருந்து உதித்தன்றோ!

கருவறையில் சுமையான என்னை- சுமந்தாய்
பத்து மாதம் வரை உன் மடியில்.

என் தாயே உனை ஆராதிக்க – என்
கண்ணீரால் கால் நனைக்கின்றேன்.
என் தவம் செய்தேனோ – நான்
உன் மடியில் தவழ்வதற்கு!

என் சுமை பெரிதென்று நோக்கும் நான்
என் கடன் என்னவென்று அடைப்பேன்?

இன்னுமொரு ஜென்மம் உண்டானால்
நான் வேண்டுவது
என் சேயாய் நீ உதிக்க வேண்டுமென்று!
அப்போதாவது தீருமா இந்தப் பிறவிக் கடன்!

*ஜோஸ்*

## தவிப்பின் ஒலிகள்!

சாதிக்க வேண்டிய சரித்திர மொட்டுகளின்
தாங்க முடியாத தவிப்பின் ஒலி.

கற்பனைகள் கனவுகளுடன் கல்வி வயதில்
துள்ளித் திரிந்த மானினங்கள் இவர்கள்.
கவர்ச்சிகரமான உலகினில் கண்சிமிட்டி
சிரித்த மின்மினிப் பூச்சிகள் இவர்கள்.
வளருகின்ற அறிவியல் விஞ்ஞானத்தில்
சாதனை படைக்கத் துடித்த
வைரமுத்துகள் இவர்கள்.

இன்றைய எமது நிலை ...... !
பேச மறுக்கின்றன வார்த்தைகள்!
எழுதத் துடிக்கும் பேனாகூட
கண்ணீர் சிந்துகின்றது
ரணமாகிக்கொண்டிருக்கும்
நினைவுகளுடன் நாம்.

அன்புப் பெற்றோர் முன்
கைதியாகிச் செல்கிறேன் நான்
தட்டிக் கேட்டால்
தடங்கள் நொடியில் மறைகின்றன.

கற்பனைக் கனவுகள் கண்ட
நெஞ்சம் கனக்கின்றது.
சாதனை படைக்க வேண்டிய தோள்கள்
சுடுகருவி தாங்கி நிற்கும்
துர்ப்பாக்கிய நிலை.
சரித்திரம் படைக்கத் துணிந்த கால்கள்
சாவு மணி அடிக்கும் மரணமேடை
நோக்கி நடக்கும் துர்ப்பாக்கிய நிலை!
அண்ணா, அக்கா, தம்பி, தங்கை என
சொல்லிக் காத்திருக்கும்
தொப்புள் கொடி உறவுகள்.
இவர்கள் பிரிவை நினைத்து
வெந்துருகி காட்டில் நிற்கும்
வாசனை இழந்த மலராக நான்.

நாளை உயிரற்ற உடலாய்
உடலற்ற தலையாய் நான் வீடு வரலாம்.
நீதியை அலங்கரிக்கும்
உதிராப் பூக்கள் நாங்கள்.
வீட்டைவிட்டு வெளியே வந்தால்
வெள்ளை வேனின்
உல்லாச பயணங்கள்.
இளைஞனே!
நீ சமூகத்தின் முதுகெலும்பு என்றார்கள்
இன்று நொறுக்கப்படும் இளைஞனின் நிலைக்காக
கொஞ்சம் இரங்கும் ஐயா .. இயேசையா ..!

*க. கோட்வின், நெடுங்கண்டல்*

## துளிப்பா

**கல்வி**
வாழ்வை உயர்த்தும்
வெற்றிப்படி.

**காதல்**
இதயத்தைத் துளைக்கும்
அணுகுண்டு.

**மதுபானம்**
இளைஞர்களை மயக்கும்
அழ(ழி)கிய தேவதை

*மி. மதுசாளினி, மடு.*

**சிரிப்பு**
வாழ்வின்பொழுது இயற்கை
தெளித்த வாசனைத் தைலம்.

**அந்தி**
வானத்தின் வர்ண மாநாடு.

**இயற்கை**
கடவுள் மனிதனுக்குக்
கொடுத்த பரிசு.

**காதல்**
வாலிபம் சூடிப்பார்க்கும்
கீரிடம்.

*ஜெ.மெற்றில், நொச்சிக்குளம்*

**நண்பன்**
இயற்கையின் தலைசிறந்த
தலைப்படைப்பாகக் கருதத்தக்கவன்.

**நட்பு**
இன்பத்தை இரட்டித்து
துன்பத்தைப் பாதியாகக் குறைப்பது.

**நகைச்சுவை**
குணப்பண்பு அல்ல
அது பயில வேண்டிய கலை.

*க. கவந்தன், பாலம்பிட்டி*

**நட்பு**
இறைவனின் கொடைகள்
அனைத்திலும் மேலான கொடை.

**கலைகள்**
இதயத்திற்கு நயம் தருபவை
நட்டம் தராதவை.

**புன்னகை**
வித்தியாசமான நகை.
பிறரால் கொள்ளையிட முடியாதது
பிறரைக் கொள்ளைகொள்ளக் கூடியது.

*ஜெயா பாலாஜி, முருங்கன்*

## உறுதி

**ம. காமலின் சௌமியா குரூஸ்**

பேராசிரியர் "ஜகதீஷ் சந்திரபோஸ்" அப்போது லண்டன் சென்று அறிவியல் படிப்பு படித்து முடித்து இந்தியாவுக்குத் திரும்பி இருந்த காலம் அது. அந்தக் காலத்தில் இந்தியாவை வெள்ளைக்காரர்களே ஆண்டு வந்தனர். அவர்கள் இந்தியர்களைக் கறுப்பர்கள் என்ற பெயரிலே அழைத்தனர். அவர்களைவிட இந்தியர்கள் அனைவரும் தாழ்ந்தவர்கள் என்றும் அவர்கள் கருதினர்.

பேராசிரியர் "ஜகதீஷ் சந்திரபோஸ்" அறிவியல் துறையில் மேதையாக இருந்தார். நேர்மைக்காகப் போராடும் குணம் கொண்டவராகவும் திகழ்ந்தார். அநீதியும், அக்கிரமமும் அவருக்குப் பிடிக்காது. அவருக்கு வந்த எந்தத் தோல்வியைக் கண்டும் அவர் கலங்கி நின்றதே இல்லை. இப்படிப்பட்ட குணநலன்களைப் பெற்றிருந்த ஜகதீஷ் சந்திரபோசுக்கு கல்கத்தாவில் உள்ள பிரசிடென்ஸி கல்லூரியில் இருந்து அறிவியல் துறை பேராசிரியராகப் பணியாற்ற அழைப்பு வந்தது. அக்காலத்தில் எல்லாப் பெரிய பதவிகளிலும், பெரிய பொறுப்புக்களிலும் வெள்ளைக்காரர்களே இருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் கறுப்பர் என்று அழைக்கப்பட்ட ஜகதீஷ் சந்திரபோசுக்கு அத்தனை உயர்ந்த பதவி அளிக்கப்பட்டது ஆச்சரியம்தான். அந்தக் கல்லூரி நிர்வாகத்தினர் அவரை வெறுத்தனர். அந்த வெறுப்பை அவர்கள் தங்கள் செயல்களின் மூலம் காட்டத்துவங்கினர். அக்காலத்தில் ஆங்கிலப் பேராசிரியர்களுக்கு ஏகப்பட்ட சலுகைகளை அக்கல்லூரி நிர்வாகம் தந்துகொண்டிருந்தது.

அந்தச் சலுகைகளில் ஒன்றுகூட ஜகதீஷ் சந்திர போசுக்கு வழங்கப்படவில்லை. மேலும் ஆங்கிலேயப் பேராசிரியர்கள் கணிசமான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருந்தனர். அதேபோன்ற சம்பளத்தை ஜகதீஷ் சந்திரபோசுக்கு வழங்கினால் அவர் ஆங்கிலேயர்களுக்கு நிகரான சம அந்தஸ்தைப் பெற்றுவிடுவார் என்று அந்தக் கல்லூரி நிர்வாகம் எண்ணியது. ஆகவே அவரை அவமானப்படுத்த அந்தக் கல்லூரி நிர்வாகம் தீர்மானித்தது. ஆங்கிலப் பேராசிரியர்களுக்குத் தரும் சம்பளத்தைத் தராமல் எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்து சம்பளத்தை நிர்ணயம் செய்ய முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு நிர்ணயம் செய்தது. இதைக் கண்ட ஜகதீஷ் சந்திரபோசின் உள்ளம் கொதித்தது. இதற்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என அவர் எண்ணினார்.

இந்தியர்கள் யாருக்கும் தாழ்ந்தவர்களல்லர் என்பதை உணர்த்த அவர் விரும்பினார். எனவே அவர்கள் நிர்ணயித்த அந்தச் சம்பளத்தை அவர் வாங்கவில்லை. அவருடைய அந்தச் செயலால் அக்கல்லூரி நிர்வாகமே அதிர்ந்துபோயிற்று. அவரை அழைத்து விசாரித்தனர். அவர் அதற்கு சரியான விளக்கம் தந்தார். தனக்கு நியாயமாக என்ன சம்பளத்தைத் தரவேண்டுமோ அதைத் தர வேண்டும். வெள்ளையர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்றுத் தருவதற்கும், தான் கல்வி கற்றுத் தருவதற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எனவே கல்லூரி நிர்வாகம் மற்ற பேராசிரியர்களுக்கு நிர்ணயம் செய்துள்ள அதே சம்பளத்தைத் தந்தால்தான் சம்பளத்தை வாங்கத் தயார் என்றார். நிர்வாகம் அவரை அலட்சியப்படுத்தியது. அவர் கோரிக்கையை அது ஏற்கவில்லை. மேலும் அவர்கள் மிகவும் திமிராகவும் பதில் கூறினார்கள். "உங்களுக்கு விருப்பம் இருந்தால் இந்தக் குறைந்த சம்பளத்தில் பணியாற்றலாம். இல்லாவிட்டால் இந்த வேலையை விட்டுவிடலாம் ஒன்றும் கட்டாயமில்லை" என்றது.

ஜகதீஷ் சந்திரபோஸ் இதுபற்றி வாதிப்பதில் பயனில்லை என்று உணர்ந்தார். என்றாலும் கிடைத்த வேலையை அவர் விட்டுவிடவில்லை. தொடர்ந்தும் பொறுமையாகத் தன் வேலையைச் சிரத்தையாகச் செய்தார். ஆனால் சம்பளத்தை மட்டும் வாங்கவே இல்லை. அவருடைய நண்பர்கள் பலரும் அவரிடம் எடுத்துச் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவர் தன் நண்பர்களின் பேச்சைக் கேட்கவில்லை. "நியாயமற்ற பேச்சு அது. வெள்ளைக்காரர்களுக்கு ஆதரவான பேச்சு அது. அதிகாரத்துக்குப் பயந்துபோன பேச்சு அது" என்று அவர் எண்ணினார். எனவே அவர் தெள்ளத் தெளிவாக அவர்களிடம் சொன்னார். "என்னுடைய போராட்டம் சம்பள உயர்வுப் போராட்டம் அல்ல. நசுக்கப்பட்ட மக்களின் இன எழுச்சிக்கான போராட்டம். அது அவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் எதிர்காலத்தில் கிடைக்க வேண்டும் என்பதற்கான போராட்டம். நீதி நியாயத்துக்கான போராட்டம். இந்திய மக்களுக்கான உரிமைப் போராட்டம்" ஆனால் அவர் என்னதான் போராடினாலும், எப்படித்தான் பேசினாலும் நிர்வாகம் மட்டும் தன்னுடைய பிடிவாதத்திலிருந்து தளரவே இல்லை. கல்லைப் போன்று இறுக்கமாகவும் இளக்கம் இல்லாததாகவும் இருந்தது அது. ஜகதீஷ் சந்திரபோஸ் அதிகமாகப் பேசப்பேச நிர்வாகம் அவரை அழைத்து எச்சரிக்கை செய்தது.

"நீங்கள் சம்பளம் வாங்காமல் பணியாற்றலாம். அதுபற்றி எங்களுக்கு ஒரு கவலையும் இல்லை. ஆனால் சாப்பாட்டுக்கும், உடைக்கும், உறைவிடத்துக்கும் நீங்கள்தான் கஷ்டப்பட வேண்டி இருக்கும். நீங்கள் சம்பளம் வாங்காததால் நீங்கள் மட்டும் கஷ்டப்படுவதுடன் நிற்காமல் உங்கள் குடும்பத்தையும் பட்டினி போடுகிறீர்கள்." ஆனால் போஸ் பிடிவாதமாக இருந்தார். அவர் உறுதியை நிர்வாகம் அசைத்துவிடவில்லை. அத்துடன் நிர்வாகம் அவருக்கு எச்சரிக்கை தந்ததுபோல நிர்வாகத்தை அவரும் எச்சரித்தார். "நீங்கள் நியாயமான ஒழுங்கான பரிந்துரைக்கப்பட்ட சம்பளத்தைத் தருவதால் நிர்வாக நிதி நெருக்கடியில் தள்ளப்பட்டுவிடமாட்டீர்கள். இங்கே வீணாகப் பிடிவாதம் பிடிப்பது நீங்கள்தான் நானல்ல. தேவையற்ற மனிதாபிமானமற்ற உயர்வு, தாழ்வு மனப்பான்மையக் கற்பித்துக்கொண்டு அவஸ்தைப்படுவது நிர்வாகமே தவிர நான் அல்ல."

நிர்வாகம் இதைக்கேட்டு சிரித்தது. அவரை அலட்சியம் செய்தது. அவரைப்பற்றி அது கண்டுகொள்ளவே இல்லை.

காலங்கள் ஓடி மறைந்தன. ஜகதீஷ் சந்திரபோஸ் வேலையை விட்டுப் போகவுமில்லை. சம்பளம் வாங்கவும் இல்லை. அவர் வெள்ளையர்களிடம் இடையறாது போராடினார். கல்லூரி நிர்வாகத்தின் உயர்மட்டக் குழு ஒன்று இருந்தது. அதற்கு அவர் கடிதங்களை எழுதித் தள்ளினார். தனக்கு நீதி வேண்டும் என்று கோரி பெரிய பெரிய ஆங்கிலேய அதிகாரிகளைச் சந்தித்து நீதி கேட்டார். அவருக்கு நீதி மறுக்கப்பட்டது.

ஒரு தனி மனிதன் ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எத்தனை நாட்களுக்குப் போராடுவது? அவரால் தாங்கமுடியாத சூழ்நிலை உருவாகியது. அவருக்குக் கடன்கள் மளமளவென்று ஏறிவிட்டன. வீட்டில் வறுமை தாண்டவமாடத் துவங்கியது. அவர் மன உறுதியைத் தகர்க்கும் காரியங்கள் நடைபெறத் துவங்கின. எனவே அவர் தான் குடியிருந்த பெரிய வீட்டைக் காலி செய்தார். கல்கத்தாவுக்கு வெளியே புற நகர்ப்பகுதியில் ஏழைகளும், எளியவர்களும் குடியிருக்கும் ஒரு பகுதியில் வந்து குடியேறினார். அங்கும் அவருக்குச் சோதனைகள் விடவில்லை.

அவர் கங்கை நதியின் மறுகரையில் குடியிருந்ததால் கல்லூரி போகத் தினந்தோறும் படகில் சென்று வரவேண்டிய நிலை. எனவே ஒரு படகில் தன்னுடைய மனைவியை ஏற்றிக் கொண்டு கங்கையைக் கடப்பார். அப்போது அவர் படகை ஓட்டுவார். அக்கரை சேர்ந்தவுடன் அந்தப் படகை அவர் மனைவி ஓட்டிக்கொண்டு வந்து விடுவார். கல்லூரி விட்டவுடன் அவர் கங்கைக் கரையில் வந்து காத்திருப்பார். அவர் மனைவி படகையோட்டி வந்து கணவருக்காகக் காத்திருப்பார். படகை போஸ் இப்போது ஓட்டுவார் இருவரும் வீடு திரும்புவர். இதுதான் அவர்கள் வாழ்க்கையில் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சி.

இந்தக் கஸ்டங்களை அவர் பட்டுக்கொண்டேதான் கல்லூரிப் பேராசிரியர் தொழிலை ஊதியமின்றி செய்துகொண்டு வந்தார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் உயர் அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவைக் கொண்டு வந்தனர். கல்லூரி நிர்வாகத்தை அந்த அதிகாரிகள் கண்டித்தனர். ஜகதீஷ் சந்திர போசுக்கு தரவேண்டிய பணத்தை உடனடியாகப் பட்டுவாடா செய்யச் சொல்லி உத்தரவிட்டனர். அவர்களும் வேறு வழியின்றிப் பணிந்தனர். அவருக்கு ஆங்கிலேயப் பேராசிரியருக்குத் தரப்படும் சம்பளமும், இதர சலுகைகளும் தரப்பட்டன. 3 ஆண்டுச் சம்பளமும் சலுகைகளும் ஒரே நாளில் வந்து சேர்ந்தன. அவர் போராடிய போரா்ட்டம் வெற்றிபெற்றது.

*"தர்மம் ஒரு நாளில் வெல்லும்" தர்மம் வெல்ல பொறுமை தேவை. துணிவு தேவை, எதையும் தாங்கும் இதயம் தேவை.*

# மாணவர் பக்கம்



## கல்விப் பொது சாதாரண தரப்பரீட்சை
## (றோமன் கத்தோலிக்கம்)
### புதிய பாடத்திட்டத்திற்குரிய மாதிரி வினாத்தாள்

தொகுப்பு: திருமதி. ஜெனிவி ஸ்ரீபன்,
ஆசிரியை,
மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி (தே.பா),
மன்னார்

## பகுதி I வினாக்கள்

**மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1) உலகிற்கு முன்மாதிரிகையான குடும்பம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
1. திருக்குடும்பம் 2. நல்ல குடும்பம்
3. புரிந்துணர்வுள்ள குடும்பம் 4. மகிழ்ச்சியான குடும்பம்

2) திருத்தூதர்பணி 6:1-2 என்ற பகுதியில் திருத்தூதர்களினால் நியமிக்கப்பட்ட திருத்தொண்டர்கள் எத்தனை பேர்?
1. 10 2. 5 3. 7 4. 8

3) "செபிக்கத் தெரியாத மனிதனுக்கு வாழத்தெரியாது" இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
1. புனித அகுஸ்தீனார் 2. புனித சவேரியார்
3. புனித சின்னப்பர் 4. புனித கிறிஸ்தொஸ்தம் அருளப்பர்

4) "கிறிஸ்தவக் குடும்பங்களில் நிலவும் அன்பின் மறைபொருள் கிறிஸ்துவிற்கும், திருச்சபைக்கும் இடையிலுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது" எனக் கூறியவர் யார்?
1. புனித லூக்கா 2. புனித மத்தேயு
3. புனித யாகப்பர் 4. புனித பவுல்

5) எபேசியர் 6:1-2ல் பிள்ளைகளுக்குரிய முதல் கட்டளை எனக் குறிப்பிடப்படுவது எது?
1) தாய்தந்தையை மதித்து நட 2. தந்தையைப் போற்று
3. தாயை மறவாதே 4. தாய் தந்தையை அன்பு செய்.

6) இயேசுவின் பணிவாழ்வு எதன் மூலம் நிறைவுபெற்றது?
1. புதுமைகள் மூலம் 2. குணமாக்குதல் மூலம்
3. சிலுவைப்பலி மூலம் 4. பாடுகள் மூலம்

7) திருச்சபையின் முதல் பாப்பரசர் யார்?
1. 2ம் அருள் சின்னப்பர் 2. புனித பேதுரு
3. புனித பவுல் 4. புனித பசில்

8) ஆண்டவருக்குரிய நாள் என்று கூறப்படுவது எது?
1. ஞாயிறு தினம் 2. உயிர்ப்பு தினம்
3. கிறிஸ்து பிறப்பு தினம் 4. பாப்பரசர் தினம்

9) எமது வாழ்வை நிறைவுபடுத்தும் அருட்சாதனம் எது?
1. திருமுழுக்கு 2. உறுதிப்பூசுதல்
3. ஒப்புரவு 4. நற்கருணை

10) எமது ஆன்மாவில் அழியாத முத்திரை பதிக்கப்படுவது எப்போது?
1. மெய்விவாகத்தின்போது 2. ஒப்புரவு சாதனத்தின் போது
3. திருமுழுக்கின்போது 4. நோயில் பூசுதலின்போது

11) திருமணத்தின் மிகப்பெரிய கொடை யாது?
1. வாழ்க்கைத்துணை 2. பிள்ளைப்பேறு
3. புரிந்துணர்வு 4. நம்பிக்கை

12) இன்று நாம் காண்பதுபோன்ற துறவறக் குழுவாழ்வின் நிறுவுனர் யார்?
1. புனித பக்கோமியுஸ் 2. புனித அத்தனாசியுஸ்
3. புனித வனத்து அந்தோனியார் 4. புனித அகுஸ்தீனார்

13) துறவற வாழ்வுக்குரிய ஒழுங்குகளை எழுதிக்கொடுத்தவர் யார்?
1. புனித அகுஸ்தீனார் 2. புனித இஞ்ஞாசியார்
4. புனித ஆசீர்வாதப்பர் 3. புனித பக்கோமியுஸ்

14) 'Eucharist' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் யாது?
1. புகழ்தல் 2. வாழ்த்துக் கூறல்
3. வணங்குதல் 4. நன்றி செலுத்துதல்

15) தூய ஆவியானவரின் ஆன்மீகக் கொடைகளில் ஒன்று?
1. விசுவாசம் 2. மன்னிப்பு 3. அன்பு 4. இரக்கம்

16) நல்ல பாவ அறிக்கை செய்வதற்கு ஒரு விசுவாசி அறிந்திருக்க வேண்டிய படிமுறைகள் எத்தனை?
1. 4 2. 5 3. 3 4. 8

17) பாவமன்னிப்பைப் பயன்படுத்தியபோது புனித அகுஸ்தீனார் பயன்படுத்திய பதம் யாது?
1. பாவத்தை விட்டுவிடல் 2. பாவத்திற்காக மனம் வருந்துதல்
3. பாவத்தை அழித்தல் 4. பாவத்தை அளித்தல்

18) பாவமன்னிப்பைப் பற்றி நாம் அறிந்துகொள்ளக்கூடிய இறை வசனங்களில் ஒன்று எது?
1. யோவேல் 1:13-20 2. விடுதலைப் பயணம் 12:10
3. தொடக்க நூல் 10:12 4. ஓசே 5:12

19) "வருடத்திற்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வாயாக" என்பது திருச்சபையின் எத்தனையாம் கட்டளை?
1. 5 2. 6 3. 4 4. 2

20) துறவற சபைகள் அனைத்திற்கும் பொதுவான பண்புகளில் ஒன்று எது?
1. கீழ்ப்படிவு 2. செபம் 3. பரித்தியாகம் 4. அன்பு

21) சூரியன், சந்திரன், படைக்கப்பட்டது எத்தனையாம் நாளில்?
1. 2ம் நாளில் 2. 1ம் நாளில் 3. 3ம் நாளில் 4. 4ம் நாளில்

22) "இதோ ஆற்றலின் இறைவன் உயர்ந்தவர் அவருக்கு நிகரான ஆசிரியர் உளரோ" இவ்வார்த்தை வேதாகமத்தின் எப்பகுதியில் கூறப்பட்டுள்ளது?
1. எரேமியா 2. எசாயா 3. யோபு 4. யோவான்.

23) படைப்புப்பற்றி கூறப்பட்டுள்ள மரபுகள் எவை?
1. யாவே, குரு 2. குரு, ஏலோயிம்
3. யாவே, இணைச்சட்டம் 4. ஏலோயிம், யாவே

24) பரிணாமவாதக் கோட்பாட்டை முன்வைத்தவர் யார்?
1. நிக்கலஸ் கொப்பர்நிக்கஸ் 2. கலிலியோ கலிலி
3. ஐசக் நியூட்டன் 4. டார்வின்

25) "இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம்பெண் ஓர் ஆண் மகனைப் பெற்றெடுப்பாள் அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்" எனக்கூறிய இறைவாக்கினர் யார்?
1. எசாயா 2. எரேமியா 3. எசேக்கியேல் 4. சக்கரியா

26) 'கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை' என அழைக்கப்பட்டவர் யார்?
1. புனித ஞானப்பிரகாசியார் 2. தனிநாயகம் அடிகளார்
3. யாக்கோமே கொன்சால்வஸ் அடிகள் 4. புனித சவேரியார்

27) 1638ல் மட்டக்களப்பைக் கைப்பற்றியவர்கள் யார்?
1. போர்த்துக்கேயர் 2. ஒல்லாந்தர்
3. ஆங்கிலேயர் 4. பிரான்சியர்

28) 'புதிய ஆதாம்' என புதிய ஆகமத்தில் குறிப்பிடப்படுபவர் யார்?
1. ஸ்நாபக யோவான் 2. புனித பவுல்
3. ஸ்தேவான் 4. கிறிஸ்து

29) 'இலங்கையின் அப்போஸ்தலர்' என்று அழைக்கப்படுபவர் யார்?
1. புனித சவேரியார் 2. புனித தோமையார்
3. புனித யோசவ்வாஸ் 4. அந்தோனியார்

30) ஆதித்திருச்சபையில் பொதுநிலையினர் இருந்ததாக திருத்தூதர் பணியில் குறிப்பிட்டிருப்பது யாரை?
1. அனனியா, சபிராள் 2. ஆக்கிலா பிரிஸ்கிலா
3. அனனியா ஆக்கிலா 4. ஆக்கிலா, லிதியாள்

31) "அமலோற்பவ இராக்கினி தூதன்" எனும் மாத சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் யார்?
1. ஞானப்பிரகாசியார் 2. யோசவ்வாஸ்
3. யாக்கோமே கொன்சால்வேஸ் 4. தனிநாயகம் அடிகளார்

32) இயேசுவினுடைய போதனையின் மையப்பொருளாக அமைவது? 1. செபம் 2. தபம் 3. இறையரசு 4. மனமாற்றம்

33) "தொடக்கத்தில் வாக்கு இருந்தது, அவ்வாக்கு கடவுளோடு இருந்தது, அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது" இவ்வார்த்தை காணப்படும் வேதாகமப் பகுதி யாது?
1. மத்தேயு 2. மாற்கு 3. லூக்கா 4. யோவான்

34) "புன்னகையே சமாதானத்தின் ஆரம்பம்" எனக் கூறியவர்?
1. மரியகொறற்றி 2. அன்னை திரேசா
3. காந்தி 4. விவேகானந்தர்

35) சர்வதேச கத்தோலிக்க இளைஞர்களைத் திருத்தந்தை இவ்வருடம் (2008) எங்கு சந்தித்தார்?
1. கனடா 2. ஜேர்மனி 3. உரோம் 4. அவுஸ்ரேலியா

36) இவ்வருடம் திருத்தந்தையால் இளைஞர்களுக்கு விடுக்கப்பட்ட அறைகூவல் யாது?
1. இளைஞர்களே! செபியுங்கள்
2. இளைஞர்களே! தபம் செய்யுங்கள்
3. இளைஞர்களே ! விவிலியத்தைக் கையிலேந்துங்கள்
4. இளைஞர்களே! திருச்சபையின் கட்டளைகளை கடைப்பிடியுங்கள்

37) "மனிதன் இவ்வுலகிலும் மறு உலகிலும் மகிழ்ச்சியாக வாழ்வதே இறைவனுக்கு மகிமை" எனக் கூறியவர் யார்?
1. புனித ஜெரோம் 2. புனித அகுஸ்தீனார்
3. புனித இரேனியுஸ் 4. புனித அத்தனாசியுஸ்

38) இயேசுவின் அளவு கடந்த அன்பைப்பற்றிக் கூறும் திருமுகம் யாது?
1. எபிரேயர் 2. உரோமையர்
3. பிலிப்பியர் 4. கொரிந்தியர்

39) புனித பவுல் மேற்கொண்ட மறைத்தூதுப் பயணங்கள் எத்தனை? 1. 1 2. 2 3. 3 4. 4

40) "இருக்கிறவர் நாமே" என இறைவன் தன்னை யாருக்கு வெளிப்படுத்தினார்?
1. ஆபிரகாமுக்கு 2. யோசுவாவிற்கு
3. யாக்கோபுவிற்கு 4. மோயீசனிற்கு

**பகுதி 1 விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 11.2 | 21.4 | 31. 1 |
| 02.7 | 12. 1 | 22.3 | 32. 3 |
| 03.4 | 13.3 | 23. 1 | 33. 4 |
| 04. 4 | 14. 4 | 24. 4 | 34. 2 |
| 05. 1 | 15. 1 | 25. 1 | 35. 4 |
| 06. 3 | 16. 2 | 26. 3 | 36. 3 |
| 07. 2 | 17. 3 | 27. 2 | 37. 1 |
| 08. 1 | 18. 1 | 28. 4 | 38. 4 |
| 09. 2 | 19. 4 | 29. 3 | 39. 3 |
| 10. 3 | 20. 1 | 30. 2 | 40. 4 |

# முயற்சி இல்லாதவரின் உளறலே சந்தர்ப்பமின்மை....

## மன்னார் மண்ணின் மைந்தர் - இசையமைப்பாளர் விமல்ராஜ்

*"கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பார்கள். அந்த வகையில் இசையினை முறைப்படி கற்றதால் தென்னிந்தியாவில் தலைநிமிர்ந்து நிற்கிறார் எம் நாட்டின் இசையமைப்பாளர் விமல்ராஜ். மன்னாரைச் சேர்ந்த பொதுநிலைப்பணியாளர் திரு. ஜே. பெஞ்சமின் அவர்களின் மகனான விமல்ராஜ் சங்கீதம் படிப்பதற்காக சென்னை சென்றார். சங்கீதத்தில் எம். ஏ. பட்டதாரி ஆகியும் விட்டார். பிறகென்ன, வழமைபோல் பாடுவதற்கு சந்தர்ப்பம்தேடி இசையமைப்பாளர்களை நாடியிருக்கின்றார். ஒவ்வொருவரும் ஏதேதோ சாட்டுக்கள் சொல்லித் திருப்பியனுப்பியதால் தன்னுடைய திறமையை நம்பி, தானே இசையமைப்பாளராகிவிட்டார். அண்மையில் 'இசை உலகம்' என்ற சஞ்சிகைக் குழுவினர் சென்னை சென்றபோது இவரைச் சந்தித்தனர். அவர்கள் இவருடன் நடாத்திய நேர்காணலை அப்படியே தருகின்றோம். நமது நாட்டுக் கலைஞன் - நமது மண்ணின் மகன் ஒருவன் சென்னையில் தனக்கென ஒலிப்பதிவுக் கூடம் அமைத்து தனது திறமையை வெளிக்காட்டிக் கொண்டிருப்பதென்பது நமக்கெல்லாம் பெருமைதானே!*

'இப்படிக்கு என் காதல்', 'செந்தாழம் பூவே', 'காதலிக்கலாமா?', 'பரவசம்', 'நாங்க ரொம்ப நல்ல பசங்க', ஜெய்க்கொடி' போன்ற திரைப்படங்களுக்கு இவர் இசையமைத்திருக்கின்றார். இதில் சில படங்கள் விரைவில் வெளிவரவிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான். 'காதலிக்கலாமா..' இந்தப்படத்தின் இசைப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இசையமைப்பாளர் பெஞ்சமின் விமல்ராஜ் அவர்களை அவரது கலையகத்திலேயே சந்தத்தோம்...!

**"எப்படி தமிழகத்தில் நீங்கள்....?"**

"இசையினை முறைப்படி கற்பதற்காகத்தான் இங்கே வந்தேன். திரு. சீதாராம சர்மா அவர்களிடம் 8 வருடங்கள் சங்கீதம் படித்தேன். பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் (மெட்ராஸ் யுனிவர்சிட்டியில்) M.A. Music படித்தேன். முறைப்படி சங்கீதத்தினைக் கற்றதால் அதனைத் தகுந்தமுறையில் பயன்படுத்த முயற்சித்தேன். இதன் வெளிப்பாடாக பல பக்திப் பாடல்களை வெளியிட்டேன். என்னுடைய சொந்தத் தயாரிப்பிலில்லாமல் பிறரின்



வேண்டுகோளில் பல பாடல்களை உருவாக்கியிருக்கிறேன். இலங்கையின் மடுமாதாவிற்குக்கூட பல பாடல்களை பதிவுசெய்து கொடுத்திருக்கிறேன். இந்தப் பாடல்களைக் கேட்ட தீபராஜ் அவர்கள் எனக்கு திரைப்படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார். தேவயானி, லிவிங்ஸ்டன் நடிப்பில் உருவாகிய 'செந்தாழம் பூவே' திரைப்படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பே அது. இதில் ஈழத்துக் கலைஞர் வேந்தனும் நடித்திருந்தார். இதனைத் தொடர்ந்து என்னுடைய திறமையினை இனங்கண்ட பலர் எனக்கு சந்தர்ப்பத்தினை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்..."

**"பொதுவாக இலங்கைக் கலைஞர்களுக்கு தமிழகத்தில் சந்தர்ப்பம் வழங்கப்படுவது குறைவு என்று குற்றம்சாட்டுகிறார்களே...?"**


(தொடர்ச்சி 10ம் பக்கம்...)

# புனித பவுலைவிட அதிகமாகச் செய்தவர்கள் யாருமில்லை!

**29.06.2008 தொடக்கம் 28.06.2009 வரையான ஒரு வருட காலத்தை புனித பவுலின் ஆண்டாகத் திருத்தந்தை பிரகடனப்படுத்தியுள்ளார். அதனை முன்னிட்டு இச்சிறப்புக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது!**

மூலம் : 'New Leader' தமிழாக்கம் : அருட்சகோதரி கனிஷியஸ் (தி.கு.) மன்னார்.





ஆதித்திருச்சபைத் தலைவர்களில் புனித பவுலிலும் பார்க்கக் கிறிஸ்தவ செய்திகளை விரிவாக எடுத்துரைத்தவர்கள் வேறு யாருமில்லை. வளமான உள்ளுணர்வுடனும், துணிகரமான ஆர்வத்துடனும் கிறிஸ்துவைப்பற்றிப் போதிப்பதில் அவர் சலிப்பின்றி ஈடுபட்டார். இன்றைய திருச்சபை இந்த அசாதாரண அப்போஸ்தலருக்கு அளவிடற்கரியவிதத்தில் நன்றிக்கடன் - பட்டுள்ளது. "சவுல் என்று ஒரு மனிதன் முதல் கிறிஸ்தவ மறைசாட்சியான புனித முடியப்பர் கல்லெறிந்து கொல்லப்படுவதற்கு உடந்தையாயிருந்தார் என்று திருத்தூதர் பணி 8:1ல் கூறப்பட்டுள்ளது. இவர் தாசுஸ் நகரில் (உரோமைக் குடியேற்ற நாட்டின் ஒரு பகுதி) யூத பெற்றோருக்குப் பிறந்தவர். யூத, உரோமையக் குடிமகன். பெயர் பெற்ற பரிசேயனும், யூத தலைமைச்சங்க உறுப்பினர்களுமான கமாலியேலிடம் ஜெருசலேமில் கல்வி பயின்றார் (தி தூ.ப.5:34).

யூத மக்களைத் தெரிந்தெடுத்து அவர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட ஒரே இறைவனுக்கான மதத்தின் மட்டில் நிறைந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஏனைய அனைத்து மக்களையும், கிறீஸ்தவர்களையும்கூட "அஞ்ஞானிகள்" என்றும், தவறாக வழிநடத்தப்பட்ட மக்கள் என்றும் கருதினார். இந்தத் "தெய்வ நிந்தனைகளுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்னும் நோக்கில் "கொலை மிரட்டல்களை விடுத்து அவர்களுக்குப் பயத்தை ஏற்படுத்தினார்" ஆண்களையும், பெண்களையும் சிறைக்கூடங்களுக்கு இழுத்துச் செல்வதன் மூலம் திருச்சபையை அழிக்க முயற்சித்தார்." (தி.தூ.பணி 8:3,9:1) யூதக் கிறிஸ்தவர்களைச் சங்கிலிகளால் பிணைத்து ஜெருசலேமிற்குக் கொண்டுவருவதற்கு தமஸ்கு செபக்கூடத் தலைவர்களிடம் கட்டளைக் கடிதம் பெற்றுச்சென்றார் (தி.தூ.ப.9:2).

ஆனால் தமஸ்கு நகருக்கான அந்தப்பயணத்தின்போது சவுலின் வாழ்வு தலைகீழாக மாறியது. "வானத்திலிருந்து தோன்றிய ஓர் ஒளி அவரைச் சூழ்ந்துகொண்டது. அவர் தரையில் விழுந்தார். "ஆண்டவரே நீர் யார்?" என்று கூக்குரலிட்டார். அதற்கான பதில் "நீ துன்புறுத்தும் இயேசு நானே" (தி.தூ. ப.9:3-6) என்பதுதான்.

இந்தப் பதிலின் மூலம் சவுல் வாழ்க்கை முழுவதும் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு விசேட உள்ளுணர்வைப் பெற்றார். அதாவது அவர் துன்புறுத்தும் திருச்சபை உண்மையிலேயே கிறிஸ்துவின் உடல், அவரிடமிருந்து பிரிக்க முடியாத ஒன்று என்பதை உணர்ந்து கொண்டார்.

"திருச்சபையிலிருந்து இயேசுவைப் பிரிக்க முடியாது" என்னும் பவுலினது பட்டறிவு (பவுல் என்பது சவுல் என்பதன் கிரேக்க சொல்) அவரது படிப்பினைகள் அனைத்தினதும் அத்திவாரமாய் மாறியது. இது முதற்கொண்டு அவர் தனது மடல்களில் எதனை வலியுறுத்தினாலும் அவரது முதல் எண்ணம் எப்பொழுதும் கிறிஸ்துவினது உடலின் நன்மைக்காக என்பதாகவே அமைந்திருந்தது. " நீங்கள் கிறிஸ்துவின் உடல், ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புக்கள்." (1கொரி. 12:27). "திருச்சபையாகிய உடலுக்குத் தலை கிறிஸ்துவே" (கொலோ1:18). "அன்பின் அடிப்படையில் உண்மை பேசி தலையாகிய கிறிஸ்துவைப் போன்று எல்லாவற்றிலும் நாம் வளர வேண்டும் (எபேசி. 4:15). கிறிஸ்துவின் உடல் தனது உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டுமெனில் திருச்சபைக்குள் ஐக்கியம் அவசியமானது என்பதைப் புனித பவுல் புரிந்துகொண்டார். கிறிஸ்துவினது உடலின் உறுப்பினர்கள் நாளாந்தம் தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை வாழும்பொழுதுதான் இந்த ஐக்கியம் சாத்தியம். அதனால்தான் அவர் எழுதினார் "கட்சி மனப்பான்மைக்கும், வீண் பெருமைக்கும் இடம்தர வேண்டாம்" மனத்தாழ்மையோடு மற்றவர்களை உங்களிலும் உயர்வாகக் கருதுங்கள்"(பிலி. 2:3). தாழ்மையின் மாதிரிகையாகத் தந்தை இயேசுவை முன்மொழிந்தார். (பிலி. 2:5-11). பவுலின் மடல்கள் கிறிஸ்தவத்திற்கு இன்றியமையாதவை. இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வும், படிப்பினைகளும் மனுக்குலத்திற்குத் தரும் சிறந்த செய்திகளை அவர் இம்மடல்கள் மூலம் எமக்குத்தருகின்றார். அவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று அம்சங்களை நாம் அலசிப்பார்ப்போம்.

## 1. விசுவாசத்தால் மீட்பு

பவுலால் ஏற்படுத்தப்பட்ட கிறிஸ்தவக் குழுமங்கள் விசேடமாக அவர் போதித்த நற்செய்தியை விசுவசித்த யூதர் அல்லாதவர்களைக் (புறசாதியாரைக்) கொண்டிருந்தது. ஆனால் பின்னர் பவுல் இல்லாத வேளையில் தவறான படிப்பினைகள் உள்நுழைந்து, நற்செய்தியை தூய்மையற்றதாக்கி, கிறிஸ்தவர்கள் மீட்கப்படவேண்டுமெனில் விருத்தசேதனம் செய்யப்படல் வேண்டும் என்று போதித்தது. யூத மதத்தினரின் இந்தத் தவறான படிப்பினைகளுக்கு எதிராகப் பவுல் செயற்பட்டதோடு, கிறிஸ்தவ செய்திகளின் மூலாதாரமான "நாம் இறைவனுக்கு யாது செய்கிறோம் என்பதிலும் பார்க்க இறைவன் எமக்கு யாது செய்துள்ளார்." என்பதன் மட்டில் கிறிஸ்தவர்கள் கொண்ட விசுவாசத்தை நிருபித்து அதனை வலியுறுத்தினார் (உரோ. 3:23இ 5:8). கலாத்தியாவில் வாழ்ந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் இந்தத் தவறான படிப்பினைகளால் அதிகம் தாக்கப்பட்டனர். அவர்களுக்குப் பவுல் எழுதியது : "உங்களை மயக்கியோர் யார்? தூய ஆவியால் நீங்கள் தொடங்கிய வாழ்க்கையை இப்பொழுது வெறும் மனித முயற்சியால் நிறைவு செய்யப்போகிறீர்களா?" (கலா 3:3). இத்தகைய அழுத்தம் நிறைந்த பவுலின் படிப்பினைகளை அடிப்படையாகக்கொண்டு, மீட்பு என்பது இயேசுக்கிறிஸ்துவின் பாடுகள், மரணம் ஆகியவற்றின் மட்டில் கொண்ட விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொண்ட அருளின் கொடை என்று திருச்சபை எப்பொழுதும் போதிக்கின்றது. இது எமது சிறந்த பணிகள் மூலம் அன்றேல் எமது கையளித்தல் நிறைந்த வாழ்வு மூலம் வெளிப்படுத்தப்படுகிறது (எபேசி. 2:8-10 இ, உரோ. 3:26).

## 1. சிலுவையின் மையம்:

கொரிந்து நகரக் கிறிஸ்தவர்கள் அநேகர் ஆன்மீகக் கொடைகளால் வளப்படுத்தப்பட்டார்கள். இருந்தும் கிறிஸ்துவின் சிலுவையை அசட்டை செய்து, அவரது உயிர்ப்பில் மகிழ்ச்சி கொள்ளும் சோதனைக்கு உட்பட்டனர். கிறிஸ்தவ வாழ்வின் மையம் சிலுவையே என்பதைப் பவுல் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார். "நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி பறைசாற்றுகின்றோம்." (1 கொரி 22-24). நான் உங்களிடையே இருந்தபோது மெசியாவாகிய இயேசுவைத் தவிர, அதுவும் சிலுவையில் அறையப்பட்ட அவரைத் தவிர வேறு எதையும் அறிய வேண்டும் என்று நினைக்கவில்லை: (1கொரி.2:1) "நான் கடவுளுக்காக வாழ்கிறேன்: கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்" (கலா.2:19-21) : நானோ நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறெதிலும் பெருமை பாராட்ட மாட்டேன்" (கலா.16:19). சீடன் கிறிஸ்துவுடன் கொள்ளும் ஐக்கிய வாழ்வுக்கு, அதாவது கிறிஸ்தவ வாழ்வுக்கு துன்பம் அத்தியவசியமானதும், அர்த்தம் நிறைந்ததாகவும் உள்ளது. "கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை என் உடலில் ஏற்று நிறைவு செய்கிறேன்." (கொலோ 1:24-27). கிறிஸ்துவின் "வாரிசாகிய" ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது இவ்வுலக வாழ்வில் துன்பத்தை அனுபவித்தல் என்னும் "பங்கை" நிறைவு செய்வதற்காகப் பரிசுத்த ஆவியால் அழைக்கப்பட்டு, வலுவூட்டப்படுகிறான். (உரோ.8:17).

## 2. ஆவியில் புதுவாழ்வு

கிறிஸ்தவர்கள் ஆவியில் புதிய வாழ்வைப் பெறுகிறார்கள். (உரோ. 8:15-17, கலா 4:4-7). ஆகவே கிறிஸ்தவர்கள் புதிய ஆன்மீக சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். சுதந்திரம் என்னும்போது அது அனுமதி அல்ல. "கடவுள நமக்குக் கோழை உள்ளத்தினையல்ல, வல்லமையும், அன்பும், கட்டுப்பாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார்." (2திமொ. 17) கிறிஸ்தவ சுதந்திரம் என்பது ஒருவர் தான் விரும்பியவாறு செயற்படுவதல்ல மாறாக பரிசுத்த ஆவிக்குக் கீழ்படிந்த வாழ்வை வாழ்வதும் "நீங்கள் உரிமை வாழ்வுக்கு அழைக்கப் - பட்டிருக்கிறீகள்: அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள்." (கலா.5:13). புதிய வாழ்வு அன்றேல் ஆவிக்குரிய வாழ்வு என்பது கிறிஸ்தவர்களின் நடத்தையை மாற்றியமைத்தல் என்று அர்த்தம் கொள்ளப்படும். அதனால் அவர்கள் சாதாரணமாக ஆவியின் கனிகளை வெளிப்படுத்தி ஊனியல்புக் கெதிராக வெற்றியுடன் செயல்படுவார்கள் (கலா 5:19-23, உரோ 13:12). ஆவியில் இந்தக் கொடை "தோழமை"யினால் உருப்பெற்று அவர்கள் ஒருவர் ஒருவருக்கு அன்பின் சேவைபுரியும் கிறிஸ்தவ குழுமங்களாக வாழ அவர்களுக்கு வலுவூட்டுகிறது. (கொலோ.3:12-14). ஆவியானவர் பொதுநன்மைக்காக எண்ணிறைந்த அருட்கொடைகளைப் பொழிகிறார் (1 கொரி.12-14இ உரோ12). ஆவியின் இந்த வாழ்வு கிறிஸ்தவர்களைத் தூயவர்களாய் வைத்திருப்பதோடு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அவர்களை ஆயத்தம் செய்கிறது (1 தெச.5:23-24).

முடிவாக செங்கடலின் தண்ணீரை இரண்டாகப் பிரித்த இறைவனின் மாபெரும் செயல்களை மட்டுமல்ல திருச்சபையை அழிக்கத் தேடியவரான சவுலில் தீவிர மனமாற்றத்தை ஏற்படுத்தி பவுலாகவும், இயேசுக்கிறிஸ்துவின் மாபெரும் அப்போஸ்தலராகவும், அவரது அன்பராகவும் மாற்றியமைத்ததை நினைவுகூருவோம். அவர் போதித்த முழுமையான நற்செய்தியைப் புதிய விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வோம். விசுவாசத்தினால் மீட்பைப் பற்றி அவர் அழுத்திக்கூறியவற்றுக்குத் தெளிவான சான்று பகரும் விதத்தில் எமது கிறிஸ்தவ வாழ்வை மாற்றியமைப்போம். விசுவாசத்தின் மூலம் மீட்பு, சிலுவையே மையம், ஆவியில் வாழ்வு ஆகிய அனைத்தும் உயிர்த்த ஆண்டவராகிய கிறிஸ்துவினது உடலிலிருந்து பிரிக்கமுடியாத ஒரே பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபையின் அங்கத்தவர்களின் வாழ்வில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

# முயற்சி இல்லாதவரின் உளறலே........ (09 பக்க தொடர்ச்சி)

"முயற்சி இல்லாதவர்களின் உளறல்தான் இவை. ஈழத்துக் கலைஞர்கள் பலர் இங்கு கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இலகுவில் அந்த இடத்தினை அடைந்துவிடவில்லை. எத்தனையோ அடிகளைப்பட்டு, முயற்சித்துத்தான் தமது திறமையினை நிரூபித்திருக்கிறார்கள். நான்கூட ஆரம்பத்தில் பாடுவதற்காக எத்தனை இடங்களுக்கு ஏறி இறங்கியிருக்கிறேன் தெரியுமா? ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்லி திருப்பியனுப்பியிருக்கிறார்கள். இந்த இடத்தில் அவர்கள் நான் ஈழத்தவன் என்று பார்க்கவில்லை. போட்டி நிறைந்த உலகில் நாமும் ஒரு போட்டியாளன் என்றுதான் பார்த்தார்கள். பின்னர் என்னுடைய முயற்சியினால்தான் நான் இன்று இசையமைப்பாளனாகியிருக்கின்றேன். ஆனால் ஒரு சிலர் இரண்டொரு முயற்சிகள் செய்துவிட்டு எமக்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்று உளறுவது தவறானது என்பது என்னுடைய கருத்து..."

**"போட்டி நிறைந்த தமிழகத்திலே உங்களால் எப்படி வேலை வாங்கமுடிகிறது....?"**

"இந்தத்துறைக்கு வந்த புதிதில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. இருப்பினும் முறைப்படி சங்கீதம் கற்றிருந்ததால் எனக்கு அவர்களிடம் வேலை வாங்குவது பெரிய விடயமாகத் தெரியவில்லை. இங்குள்ள மூத்த கலைஞர்கள்கூட புதிய இசையமைப்பாளரிடம் பணியாற்ற வந்துவிட்டால் புதியவர்கள் சொல்வதைத் தட்டாமல் செய்வார்கள். தவிர்க்க முடியாமல் பிழைகள் இருப்பின் மனது புண்படாமல் சுட்டிக்காட்டுவார்கள். அந்த நல்ல உள்ளங்களுடன் வேலை செய்வதென்பது கஷ்டமான காரியமாக எனக்குத் தெரியவில்லை..."

**"பல இயக்குனர்களுடன் பணியாற்றி இருக்கிறீர்கள்... இந்த அனுபவம் பற்றி...?"**

"எனக்கு அந்த அறிமுகத்தினால் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதில்லை. புதிது புதிதாக என்னை தயார்ப்படுத்திக் - கொள்ளக்கூடிய சந்தர்ப்பமாகவே நான் அதைக் கருதுகிறேன். ஒவ்வொரு இயக்குனரும் ஒவ்வொரு ஆலோசனைகளை வழங்குவார்கள். அவற்றினை நாங்கள் திறம்படச் செய்யும்போது முழுத்திருப்தி ஏற்படுகிறது. இயக்குனர்களுக்கு தேவையானதை நாங்கள் சரியாகச் செய்து கொடுப்பதென்பது ஓர் நல்ல இசையமைப்பாளனின் கடமையென நினைக்கின்றேன்..."

**"சாஸ்திர சங்கீதம் கற்ற நீங்கள் அண்மையில் சென்னை சென்றபோது இதுவரை வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தோடு எப்படி ஒன்றியிருக்கிறீர்கள்....?"**

"இசையமைப்பாளனுக்கு சங்கீத அறிவென்பது அடிப்படையானது. இருப்பினும் இன்றைய சூழ்நிலையில் வளர்ந்துவரும் தொழில் நுட்பத்திற்கேற்ப நம்மையும் நாம் வளர்த்துக்கொண்டால்தான் முழுமையாகச் செயற்பட முடியும். ஆகையினால் நானும் தற்போதைய தொழில்நுட்பங்கள் அனைத்தையும் ஓரளவு கற்றுத் தேர்ந்திருக்கிறேன். ஏற்கனவே சங்கீதத்தில் பட்டம் பெற்றிருப்பதால், நவீன தொழில்நுட்பத்துடன் சேர்ந்து அதைப் பயன்படுத்தும்போது புதுப்பொலிவு பெறுகிறது. ஆகையினால் கட்டாயமாக இசை அறிவுடன் தொழில்நுட்ப அறிவும் அவசியம் என்பது என்னுடைய கருத்து..."

**"ஈழத்து படைப்புகளில் மீண்டும் ஈடுபடுவீர்களா...?"**

"நிச்சயமாக... நான் ஈழத்தில் பிறந்தவன் என்பதை ஒருபோதும் மறந்துவிடவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் ஈழத்துப் படைப்புக்களுக்கு முன்னுரிமை கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். தொடர்ந்தும் என்னாலான உதவிகளை ஈழத்துக் கலைஞர்களுக்கு வழங்குவேன். என்னுடைய இசையில் பாடுவதற்கு இலங்கையின் திறமையான கலைஞர்களை நான் பயன்படுத்துவேன். திறமையுள்ள கலைஞர்கள் என்னைத் தொடர்புகொண்டால் அவர்களது திறமையை அறிந்து சந்தர்ப்பம் வழங்குவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்..."

**"எங்களுடன் வேறு ஏதாவது பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்களா...?"**

"எனக்குக் கிடைத்த இயக்னநர்கள் அனைவரும் திறமையானவர்கள். சத்தியசீலன், நேசமணி, பழனி, தனசேகர் போன்ற இயக்குநர்களுடன் பணியாற்றியிருக்கிறேன். எவரும் என்மீது வேற்றுமை காட்டவில்லை. நட்புடன்தான் பழகுவார்கள். இவர்கள் இன்னமும் வெற்றிக்காக போராடிக்கொண்டிருக்கிற இயக்குனர்கள். அவர்கள் வெற்றிப்பட இயக்குநர்களாக மாறும்போது நிச்சயமாக நானும் அவர்களுடன் இருப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஆகையினால் சென்னையில் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என ஈழத்துக் கலைஞர்கள் இனிமேல் சங்கடப்படத் தேவையில்லை. உங்களுக்கு சந்தர்ப்பத்தினை வழங்க என்னைப்போன்ற ஏராளமான கலைஞர்கள் இங்கிருக்கிறார்கள் என்பதை மனதில்கொண்டு முயற்சி செய்யுங்கள். நிச்சயமாக வெற்றி உங்களைத் தேடிவரும்..."

இன்னமும் வெளிவராத 'காதலிக்கலாமா..' திரைப்படத்தின் பாடல்களை அப்படத்தின் இயக்குனரின் அனுமதியுடன் போட்டுக் காண்பித்தார் விமல்ராஜ். பாடல்களை கேட்டு முடிந்ததும் படத்தின் இயக்குனர் 'எப்படி இருக்கிறது...' எனக் கேட்டார். எங்களினால் பதில் சொல்ல முடியவில்லை. காரணம் ஒருகணம் மெய்சிலிர்த்து நின்றதனால். எமது கலைஞன் சென்னையில் சாதிக்கின்றான் என்ற பெருமையுடன் அவரிடமிருந்து விடைபெற்றோம்.

**நேர்காணல், படங்கள் மதுமதி, நன்றி: 'இசை உலகம்'**

# கறித்தாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமா இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்: அதிவந்தனைக்குரிய ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

## தேசிய சமாதான நிகழ்ச்சித்திட்டம் - National Peace Programme

இயக்குனர்: அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


**"மலைகள் நிலைசாயினும், குன்றுகள் இடம்பெயரினும், உன்மீது நான்கொண்ட பேரன்போ நிலைசாயாது. என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது என்கின்றார் உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர்"** (எசாயா 54:10)

### மன்னார் மறைக்கோட்ட பங்குகளின்

## அன்பியப் பணியாளர்களுக்கான பயிற்சிப்பாசறை

"அன்பிய வாழ்வினூடாக கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியை நோக்கிய பயணம்" என்ற மறைமாவட்டத் திட்டமிடல் கொள்கையின் அடிப்படையில் மேற்படி அன்பிய பணியாளர்களுக்கு வலுவூட்டும் பயிற்சிப்பாசறை 07.06.2008 அன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணிவரை அன்பிய தொடர்பகத்தில் நடைபெற்றது.

வாழ்வுதய நீதி சமாதானக் குழுவுடன் அன்பியத் தொடர்பகமும் இணைந்து இப்பயிற்சியை நெறிப்படுத்தினர். அன்பிய இயக்குனராக பொறுப்பேற்றுள்ள அருட்பணி. மில்ரன் டக்ளஸ் லோகு, முன்னாள் அன்பிய இயக்குனர் அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா, திரு. சி. எம். ஏ. ஜெயதாஸ் ஆகியோர் உரைகள் மற்றும் பயிற்சிகளை வழங்கினர்.

மக்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் பிரச்சினைகள், குடும்பங்களில் குடிவெறிப் பழக்கங்கள், திருமண திருவருட்சாதனங்களை பெறாதிருப்போர் போன்றவற்றோடு தொடர்புடையவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க அன்பியப் பணியாளர்கள் முன்வந்து செயற்பட வேண்டும். சமய, சமூக, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டு இறைவார்த்தையின் ஒளியில் விடுதலை உணர்வு பெற்றுள்ள அமெரிக்கா, பிறேசில் போன்ற நாடுகள் முன்னுதாரணங்களாக உள்ளன என அன்பிய இயக்குனர் தெளிவுபடுத்தினார்.

அன்பியப் பணிகள் புரிவதில் "கடவுளுக்கு மனமுவந்து நேரம் கொடுப்போம். துன்பத்தில் உறுதியாய் நின்று செபிப்பதில் நிலையாயிருந்து இறைவார்த்தை வழங்கும் பண்புகளுடன் சாட்சியமாக வாழ்வோம்" என்னும் கருப்பொருளில் அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் தனது உரையை நெறிப்படுத்தினார்.

'அமைதியை நற்செய்தியாக அறிவித்தார்". (எபே 2:13-18) என்னும் தலைப்பில் திரு. ஜெயதாஸ் அவர்கள் உரையாற்றினார். அமைதியின் தூதுவர்களாக, கருவிகளாக செயற்பட இறைவார்த்தையே நமக்குப் பலம். மனித உள்ளங்கள், இல்லங்கள், அயலவர் உறவுகளில் அமைதி, சமாதானம் தங்கி வளர இறைவார்த்தையைப் பணியாளர்கள் தொடர்ந்து வாசித்து அதை வாழ்வாக்க வேண்டும். "அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதி என்னும் கனி விளைகின்றது" (யாக்கோபு 3:18) அமைதி, சமாதான, நீதி வாழ்வை அன்பியங்களில் விதைத்து அறுவடை செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பங்குகளின் அன்பிய இணைப்பாளர்களுக்கு வலுவூட்டல் பயிற்சி நெறிகளை அன்பிய ஆணைக்குழுவுடன் இணைந்து வாழ்வுதய நீதி, சமாதான பிரிவினர் தொடர்ச்சியாக மாதாந்தம் செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் மறைக்கோட்டப் பங்குகளின் அன்பிய இணைப்பாளர்கள் 48பேர் இதில் பங்கெடுத்துப் பயன்பெற்றார்கள். வாழ்வுதய அனுசரணையுடன் உணவு வகைகள் பகிரப்பட்டன. பங்குகளில் "அன்பிய வாழ்வின் நிலை" குறித்துப் பங்குப் பிரதிநிதிகள் பகிர்ந்து கொண்டனர். "பங்குகளில் 7 படிமுறை இறைவார்த்தைப் பகிர்வு பற்றிய பயிற்சிகளை அன்பிய மத்திய குழு வழங்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டது. அன்பிய இயக்குனருடன் மத்தியகுழுவும் இணைந்து கிராமங்களில் அன்பிய வாழ்வு குறித்த விளக்கம், பயிற்சிகளை பங்குகளுக்கு வழங்க வேண்டும் எனவும் பிரதிநிதிகள் கருத்துரை வழங்கினர். பங்குகளின் அன்பிய இணைப்பாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கவும் இல்லச் சந்திப்பிற்காகவும் 15 பேர் கொண்ட மத்தியகுழு உறுப்பினர்கள் தாங்களாக பணிபுரிய முன்வந்தனர். இறுதி நன்றிச்செபத்துடன் அன்பியத் தொடர்பக செயலரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவெய்தியது. ●

### வவுனியா பிரதேச கிராமிய விழிப்பூட்டல் குழுவுக்கு

## செங்கல் உற்பத்திக்கான கடன்



செங்கல் உற்பத்திக்கான உபகரணங்களை வழங்கும் சிதம்பரபுரம் கிராம அலுவலர்



செங்கல் உற்பத்திக்கான உபகரணங்களை வழங்கும் கறித்தாஸ் வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ்.ஜே. பெப்பிசோசை அடிகளார்

கறித்தாஸ் வாழ்வுதயத்தின்கீழ் மன்னார் மறைமாவட்டத்தில் 154 கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் இயங்கிவருகின்றன. இக்குழுக்களில் மொத்தமாக 2874 உறுப்பினர்கள் அங்கத்துவம் வகித்து வருகின்றனர். இக்குழுக்கள் கிராம மட்டங்களில் சமூக, பொருளாதார, கலை, ஆன்மீக செயற்பாடுகளை முன்னெடுத்து செயற்படுகின்றனர்.

இவர்களுள் வவுனியா பிரதேச அமைப்பில் சிதம்பரபுரம் கிராமத்தில் உள்ள "மொட்டும் மலரும்" என பெயர்கொண்டு இயங்கும் கிராமியக் குழுவுக்கு பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு செங்கல் உற்பத்தி செய்வதற்கு 150,000/= பெறுமதியில் செங்கல் உற்பத்தி செய்வதற்கான தளபாடங்கள், உபகரணங்கள் போன்றவை கடன் அடிப்படையில் கறித்தாஸ் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளது. இவ் உபகரணங்களை கறித்தாஸ் வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் வழங்கிவைத்தார்

இவ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சிதம்பரபுரம் பொது மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மேற்படி கிராமத்தின் கிராம அலுவலர், கிராம அபிவிருத்தி சபைத் (R.D.S) தலைவர், வவுனியா பிரதேச கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் மக்கள் அமைப்புத் தலைவர் திரு ப. பழனியப்பன், கிராமிய விழிப்பூட்டல் பிரிவு இணைப்பாளர் அ. அன்ரன் ராஜகாரியர் , வவுனியா பிரதேச கிராமிய விழிப்பூட்டல் பிரிவு வெளிக்கள அலுவலர் திரு. A. விமலநாதன் மற்றும் கிராமிய குழு உறுப்பினர்கள் எனப் பலரும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. ●

## குடும்பத்தில் சமாதானம்

### வாழ்வுதயக் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வு

குடும்பம் ஒரு கதம்பம், குடும்பம் ஒரு கோயில், குடும்பம் ஒரு நாடக அரங்கம் என்றெல்லாம் நம் முன்னோர் கூறியுள்ளதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆம் அது உண்மைதான். ஒரு குடும்பம் சாந்தியுடனும், சந்தோஷத்துடனும் வாழ, மற்றைய குடும்பம் சண்டை சச்சரவுகளுடன் வாழ்வதை நாம் எம் சமுதாயத்தில் கண்டிருக்கின்றோம். மனிதன் சந்தோஷத்துடன் வாழவேண்டுமென்றால் அவன் குடும்பத்தில் சமாதானம் நிலவவேண்டும்.

இதனை வலியுறுத்தும் வகையில் வாழ்வுதய சமாதானப்பிரிவும் இசைமாலைத்தாழ்வு கிராமிய விழிப்பூட்டல் குழுவும் இணைந்து குடும்பப் பெண்களுக்கான "குடும்பத்தில் சமாதானம்" என்னும் தொனிப்பொருளில் சமாதான செயலமர்வு ஒன்றினை கடந்த 13.06.2008 வெள்ளிக்கிழமை இசைமாலைத்தாழ்வு பலநோக்குமண்டபத்தில் நடாத்தியது.

முதல் நிகழ்வாக பிரதேச ஊக்குவிப்பாளர் சுஜீவனின் ஆரம்ப உரை இடம்பெற்றது. தொடர்ந்து சமாதானப் பிரிவு இணைப்பாளர் "வாழ்வும் வழியும்" என்னும் தலைப்பில் ஒரு மணிநேர கருத்துரையை விவிலியத்தின் வழிகாட்டலில் வழங்கினார். மேலும் திருவிவிலியம் சமாதானத்தினை எவ்வாறு வலியுறுத்துகின்றது என்பதையும் அவர் ஆதாரங்களுடன் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வினை வழிநடத்தும் வளவாளராக ஆசிரியர் ஏ. ஜே. பொஸ்கோ அவர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். அவர் முக்கியமாக குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ந்ததோடு குடும்பப் பெண்கள் என்ற வகையில் அந்தப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதில் எமது பொறுப்பு என்னவென்பதையும் எடுத்துக்கூறினார். இவற்றோடு பங்கெடுத்த பெண்களும் தங்கள் குடும்ப அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இச்செயலமர்வில் ஏறக்குறைய 30 பயனாளிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்வுக்கான சகல ஏற்பாடுகளையும் முருங்கன் பிரதேச தேசிய சமாதானப்பிரிவு ஊக்குவிப்பாளர் திரு.சி. சுஜீவன் மேற்கொண்டிருந்தார். ●

### மன்னார் மறைக்கோட்ட மாணவர்களுக்கான

## மாதாந்த சமாதானக் கருத்தமர்வு

மன்னார் பிரதேச வாழ்வுதய சமாதானக் குழுவிற்கான மாதாந்த சமாதானத் தொடர் கருத்தமர்வானது ஐந்தாவது தடவையாக கடந்த 18.06.2008 அன்று வாழ்வுதய தொழிற்பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது.

இறை வணக்கத்துடன் ஆரம்பமான இநந்கழ்வில் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். ஜே. பெப்பி சோசை அடிகளார் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கருத்துரையாக இந்த நிகழ்வின் நோக்கம் பற்றி எடுத்துக்கூறி ஆசியுரையும் வழங்கினார்.

இந்நிகழ்விற்கு வளவாளராக வருகை தந்திருந்த ஞானோதய இயக்குனரும் அ.ம.தி. சபை அருட்தந்தையுமான டானியேல் அடிகளார், "உடல் வளர்ச்சியுடன்கூடிய உளவளர்ச்சி" என்ற தலைப்பில் மாணவப் பராயத்தில் உள்ளவர்களது உளவளர்ச்சி பற்றியும் பிள்ளைப் பருவத்தில் ஏற்படுகின்ற மனவெழுச்சி மாற்றம் தொடர்பான உளவியல் பார்வையில் வழங்கினார்.

மன்னார் பிரதேச கள ஊக்குவிப்பாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்நிகழ்வில் பல மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

### ஜோசப்வாஸ் நகர கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான கருத்தமர்வு

தோட்டவெளி - ஜோசப்வாஸ் நகர வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதானக் கருத்தமர்வானது 13.06.2008 அன்று ஜோசவ்வாஸ் நகர பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது. முதலில் நிகழ்வின் நோக்கம் பற்றிய கருத்துக்களும் வரவேற்பு உரையும் பிரதேச ஊக்குவிப்பாளர் திரு. எ. ஜோர்ஜ் குரூஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சமாதான இணைப்பாளர் அவர்களினால் "வாழ்வும் வழியும்" என்ற தலைப்பில் விவிலியத்தின் ஊடாக சமாதானம் என்றால் என்ன? சமாதானம் செய்வோர் யார்? எத்தகையோர் சமாதானமின்றி அலைகின்றார்கள். அமைதியின்றித் தத்தளிக்கும் எமது நாட்டில் அமைதியை உருவாக்குவதற்கு முதலில் எவ்வாறு எமது உள்ளத்து அமைதியை வளர்ப்பது என்று விரிவான விளக்கவுரை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குடும்பம் என்ற தலைப்பில் குடும்பத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் வெற்றிகரமான குடும்பமாகத் திகழ்வதற்கு பெற்றோர் பிள்ளைகள் தமது பொறுப்புக்களை எவ்வாறு ஒன்றிணைந்து செய்யவேண்டும் எனவும், இன்றைய நாட்களில் ஏற்படுகின்ற திருமணப் பிரிவுகளுக்கு காரணமாக உள்ள செயற்பாடுகள் பற்றியும் சமாதானப் பிரிவுப் பணியாளர் எஸ். பெனிற்றஸ் அவர்கள் கருத்துரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து எமது அன்றாட செயற்பாடுகளின்போதும் மற்றவர்களோடு தொடர்புகொள்ளும்போதும் எளிதான முறையில் வன்முறையற்ற வகையில் எவ்வாறு செயற்படுவது என்ற கருத்துரையினை சமாதானப்பிரிவுப் பணியாளன் திரு, எ. ஜோர்ஜ் குரூஸ் அவர்கள் வழங்கினார்.

இதில் 40 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ●

## வாழ்வுதயப் பணியாளர்களுக்கான தியானம்

கறித்தாஸ் - வாழ்வுதய இல்லப்பணியாளர்களுக்கு வாழ்வுதய தேசிய சமாதானப்பிரிவினரால் மாதாந்தம் நடாத்தப்படுகின்ற சமாதானத் தியான நிகழ்வானது 20.06.2008 அன்று வாழ்வுதய சிற்றாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அன்பிய இயக்குனர் அருட்தந்தை எஸ். டக்ளஸ் அடிகளாரினால், உடல், உள, ஆன்மாவை ஆற்றுப்படுத்தும் வகையிலான பயிற்சித் தியானம் நடாத்தப்பட்டதுடன் விவிலியத்தில் இருந்து இரண்டாம் நிலை தலைப்பேறு உடையவர்கள் இறைவனின் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொண்ட விதம்பற்றியும், மற்றும் மனிதநேயத்துடன் பணிபுரிகின்ற பணியாளர்கள் எவ்வாறு ஆன்மீக தாகமுள்ளவர்களாக செயற்படுவது, மக்களை வழிநடத்துவது பற்றியும், உண்மையான பணியாளன் பற்றி கிறிஸ்து எடுத்துக்கூறியுள்ள விதம் பற்றியும் விபரமாக எடுத்துக் கூறியதுடன், நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆராதனையும் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. பல்வேறுபட்ட நெருக்கீடுகள் நிறைந்த இக்காலகட்டங்களில் பல்வேறுபட்ட சோர்வுற்ற மக்களிடையில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டு பயனடைந்தனர். ●

# கறிற்றாஸ் - வாழ்வுதயம்

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற நடுநிலையம்

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

CARITAS - VALVUTHAYAM (Diocese of Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பெப்பி சோசை

Affiliated to National Secretariat for Justice, Peace & Human Development Commission of the Catholic Bishops' Conference in Sri Lanka incorporated by Act of Parliament, No. 17 of 1983 - Caritas - Valvuthayam, Diocese of Mannar, No. 17, Main Street, Mannar - Sri Lanka. T.P: 023-2222140, Fax : 023-2222893, E-mail : valvum@sltnet.lk


## கறிற்றாஸ் வாழ்வுதயத்தினுடைய உதவிக்கரப் பிரிவின் செயற்பாடுகள்

ஒரு பயனாளி நோயினாலோ, போரினாலோ தனது சொந்தக் காலை இழந்துவிட்டார் என்றால், அவரது மனநிலை சாதாரண மனிதரைவிட வேறுபட்டதாகவே இருக்கும். அப்படிப்பட்ட ஒருவர் தான் இனியும் வாழத்தான் வேண்டுமா என்ற நிலையில்கூட இருப்பார். அப்படியான ஒரு பயனாளிக்கு செயற்கைக்கால் பொருத்தி கைகொடுத்து உதவுவதற்காகவே, வாழ்வுதய உதவிக்கரப்பிரிவு செயற்பட்டு வருகின்றது.




அதேபோன்று போலியோவினால் பாதிக்கப்பட்டு நடமாட முடியாமல் வீட்டிலே ஒதுங்கிக்கிடந்த காலம் மாறி இப்போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் போலியோ சப்பாத்து, தேவைப்படும் இடத்து ஊன்றுகோல், சக்கர நாற்காலி போன்றவற்றைக் கொடுத்தும் உதவிக் கரம் பிரிவு உதவிவருகின்றது.

## உளம் உடைந்த மக்கள் மத்தியில் உளநலப்பணி

வாழ்வுதய நிறுவனத்தின் உளவள சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவின் செயற்பாடுகள் யாவும் சிறப்பான முறையில் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. பேசாலை நலன்புரி நிலையத்திலும், தோட்டவெளி மற்றும் யோசப்வாஸ் நகரிலும், கீரி, மற்றும் தாழ்வுபாடு கிராமத்திலும் இப்பணி ஆற்றுப்பட்டு வருகின்றது. முக்கியமாக மன்னார் பெருநிலப்பரப்பில் உள்நாட்டுப் பிரச்சினைகளால் இடம்பெயர்ந்து நானாட்டான் பகுதியில் வாழும் மக்களுக்கு இப்பிரிவின் செயற்பாடுகளானது கூடியளவில் இடம்பெற்று வருகின்றன.





இங்கு குடும்ப சந்திப்புக்கள் மூலமும் கருத்தமர்வுகள் மூலமும் இச்செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 04.06.08 அன்று தோட்டவெளியில் உள்ள மக்களுக்கும் 26.06.08 அன்று எருவிட்டான் மில்லில் உள்ள மக்களுக்கும் குடும்பத்திட்டம் தொடர்பான ஒரு நாள் கருத்தமர்வு நடாத்தப்பட்டது. இக்கருத்தமர்வில் அருட்சகோதரி றெஜி அவர்களும் இளைப்பாறிய முதன்மைத் தாதி (Mid Wife) நாகபாதம் அவர்களும் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். இதில் 65 பயனாளிகள் கலந்துகொண்டனர். 27.06.08 அன்று நானாட்டான் கோவிலடியில் உள்ள இடம்பெயர்ந்தவர்களுக்கான குடும்ப வாழ்வு எனும் கருத்தமர்வை அருட்சகோதரி றெஜி அவர்கள் நடாத்தினார். அத்தோடு உளவளப் பணியாளர்களுக்கான வலுவூட்டல் கருத்தமர்வுகளும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக 09.06.08 தொடக்கம் 13. 06.08வரை கொழும்பு தேசிய நிறுவனத்திலிருந்து (SEDEC) வருகை தந்த உளவள தேசிய இணைப்பாளர் அருட்சகோதரி பற்றிமா நாயகி அவர்களும் அவருடைய உதவியாளர் சகோ. பிரசன்னா அவர்களும் Psycho Social Manual Programme என்ற கருத்தமர்வை நடாத்தினர். இதில் வாழ்வுதய உளவளப் பிரிவினரும் மன்னார் மாவட்ட அரச, அரசசார்பற்ற நிறுவன உளவளப் பணியாளர்களும் கலந்து பயனடைந்தனர். இக்கருத்தமர்வில் மன்னார் ஆதார வைத்தியசாலை உளநலப் பிரிவின் வைத்தியர் திருமதி சுஜாத்தா சரவணன் அவர்களும் வளவாளராகக் கலந்துகொண்டார்.

## வாழ்வுதயத்தின் செய்தித் துளிகள்

■ கடந்த 26.06.2008 அன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிக்கள ஆய்வாளர் திருவாளர் வி. கே. யோரீஸ் அவர்கள் கட்டையடம்பன் வீட்டுத்திட்டம் தொடர்பான தனது கள சந்திப்பினை மேற்கொண்டார். இவருடன் வீட்டுத்திட்ட முகாமையாளர் திரு. பிரான்சிஸ்கோ, வாழ்வுதய இயக்குனர், பங்குத்தந்தை அருட்பணி. சீமான் மரியதாசன் ஆகியோர் பங்குபற்றினார்கள். கிராமத்து மக்கள், கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள், பாலர் பாடசாலை மாணவர்கள் ஆகியோரினால் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர். சிறு கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.




பின்னர் வாழ்வுதய நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்படுகின்ற வீட்டுத்திட்டங்களையும், ஏனைய செயற்பாடுகளையும் அதிகாரி அவர்கள் பார்வையிட்டு மக்களின் நிலைப்பாடுகளையும் நேரில் கேட்டறிந்தார். இதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 01 வீடு திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு நிரந்தர வீடாகக் கையளிக்கப்பட்டது.

■ கடந்த 18.06.2008 அன்று கட்டையடம்பன் வீட்டுத்திட்டத்தின்கீழ் பாடசாலை மாணவர்களுக்கான சர்வமத ஒன்றிப்பு நிகழ்வு இடம் பெற்றது.. இந்நிகழ்வில் 50 பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினார்கள். வளவாளராக ஆசிரியர் திரு. பொஸ்கோ அவர்கள் கடமையாற்றினார். ஊக்குவிப்பாளர் திரு. சுஜீவன் அவர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றி தனது கருத்துக்களையும், விளக்கங்களையும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

■ கடந்த 21.06.2008 அன்று கட்டையடம்பன் தம்பனைக்குளத்தினைச் சேர்ந்த கிராமிய விழிப்பூட்டல் குழுக்களுக்கான சமாதான சர்வமத ஒன்றிப்பு நிகழ்வு கட்டையடம்பன் முன்பள்ளி கட்டிடத்தில் இடம்பெற்றது. இதில் 40பேர் பங்குபற்றினார்கள். வளவாளராக ஆசிரியர் திரு. பொஸ்கோ அவர்கள் கடமையாற்றினார்.

## புனர்வாழ்வு புனரமைப்பின் கடந்த மாத செயற்பாடுகள்





இம்மாதம் பேசாலை, இசைமாலைத்தாழ்வு, பெரியகமம், நறுவிலிக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 11 நபர்களுக்கும் சிலாபத்துறை, அரிப்பு ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்த் 3 நபர்களுக்கும் வைத்தியச் செலவிற்காக 22,250/= வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு மூக்குக் கண்ணாடி பெறுவதற்காக ஒரு நபருக்கு 2000= வழங்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த 3 குடும்பங்களில் ஏற்பட்ட மரணங்களிற்காக 19,000/= உதவித்தொகை வழங்கப்பட்டது.

முருங்கன் பாடசாலையில் இயங்கும் இடம்பெயர்ந்த மருதமடு (R.C.T.M.S.) பாடசாலைக்கு 20கட்டு கிடுகும், வன்னி, யாழ், முசலிப்பிரதேசசபை ஆகிய இடங்களில் இருந்து வந்து சாந்திபுரம் (R.C.T.M.S.) பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களின் கல்விக்காக 20 கட்டு கிடுகும், சாந்திபுரத்தில் இடம்பெயர்ந்து குடியேறிய ஒரு குடும்பத்திற்கு 9 கட்டுக் கிடுகும், மூர்வீதியில் இடம்பெயர்ந்து குடியேறிய ஒரு குடும்பத்தின் எரிந்த வீட்டிற்கு 12கட்டு கிடுகும் வழங்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி எமது காரியாலயத்தை நாடிவந்த முதியோர், இடம்பெயர்ந்தோர் போன்ற 34 குடும்பத்தில் உள்ள 133 நபர்களிற்கும், பேசாலைப்பங்கில் இடம்பெயர்ந்து வந்து வசிக்கும் 88 குடும்பங்களில் உள்ள 338 நபர்களிற்கும் முசலிப்பிரதேசசபையில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தாழ்வுபாட்டில் வசிக்கும் 115 குடும்பத்தில் உள்ள 407 நபர்களிற்கும் உலர் உணவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மன்னார், வங்காலை, பள்ளிமுனை, பேசாலை, தராபுரம், தலைமன்னார் போன்ற இடங்களில் இடம்பெயர்ந்து வாழும் 50 குடும்பத்தில் உள்ள 194 நபர்களுக்கு எமது காரியாலயத்தில் வைத்து உலர் உணவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் முசலிப்பிரதேச சபையில் இருந்து இடம்பெயர்ந்து நானாட்டான் பங்கில் வாழும் 871 குடும்பத்தில் உள்ள 3238 நபர்களிற்கும் குஞ்சுக்குளம், பெரியமுறிப்பு, மாதா கிராமம் ஆகிய இடங்களில் வாழும் 204 குடும்பத்தில் உள்ள 746 நபர்களிற்கும், களிமோட்டை முகாமில் உள்ள 190 குடும்பத்தில் உள்ள 412 நபர்களிற்கும் அவ்விடங்களில் வைத்து உலர் உணவு வழங்கப்பட்டுள்ளது.

## போர்ப்பதட்டம் மத்தியிலும் பாலகர்களின் வாழ்வுதய முன்பள்ளி விளையாட்டு விழா

தற்போதைய வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து கூராய் கிராமத்தில் இயங்கிவரும் இணைந்த முன்பள்ளிகளான புனித செபமாலை மாதா முன்பள்ளி, பாலையடிப் புதுக்குளம் புனித சிந்தாத்துரை மாதா முன்பள்ளி, பெரியகுளம் பறப்பாங்கண்டல், மற்றும் சிறுக்குளம் பறப்பாங்கண்டல் ஆகிய முன்பள்ளிகளில் மூன்று ஆசிரியர்களும் 45 மாணவர்களும் உள்ளார்கள். இம்மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் முகமாக விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது.



சோவா (ZOA) நிறுவனத்தின் உதவியுடனும் பெற்றோர்களின் நிதியுதவியுடனும் கூராய் கிராமத்தில் கடந்த 05.04.08 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் இவ்விளையாட்டுவிழா ஆரம்பமானது. முதலில் மாணவர்கள் விருந்தினருக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது. இவ்வரவேற்புரையினை ஆசிரியர் ம. அனிற்றா அவர்கள் ஆற்றினார். தொடர்ந்து சிறப்புரைகளை முன்பள்ளி உதவி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. சேக்கிறட் காட் அவர்களும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திரு. மரியநாயகம் குரூஸ் அவர்களும் ஆற்றினார்கள். பின்னர் மாணவர்களினால் உடற்பயிற்சிக் கண்காட்சி காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து மாணவர்களின் விளையாட்டுக்கள் ஆரம்பமானது. முதலில் 5, 4, 3 ஆகிய வயது ஆண், பெண்களுக்கான விளையாட்டுக்கள் இடம்பெற்றன. பின்னர் பெற்றோருக்கான போட்டியும் இளைஞர்களுக்கான போட்டியும் இடம்பெற்றன.

தொடர்ந்து முன்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர் அவர்களால் நன்றி உரை ஆற்றப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 6.00 மணியளவில் இவ்விளையாட்டுவிழா நன்றி வழிபாட்டுடன் இனிதே நிறைவுற்றது.

## வாழ்வுதயத்தால் பராமரிக்கப்படும் முன்பள்ளிகளின் வருடாந்த கண்காட்சி நிகழ்வுகள்

கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் கீழ் இயங்கிவருகின்ற முருங்கன் பிரதேச முன்பள்ளி சிறுவர்களுக்கான கண்காட்சி நிகழ்வானது 05.06.2008 அன்று முருங்கன் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. சிறுவர்களின் ஆக்கத் திறனாக ஒழுங்கமைக்கப்பட்ட கண்காட்சி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. ஸ்ரீபன், அளவக்கை பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மன் குலாஸ், கற்கிடந்த குளம் பங்குத்தந்தை அருட்பணி. மரியதாசன் சீமான் ஆகியோரும் மற்றும் பெற்றோர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

தருவது தஞ்சை டோமி

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தேசபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

## தொடர் – 12

**13. மரியா இயேசுவைப் பெற்றெடுத்தது தவிர, அவரிடமிருந்து நாம் வேறு கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன இருக்கிறது? நீங்கள் கூறும் எதையும் விவிலிய ஆதாரத்துடன் கூறுவது நல்லது.**

எந்த வார்த்தையின் பொருளையும் ஒரு மொழி கொண்டு விளங்கிட முடியாது. தாய் என்ற வார்த்தையை விளக்கிவிட உலகின் எந்த மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை. தாய் - பெற்றெடுத்த பேரன்பு, வற்றாத பாசத்தின் ஊற்று, பத்து மாதம் சுமந்து பெற்றவள், பத்தியங்களிலிருந்து பாதுகாத்தவள், தோலைத் தொட்டிலாக்கியவள்... ! தாயின் பெருமையே பெற்றெடுப்பதில்தான் அடங்கியுள்ளது. தாய்மை அடைவதுதான் பெண்மையின் அழகு.

அன்னை மரியாவிடம் ஆயிரம் குணங்கள் இருந்தாலும், "உருவிலான் உருவாகி உலகில் ஒரு மகனனுப்ப, கருவிலாக் கருத்தாங்கிய கன்னித்தாயே" என்று போற்றப்படும் மரியா இறைவனின் தாய் என்பதற்கு எக்குணமும் ஈடாகாது. ஆகவேதான் கத்தோலிக்க திருச்சபை 'வாழ்க, புனித அன்னையே!, விண்ணையும் மண்ணையும் எக்காலத்துக்கும் ஆள்கின்ற அரசனை ஈன்ற அம்மையே வாழ்க!' என்று அன்னை மரியாவை போற்றிப் புகழ்கின்றது. நற்செய்தியில் இயேசுவை 'மரியாவின் மகன்' என்று மாற் 6:3லும் 'என் ஆண்டவரின் தாய்' என்று லூக் 1:43லும், 'தாய்' என்று (மத் 2:11, 18, 12:46, 13:55, மாற் 3:31 லூக் 2:34, 48, 51, 8:19, யோவா 2:5, 19:28) எனப் பல இடங்களிலும் மரியா அழைக்கப்படுகின்றார்.

மரியன்னையை 2000 ஆண்டுகளாக மக்கள் போற்றிப் பின்பற்றி வந்துள்ளனர். விவிலியம் மரியாவைப் புகழ்கின்றது. "அருள்மிகப் பெற்றவரே வாழ்க!" (லூக் 1:28). அப்படியிருக்க உங்களுக்கு மட்டும் மரியாவைப் புகழ இன்னும் காரணம் தேவைப்படுகின்றதோ? "இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:48) என்ற விவிலிய வாக்கிற்கு ஏற்ப நீங்களும், இன்னும் மரியாவை மட்டம் தட்ட விவிலியத்தில் விடை தேடுவோரும், மக்கள் அனைவரும் வியக்கும் வண்ணம் "மரியே வாழ்க! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று கூறும் நோக்கில் மரியா நம்மைப் பார்த்து "என்னைப்போல் இரு" என்று கூற என்னென்ன தகுதி பெற்றுள்ளார்கள் என்பதை விவிலிய மேற்கோளோடு விளக்க விரும்புகிறேன்.

**வார்த்தையான இறைவனுக்குப் பணிந்து நடந்தவர்:** "இதோ ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின் - படியே எனக்கு ஆகட்டும்" என்று இறைவனுக்கு அடிபணிந்து அடிமையானார் (லூக் 1:38).

**வார்த்தையான இறைவனை இதயத்தில் இருத்தித் தியானித்தவர்:** "இறைவனின் 'வார்த்தை' புரியாதபோதும்? புதிராகத் தெரிந்தபோதும், வார்த்தையான கடவுளை வாதத்திற்கு இழுக்காமல் எல்லா நிகழ்ச்சிகளையும் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக்கொண்டிருந்தார்" (லூக் 2:19,51).

**வார்த்தையான கடவுளின் வழியில் எப்போதும் நடந்தார்:** 'என் வழி தனி வழி' என்று கூறத் தெரியாதவர் மரியா. இறைவழிதான் தன் வழி என்று எப்போதும் இறைவார்த்தைப்படி நடந்தும், இயேசுவில் விசுவாசம் கொள்பவர்களை இயேசுவின் பாதையில் நடக்கவும் அழைப்பார் மரியா. யோவா 2:5ல் "அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்" என்று கானாவூர்த் திருமணத்தில் மரியா கூறியது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

**விசுவாசத்தின் வீரப் பெண் :** கன்னியிடம் கர்த்தரின் பிறப்பைப் பற்றி கடவுளின் தூதர் கூறியபோது வீரத்தோடு இது எங்ஙனம் ஆகும்? என்று கேட்டாலும் கடவுளால் ஆகும் என்றபோது கலங்காமல், வீரப் பெண்ணாக இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டார். 'ஆகட்டும்' என்றார்.

**பிறரன்பு சேவை உணர்வுள்ளவர் :** ஏறக்குறைய மூன்று மாதங்கள் மலை நாட்டிற்குச் சென்று எலிசபெத்தம்மாள் என்ற முதிர்ந்த வயதில் கருவுற்ற பெண்ணுக்கு பணிவிடை புரிந்தார் (லூக் 1:39,57).

**இயேசுவின் மரணம் பாடுகளில் பங்கேற்றவர்:** இயேசு உடலில் பட்ட பாடுகளை அன்னை மரியா உள்ளத்தில் பட்டார். இயேசுவின் பிறப்பு முதல் கல்வாரிவரை துன்பங்கள் நிறைந்த இயேசுவின் பாதையில் கூடச் சென்று, கல்வாரியில் வியாகுலத் தாயாக விம்மி விம்மி அழுதார் (யோவா 19:25.).

**செப வீரர் :** அன்னை மரியா மங்கள வார்த்தை பெற்று செபிக்கும்போது! அதேபோல் அப்போஸ்தலர் பணியில் பரிசுத்த ஆவி இறங்கி வரப்பெற்றதும் அன்னை மரியா செபிக்கையில்! அன்னை மரியா தொடக்க முதல் இறுதிவரை செபித்தார். செப வீரர் (லுக் 1:26, திது 1:14).

இப்படியாக தாழ்ச்சிக்கும், எளிமைக்கும், கீழ்ப்படிதலுக்கும், செபத்திற்கும், பிறரன்புக்கும், இறைவார்த்தையை கடைப்பிடிப்பிற்கும் பெயர்போன மரியாவைக் குறித்துக் கூறும்போது மரியாவிடம் எந்த நற்பண்பு இல்லை? என்று கேட்கவேண்டுமே ஒழிய, வேறென்ன உள்ளது? என்று கேட்பது விவாதத்திற்கு இழுப்பதற்கே ஒழிய விசுவாசத்திற்கு அழைப்பதற்கல்ல.

**14. சிப்பிக்குள் இருக்கும் முத்து முக்கியமா? அல்லது சிப்பி முக்கியமா? முத்தைப் பெற்றுக்கொண்டால் நாம் ஏன் சிப்பியை பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்?**


அன்புள்ள சகோதரரே, உங்கள் கேள்வியை சற்று யோசித்துப் பார்த்தால் சமூகச் சிந்தனையோ, மனிதநேயமோ, அற்ற கேள்வியாகத் தெரிகிறது. இறையன்புக்கும், பிறரன்புக்கும் முரண்பட்டுக் காணப்படுகிறது. தாய் முக்கியமா, சேய் முக்கியமா? கோழி முக்கியமா? குஞ்சு முக்கியமா? மாம்பழம் முக்கியமா? மாங்கொட்டை முக்கியமா? என்று கேட்பதுபோல் உள்ளது.

சிப்பி செல்லாக் காசுதான். ஆனால் முத்தை உருவாக்கியது யார்? பாதுகாத்தது யார்? முத்து முத்தாக இருக்க சிப்பி எந்தளவிற்கு முக்கியம் என்று நீங்கள் உணர வேண்டும். மாம்பழத்தைச் சுவைத்துவிட்டு கொட்டையைத் தூக்கி எறியலாம். பனம் பழத்தைச் சுரண்டிவிட்டு பனங்கொட்டையைத் தூக்கி எறியலாம். ஆனால் பெற்றோர்களைப் பயன்படுத்திவிட்டு முதிர்ந்த வயதில் அவர்களை உதறித் தள்ளுவது ஒத்துவரும் கொள்கையோ? நாம் வளரும் வரை மற்றவர்களைப் பயன்படுத்தி, வளர்ந்தபின் எதிர்த்து நிற்பது – ஏறிய ஏணியையே எட்டி உதைப்பதாகாதா?

நாம் நம் தாயைத் தூர எறிந்து விடுவோமா? நாம் நம் தாய்மார்களை மதிப்புக்கொடுத்து பாதுகாப்பது அவர்களைக் கட்டி சுமக்கும் செயலா? ஒரு சாதாரண மனிதன் தாய்க்குக் காட்டும் மரியாதையைக்கூட இயேசுவின் தாய்க்குக் காட்ட வேண்டாம் என்றால் இயேசு என்ன அவ்வளவு இழிவானவரா? எலிசபெத்தம்மாளைச் சந்திக்கச்சென்ற மரியாவை எலிசபெத்து வாழ்த்தினார். ஆனால், மரியா தன்னை மகிமைப்படுத்தாமல் கடவுளை மகிமைப்படுத்தினார். "என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப்போற்றுகின்றது" என்று (லூக் 1:46-55). கண்ணாடிமீது ஒளியைப் பாய்ச்சினால் அது உடனே பிரதிபலிப்பதுபோல நாம் மரியன்னைக்குக் காட்டும் புகழ்ச்சி அனைத்தும் அவரது தெய்வீக மகனையே சாரும்.

*(கேள்விகள் தொடரும்...)*

# பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை



## இறைவார்த்தை ஆண்டையொட்டிய சிந்தனைக் கட்டுரைத் தொடர் - 8

*– திரு. மாட்டின் டயஸ், (பேசாலை) இளைப்பாறிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் –*

செபம் சொல்வோம் என்றால் செபமாலை சொல்லுதல் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும். செபமாலைப் பக்தி பல நூற்றுக்கணக்கான வருடங்களாகத் திருச்சபையால் ஊக்குவிக்கப்பட்டும் பரிந்துரைக்கப்பட்டும் வந்துள்ளது.

திருச்செபமாலையைத் தியானிக்கும்போது எவ்விதம் இறைவார்த்தையைத் தியானிக்கின்றோம் என்பதைப் பற்றியதாகவே எமது சிந்தனைத் தொடர் கடந்த இதழ்களில் அமைந்திருந்தது. அவற்றில் மகிழ்ச்சித் தேவ இரகசியங்களையும் துயர் நிறை தேவ இரகசியங்களையும் பார்த்தோம். தொடர்ந்து இத்தொடரில் ஒளியின் தேவ இரகசியங்கள் பற்றிச் சிந்திக்கப் போகின்றோம்.

இத்தேவ இரகசியங்கள் மறைந்த திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரால் வழங்கப்பட்டன என்பதும் வியாழக் கிழமைகளில் தியானிக்கப்பட வேண்டும் என்பதும் நாம் அறிந்ததே.

கிறிஸ்துவே உலகின் உண்மையான ஒளி. கிறிஸ்து "நானே உலகின் ஒளி" என்றுரைத்துள்ளார். இப்புவியும் வரலாறும்கூட யேசுவை ஒளியாக ஏற்றுக்கொண்டுள்ளன. வரலாற்று நிகழ்வுகள் கிறிஸ்துவுக்கு முன் கிறீஸ்துவுக்குப் பின் எனத் தொகுக்கப்பட்டுள்ளமையே இதற்குச் சான்று.

ஆசிய ஜோதி என வர்ணிக்கப்படும் கௌதம புத்தர் (சித்தார்த்தன்) ஒரு ஞானி. கிரேக்கத்து அரிஸ்ரோட்டிலும் சோக்கிரட்தீசும் தத்துவ மேதைகள். இஸ்லாத்தை உலகிற்குத் தந்து முகமது நபி தன்னை ஒரு இறைத்தூதராகவே இனம் காட்டினார். இவ்விதமாகப் பலர் காலத்துக்கு காலம் தோன்றி இறைபணியாற்றி மறைந்துள்ளார்கள். இந்த வரிசையில் மகாத்மா காந்தி, மாட்டீன் லூத்தர் கிங் போன்றவர்களும் சேர்த்துக்கொள்ளப்படலாம். நமது காலத்தில் வாழ்ந்து மறைந்த அன்னை திரேசாவும் இப்பட்டியலில் இடம்பெறவேண்டியவர்களே. இவர்கள் எல்லாம் இறைச்சித்தத்தை இவ்வுலகில் நிறைவேற்றத் தம்மை அர்ப்பணித்துப் பணிசெய்தவர்கள். இவர்கள் மதிக்கப்படவேண்டியவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள்.

ஆனால் கிறிஸ்து, உலகின் ஒளியாய் இருக்கின்ற இறைமகன், இறைவன், மலைச் சிகரத்தில் ஏற்றிவைக்கப்பட்ட அணையாத சுடராய் முக்காலமும் ஒளி காண்கின்றவர். அவரின் மூன்று வருடகால நற்செய்தி அறிவிப்புப் பணியின் முக்கிய நிகழ்வுகள் ஐந்து தொகுக்கப்பட்டு ஒளியின் மறையுண்மைகளாக நமது தியானத்திற்குத் தரப்படுகின்றன.

### I. முதலாவது ஒளியின் மறையுண்மை.

**"யேசு யோர்தானில் யோவானின் கரங்களால் திருமுழுக்குப் பெறுகின்றார்"**

யேசு திருமுழுக்குப் பெறும் இந்நிகழ்வு லூக்கா, மாற்கு, மத்தேயு ஆகிய மூன்று நற்செய்தியாளர்களாலும் தரப்படுகின்றது. புனித மாற்கு இவ்விதமாகக் குறிப்பிடுகின்றார். "அக்காலத்தில் யேசு கலிலேயாவில் உள்ள நசரேத்தூரிலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். (மாற். 01: 09) புனித லூக்கா இயேசுவின் திருமுழுக்கைப்பற்றி இரண்டே வசனங்களில் முடித்துக்கொள்கின்றார். மற்ற இரு நற்செய்தியாளர்களின்படி பகிரங்க வாழ்வைத் தொடங்க விரும்பிய யேசு தனது முதல் வேலையாக யோவானின் கரங்களால் திருமுழுக்குப் பெறவேண்டும் என்று ஏலவே எடுத்துக்கொண்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதுபோல் அமைந்துள்ளது. இதற்கு யேசுவின் வார்த்தைகளும் சான்றாகின்றன. யோவான் "நான்தான் உம்மிடம் திருமுழுக்குப் பெறவேண்டியவன். நீரா என்னிடம் வருகின்றீர்?" என்று கூறித் தடுத்தார். யேசு, "இப்போது விட்டுவிடும் கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவது தான் முறை" எனப் பதிலளித்தார். அதற்கு யோவானும் இணங்கினார். (மத். 3:14-15) இயேசு யோவானின் கரங்களால் திருமுழுக்குப் பெறுவது கடவுளுக்கு ஏற்புடையது ஆகின்றது.

திருமுழுக்கின் பின்புதான் இயேசுவின் நாற்பது நாள் பாலை - வனத்து உண்ணா நோன்பும், யேசுவின் மூன்று சோதனைகளும் இடம்பெறுகின்றன.

**இம்மறையுண்மையிலிருந்து விரியும் ஏனைய நிகழ்வுகள**

**1. யேசு பொது வாழ்வில் நுழைகின்றார்.**

நசரேத்தூரின் அந்தச் சிறிய இல்லத்திலிருந்து மரியாள், சூசை, யேசு என்ற அந்த அன்பு வட்டத்திலிருந்து மறையறிவித்தல், நற்செய்தி சொல்லல், இறையரசு அறிவித்தல் என்ற பணியேற்று சமூகம், உலகம் என்ற விசாலமான வட்டத்தில் அடியெடுத்து வைக்கின்றார் இயேசு.

கிறிஸ்துவின் வாழ்வில் செபம் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. தன் எல்லாப் பணிகளையும் தன் தந்தையின் சித்தப்படியே செய்தார் என்பது மட்டுமல்ல தன் தந்தையோடு உரையாடி உறவாடி அவர் துணையோடு செய்து முடித்தார்.

கிறிஸ்துவின் நாற்பது நாள் உபவாசமும், இறைத்தியானமும், தன்னைத் தன் பகிரங்க சீவியத்துக்காக ஆயத்தப்படுத்தியமையே அன்றிப் பிறிதல்ல. அந்த நாற்பது நாள் உபவாசம் நோன்பு மூன்று வருட சேவைச் சீவியத்துக்கான தவமாகவே அமைந்தது.

**வேண்டுதல் :-** எமது வாழ்வின் எல்லா நிகழ்வுகளையும் இறைச் சித்தத்துக்கு அமைவாகவும் இறைத் துணையோடும் செய்ய வரம் வேண்டிச் செபித்தல்.

**2. நியமங்களுக்கும் சட்டங்களுக்கும் யேசு அமைவாக நடக்கின்றார்.**

திருமுழுக்கு யோவான் யேசுவுக்கு திருமுழுக்குக் கொடுக்க மறுத்தபோது யேசு சொன்ன வார்த்தைகள், "இப்போது விட்டுவிடும் கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை" என்பது, யேசு இறைசித்தத்துக்கும் நடைமுறைகளுக்கும் நேர்மறை எண்ணங்களைக் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகின்றது. யேசுவின் வாழ்வில் இவ்வித சந்தர்ப்பங்கள் நிறையவே வந்துள்ளன.

செசாருக்கு வரி செலுத்துவதா வேண்டாமா என்று தம்மைச் சோதிக்கக் கேட்டவர்களிடம் யேசு நாணயம் ஒன்றைக் கொண்டு வரும்படி கூறி நாணயத்தில் உள்ள இலட்சினையைச் சுட்டிக்காட்டி செசாருக்குரியதை செசாருக்கும் இறைவனுக்குரியதை இறைவனுக்கும் செலுத்தும்படி சொன்னார்.

பேதுருவை கடலில் வலையை வீசச் சொல்லி பிடிபடும் மீன்களில் முதலாவது மீனின் வாய்க்குள் இருக்கும் நாணயத்தை எடுத்து தனக்கும் பேதுருவுக்குமாக வரி செலுத்தும்படி கூறினார்.

**வேண்டுதல் :-** திருச்சபையின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளவும், திருச்சபைத் தலைவர்களின் ஆன்ம சரீர நலன்கள் பேணப்படவும் வரம் வேண்டிச் செபித்தல்.

**3. மூவொரு இறைவனின் தெளிவான பிரசன்னம்**

இயேசுவின் வாழ்வில் தூய ஆவியின் பிரசன்னம் மிகவும் துலாம்பரமாகத் தெரிவது யோர்தான் நதிக்கரையில் மட்டும் தான். மரியாளும் சீடர்களும் கிறீஸ்து மரித்து உயிர்த்துப் பரலோகத்துக்குப் போனபின்பு ஒன்றாகச் செபித்துக் கொண்டிருந்தபோது பெரிய காற்றின் பின்னணியில் தூய ஆவியின் பிரசன்னம் அக்கினிப்பிளம்புகளாக மண்டபத்தில் கூடியிருந்தவர்கள்மேல் இறங்கியபோது நிகழ்ந்தது திருச்சபையின் ஜனனம்- தோற்றம்.

யோர்தான் நதிக்கரையில் தூய ஆவியின் பிரசன்னம் மட்டுமல்ல மூவொரு பிரசன்னத்தையே உலகம் அனுபவித்தது. வேதாகமத்தில் இதுபோன்ற பிறிதொரு நிகழ்வு நடைபெறவில்லை. இதனைப் புனித யோவானைத் தவிர ஏனைய மூன்று நற்செய்தி ஆசிரியர்களும் குறிப்பிடுகின்றார்கள். புனித மாற்கு இவ்வாறு குறிப்பிடுகின்றார். "அவர் ஆற்றிலிருந்து கரையேறியவுடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப்போல் தம்மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்போது, "என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது (மாற் 1:10-11). இது தந்தை இறைவனின் குரல். ஒலியாகத் தந்தையும், புறாவாகத் தூய ஆவியும் திருக்குமாரனை நிறைவு செய்தனர்.

கிறீஸ்துவுக்கு ஒருமனித தோற்றம் இருந்தது. தூய ஆவிக்கு புறாவாய் அக்கினிப் பிழம்புகளாய்த் தோற்றங்கள் இருந்தன. தந்தையை நாம் பல வடிவங்களில் சந்திக்கின்றோம்.

**வேண்டுதல் :-** மூவொரு இறைவனின் பிரசன்னமும் ஆளுகையும் நமது மறைமாவட்டத்தையும் ஆட்சி பீடத்தையும் வழிநடத்த வேண்டிச் செபித்தல்.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# சர்வமதத் துறவிகளின் மன்னாருக்கான ஒன்றிணைந்த விஜயம்



*மூலம் : The Messenger*

*தமிழாக்கம் : அருட்சகோதரி கனிசியஸ் (தி.கு) மன்னார்*

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறைமாவட்டத்தினுடைய ஒப்புரவுக்கும், அமைதிக்குமான குழுவின் அழைப்பை ஏற்று துறவற சபைத் தலைவர்களின் ஒரு குழுவினர் கடந்த ஏப்ரல் மாதம் 15–18ம் திகதி வரை மன்னார்ப் பிரதேசத்தைத் தரிசித்தனர். இக்குழுவில் மூத்த பௌத்த துறவி ஒருவர், ஒருசில அங்கிலிக்கன் குருக்கள், மெதடிஸ்த சபைக் குரு ஒருவர், கத்தோலிக்க குரு ஒருவர், கத்தோலிக்க அருட்சகோதரி ஒருவர், இரண்டு கத்தோலிக்க பொதுநிலையினர் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்தத் தரிசிப்பானது மன்னார் வாழ் மக்களுடனும், மதத் தலைவர்களுடனும் ஒன்றிப்பை ஏற்படுத்துவதற்காகவும், மன்னாரின் தற்கால சூழ்நிலையைப் பற்றிய போதிய புரிந்துணர்தலைப் பெறுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டது. இக்குழுவினர் முசலிப் பிரதேசம் (அரிப்பு, சிலாபத்துறை) மாந்தை மேற்கு (வன்னி) ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து மன்னாரில் தங்கியுள்ள மக்களையும், மீனவர் சங்க, வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பிரஜைகள் குழுவினர், உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினர் ஆகியோரையும் சந்தித்தனர். அத்துடன் இவர்கள் மன்னார் அரசாங்க அதிபரையும் சந்தித்தனர். கத்தோலிக்க மறைமாவட்டமான மன்னாரின் குருக்களுடன் ஒருசில தடவைகள் ஒன்றுகூடல்களை நடாத்தினர். மன்னாரில் அமைந்துள்ள பௌத்த விகாரையைத் தரிசித்தபோதும் அதன் பொறுப்பாளரைத் தரிசிக்க முடியவில்லை. இராணுவக் கட்டளைத் தளபதியைச் சந்திக்க அனுமதி கோரியபோதும் அது கிடைக்கவில்லை. ஆயினும் சோதனைச் சாவடிகளில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருடன் தொடர்புகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

மன்னார் நகரைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்ததுடன் நானாட்டான், பேசாலை, களிமோட்டை ஆகிய இடங்களையும் அங்கு முகாம்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களையும் சந்தித்தனர். அத்துடன் மடுத்திருத்தலத்தை அரசியல் இராணுவ செயற்பாடுகளிலிருந்து காப்பாற்றும்படி மன்னார் கத்தோலிக்க சர்வமத அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட உபவாசச் செபத்திலும் பங்கெடுத்தனர்.

எமது அவதானிப்புக்கள், முடிவுகள், சிபாரிசுகள் யாவற்றையும் நாம் தரிசித்த பகுதிகளின் அளவுகளுக்கேற்பவும், தரிசிப்பின்போது பெற்ற தகவல்களுக்கேற்பவும் இங்கே அறிக்கையாகத் தயாரித்துள்ளோம்.

### 1) இராணுவத்தினரும் சோதனைச் சாவடிகளும

மன்னார் நகரமும் அயற்பிரதேசங்களும் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளன. A30 வவுனியா மன்னார் வீதி அன்றேல் A14 மதவாச்சி வீதி போன்றவற்றினூடாகப் பயணம் செய்வோர் எல்லாவிதமான சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்டுத் தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன. மன்னாருக்குச் செல்லும் தெரு நெடுகிலும் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டுள்ளனர். இராணுவ வாகனத் தொடரணி செல்வதற்காக நாம் பயணம் செய்த வாகனம் பல தடவைகள் நிறுத்தப்பட்டு, ஓரமாக தரித்து நிற்கும்படி கூறப்பட்டது. மதவாச்சிக்கும் மன்னாருக்கும் இடையே எமது வாகனம் ஆறு தடவைகள் நிறுத்தப்பட்டு பதிவு செய்யப்பட்டது. எமது குழு அதிதீவிர சோதனைகளுக்கு உட்படுத்தப்படாதபோதிலும், பேரூந்துகளில் பயணம் செய்யும் மக்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் இறக்கப்பட்டு, தமது பொதிகளையும் சுமந்துகொண்டு ஒருசில மீற்றர் தொடக்கம் அரை கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து சென்று சோதனைக்குட்படுத்தப்படுவதை நாம் அவதானித்தோம்.

மன்னார் நகரத்திலும், அதன் அயற் பிரதேசங்களிலும் ஏராளமான இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

### 2) மதவாச்சி செல்லும் வழியிலுள்ள கட்டுப்பாடுகள்

இவ்வருட ஆரம்பத்திலிருந்து கொழும்பிலிருந்து மன்னார் செல்லும் வாகனங்கள் எவையும் மதவாச்சிக்கு அப்பால் பயணம்செய்ய அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறே மன்னாரிலிருந்து செல்லும் வாகனங்களும் மதவாச்சிக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இது பேரூந்துகளுக்கும் தனியார் வாகனங்களுக்கும் பொருந்தும். இதனால் நாம் மதவாச்சிவரை புகைவண்டி மூலம் பயணம் செய்யும் கட்டாயத்திற்குட்படுத்தப்பட்டோம். பின்னர் மதவாச்சிக்கும், மன்னாருக்குமிடையே பயணம் செய்வதற்கு ஒரு வாகனத்தை ஒழுங்கு செய்து தரும்படி மன்னாரிலுள்ள எமது நண்பர்களிடம் கேட்டோம். இது பொதுமக்களுக்கு விசேடமாக வயோதிபர் அங்கவீனர், குழந்தைகளோடு பயணம் செய்வோருக்கு மிகுந்த அசௌரியங்களை ஏற்படுத்துகின்றது. அத்துடன் இத்தகைய செயற்பாடானது இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபடுவோருக்குப் பொருட்களை ஏற்றுவதும் திரும்ப இறக்குவதும் என அவர்களது பணிகளில் பல தடங்களை ஏற்படுத்துகின்றது. இவையும் பொருட்களுக்கான விலையை அதிகரிக்கின்றன.

வாகனங்களுக்கான கட்டுப்பாடுகள் இவ்வாறு இருக்கும் வேளையில் ஒருசிலரை மதவாச்சியைக் கடந்து செல்ல அனுமதிக்க முடியாது என்று இராணுவத்தினர் தன்னிச்சையாகத் தீர்மானிக்கின்றனர் என்றும் நாம் அறிந்தோம். ஏப்ரல் முதல் வாரத்தில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபடும் அமைப்பைச் சேர்ந்த இருவர் மன்னாரிலிருந்து அனுராதபுரம் செல்ல வந்த வேளையில் மதவாச்சிக்கு அப்பால் செல்ல அவர்கள் பாதுகாப்புப் படையினரால் அனுமதிக்கப்படவில்லை என்று எமக்குக் கூறப்பட்டது.

அதிகம் குழப்பம் நிறைந்ததும் தமிழ் சமூகத்திற்கு விளைவிக்கப்படும் வெளிப்படையான பாகுபாடுகளையும் நாம் அறிந்தோம். அதாவது மதவாச்சிக்கு அப்பால் செல்லும் தமிழ் மக்கள் மதவாச்சியிலிருந்து புகைவண்டி மூலமே பயணம் செய்யலாம், தெருவால் செல்ல முடியாது.

### 3) மன்னாரைச் சேராதவர்கள் மன்னாருக்குள் செல்லத் தடை!

ஏப்ரல் 15ஆம் நாள் மன்னாருக்குச் செல்லும் வழியில் மனிதாபிமானப் பணியாளர் ஒருவரைச் சந்தித்தோம். செட்டிகுளத்தைச் சேர்ந்த அவர் மன்னாரில் பணியாற்றுகின்றார். ஏப்ரல்14ம் நாள் இவர் மன்னார் செல்லும் வழியில் கட்டையடம்பனில் இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டார். இதனையிட்டு எத்தகைய முன்னறிவித்தலும் கொடுக்கப்படவில்லை.

நாமும் கட்டையடம்பன் சோதனைச் சாவடியை அடைந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டோம். மன்னாருக்கு வெளியே உள்ளவர்கள் (தமது தேசிய அடையாள அட்டையில் மன்னார் முகவரி இல்லாதவர்கள்) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று எமக்குக் கூறப்பட்டது. நாம் 2.00 மணித்தியாலங்கள் எறிக்கும் வெயிலில் நின்றோம். மன்னார் ஆயரில்லத்திற்குத் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டோம். ஆயர் பாதுகாப்புப் படையினருடன் தொடர்புகொண்டதால் பின்னர் தொடர்ந்து செல்ல இராணுவத்தினர் எமக்கு அனுமதி வழங்கினர். அவ்வேளை நாம் மதவாச்சிக்குத் திரும்பிச் செல்ல வாகனத்தைத் திருப்பிவிட்டோம்.

மன்னாரிலுள்ள தனது கணவனைக் காணச் சென்ற ஒரு பெண் தடுத்து நிறுத்தப்பட்டார். சிலர் புதுவருடத்திற்கு வேறிடம் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தனர். சிலர் வேலை நிமித்தம் மன்னாருக்குப் போய்க்கொண்டிருந்தனர். தமது உறவினர்களை அழைக்க வந்தவர்கள் திரும்பிச் சென்றதை நாம் கண்டோம். எமக்கு அனுமதி மறுக்கப்பட்டமைக்கு அதிகாரிகள் மன்னிப்புக்கோரி இது மேலிடத்து உத்தரவு என்றனர். இதற்கான காரணம் தமக்குத் தெரியாதென்று ஒருவர் கூறினார். தெற்கிலிருந்து வந்த சிங்களவர் ஒருவர் எல்.ரீ.ரீ.யினரால் கடத்தப்பட்டிருக்கலாம் என்று மற்றொருவர் கூறினார்.

ஆனால் நாம் மன்னாரில் தங்கியிருந்தபோது இப்படி எதுவும் கேள்விப்படவில்லை. நாம் மன்னாரில் தங்கியிருந்தபோது எமது கண்கண்ட சாட்சியாக நாம் கண்டது மன்னாருக்குள் பிரவேசிக்கும் அனைவரையும் இராணுவத்தினர் கட்டையடம்பனில் தடுத்து நிறுத்துகின்றனர் என்பதே.

### *4. மன்னாரில் உள்ள பல்வேறுபட்ட சமூகங்களின் பிரத்தியேகமான கரிசனைகள்:*

### முசலிப் பிரிவில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்

நானாட்டானிலுள்ள முகாம்களில் வாழும் இடம்பெயர்ந்த மக்களில் சிலரையும் நாம் சந்தித்தோம். எனினும் களிமோட்டையைப் போலல்லாது இங்கு பாதுகாப்புப்படையினர் எம்மைப் பின்தொடர்ந்ததால் மக்களுடன் தொடர்புகொள்வது கஷ்ரமாயிருந்தது. எமது குழுவினரைப்போன்றே மக்களும் படையினருக்கு முன்பாக எம்முடன் உரையாட விரும்பவில்லை. ஆலய வளாகத்தினுள் அமைந்திருந்த இடங்களைப் பார்வையிடவும், புகைப்படங்கள் எடுக்கவும் தம்மிடம் அனுமதி பெறவேண்டுமென்று படையினர் வற்புறுத்தினர்.

நாம் சந்தித்த மக்கள் செப்ரம்பர் தொடக்கத்தில் முசலிப் பிரிவிலிருந்து படை நடவடிக்கைகளின் நிமித்தம் இடம்பெயர்ந்தவர்கள். நாலாயிரத்திற்கும் மேற்பட்ட தொகையினர் அங்கிருந்தனர். இந்தப்படை நடவடிக்கையின் போது இங்கு எல்.ரீ.ரீ. யினர் எவரும் இருந்ததாக அறிவிக்கப்படவில்லை. ஆனால் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். மற்றுமிருவர் கொல்லப்பட்டதாகவும் அறிந்தோம். 2–3 நாட்களில் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்லலாம் என்று படையினரால் கூறப்பட்டது. பின்னர் ஜனவரியில் செல்லலாம் என்று கூறப்பட்டது. எனினும் இடப்பெயர்வின் 07 மாதங்களின் பின்னர் நாம் அவர்களைச் சந்தித்த போதும் இற்றைவரை அவர்கள் தமது இல்லங்களுக்குச் செல்ல படையினரால் அனுமதிக்கப்படவில்லை.

முகாம்களில் அடிப்படை வசதிகள் இருந்த போதிலும் நானாட்டான் அரிசி ஆலையின் நிலை மிகவும் அவலமானது. அரச சார்பற்ற நிறுவனங்களும், ஐ.நா. முகவர்களும் உணவு, தங்குமிட வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர். நாம் அரிசி ஆலையைத் தரிசித்த வேளையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தற்காலிக குடிசைகளை அமைப்பதற்கான பொருட்களை வழங்கியது. நானாட்டான் ஆலய வளாகத்தில் அமைந்திருந்த முகாம் தனக்கென தற்காலிக பாடசாலையைக் கொண்டிருந்தது. A/L வரை அங்கு வகுப்புகள் நடைபெறுவதற்காவும் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் அங்கு கற்பிப்பதாகவும் எமக்குக் கூறப்பட்டது. பாடசாலையில் தேவையான தளபாடங்கள் இல்லை என்பதும் எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

### மீனவ சமுதாயம்

மன்னாரின் பிரதான தொழில் மீன்பிடித்தல். மீனவ சமுதாயத்தினரையும் அவர்களின் பிரதிநிதிகளையும் மன்னாரிலும் பேசாலையிலும் சந்தித்தோம். இரவு நேர மீன்பிடித்தலுக்கான தடைகள், இழுவை வலைகளைப் பாவிப்பதில் கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு அவர்கள் முகம் கொடுக்கின்றார்கள்.

மாலை 6 மணிக்கு தமது இயந்திரங்களைப் படையினரிடம் கையளித்துவிட்டு மறுநாள் காலையில் பெற்றுக்கொள்ளும்படியான கட்டளையும் உண்டு. அவர்கள் இயந்திரங்களுக்குப் பதிலாகத் தமது மீன்பிடி வள்ளங்களைக் கையளிக்க முன்வந்தபோதும் கடற்படையினர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 10,15 குதிரைவலு கொண்ட இயந்திரங்களே அனுமதிக்கப்படுகின்றன. எண்ணெய்க்கான கட்டுப்பாடும் இந்த மீனவரைத் தாக்குகின்றது.

இந்தச் சட்டங்களைமீறி சிறிது தாமதமாக வரும் மீனவர்கள் படையினரால் தாக்கப்படுவதாக நாம் அறிந்தோம். இவர்கள் கொண்டுவரும் மீன்களை கடற்படையினர் எவ்வித கொடுப்பனவுமின்றி தமது நாளாந்தப் பாவனைக்கும், விடுதலையில் வீடு செல்லும்பொழுதும் எடுத்துச் செல்வதாக அறிகிறோம். மற்றும் இந்திய ரோலர்களும் இரவில் வந்து மீன்பிடித்துச் செல்கின்றன. காலையில் உள்ளூர் மீனவர்கள் செல்லும்போது அங்கு மீன்கள் குறைவாயுள்ளன. மதவாச்சி மற்றும் ஏனைய சோதனைச் சாவடிகளில் உள்ள கட்டுப்பாடுகளினால் பிடித்த மீன்களை ஏற்றுமதி செய்வதிலும் கஷ்ரங்களை அனுபவிக்கின்றனர். இதனால் பல தடைவைகள் மீன்கள் பழுதடைந்துள்ளன.

### வர்த்தகர்கள்

போக்குவரத்துத் தடைகளும் கடுமையாக மக்களைத் தாக்குகின்றன. மதவாச்சி உயிலங்குளம் போன்ற சோதனைச் சாவடிகளில் பொருட்கள் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்ட பின்னர் மீண்டும் ஏற்றப்படுகின்றன. மதவாச்சியில் வாகனமும் மாற்றப்படவேண்டும். இதனால் மேலதிக செலவுகள் ஏற்படுகின்றன. ரூபா 15,000/-ற்கு விற்கப்பட்ட ஒரு லொறி ஓடு தற்பொழுது 50,000/-ற்கு விற்க வேண்டியுள்ளது என்று வர்த்தகர் ஒருவர் கூறினார். இரும்புப் பொருட்கள்மீது விதிக்கப்பட்ட தடைகளினால் தாம் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக மற்றுமொரு வர்த்தகர் கூறினார்.

### விவசாயிகள்

மீன்பிடித் தொழிலுடன் விவசாயமும் இங்குள்ளவர்களின் பிரதான தொழில். எதிர்பாராத மழை அறுவடையின்போது தாக்கத்தை ஏற்படுத்தினாலும் கட்டுக்கரைக்குளத்து நீர் திறந்து விடப்பட்டமையினாலேயே பேரழிவு ஏற்பட்டதாக நாம் அறிந்தோம். நீரைத் திறந்து விடுவதும் பூட்டுவதும் சிவில் அதிகாரிகளின் வேலையாய் இருந்தபோதிலும் இந்தத் தீர்மானம் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக நாம் அறிந்தோம். அறுவடைக்காக வெளியூர்களில் விசேடமாக மட்டக்களப்பிலிருந்து வருபவர்களும் இம்முறை கட்டையடம்பன் கட்டுப்பாட்டினால் திரும்பிச் சென்றனர். (தொடர்ச்சி அடுத்த இதழில்)

## பொதுநிலையினர் வாழ்வில் இறைவார்த்தை .....

(13ம் பக்கத் தொடர்ச்சி)

### 4. தேவை அறிந்து உதவும் தாய் மரியாள்

நற்செய்தியில் தேவதாயின் இப்பண்பை பல இடங்களில் நாம் காண்கின்றோம். உலக இரட்சணியம் காலாகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. மரியாளும்கூட கன்னியாக இருந்தபோது இதை எதிர்பாாத்தவள்தான்.

கிறிஸ்துவை உலகிற்கு மனித உருவில் கொண்டுவருவதற்கு இறைத்தந்தைக்கு ஒரு உதரம் தேவைப்பட்டது. அதற்காக மரியாளைத் தெரிந்துகொண்ட இறைவன் அவளைப் பிறப்பில் இருந்தே மாசுமறுவின்றிக் காத்தார். அருட்கொடைகளால் நிரப்பினார். காலம் வந்தபோது இறைவனின் தெரிவு கபிரியேல் தேவதூதன் மூலம் அறிவிக்கப்பட்டது. உலக இரட்சிப்பின் தேவையை உணர்ந்தவளாய் கன்னியாய் கருத்தாங்கும் உதரம் கொண்டிருப்பதால் ஏற்படும் பின்விளைவுகளைத் தெரிந்திருந்தும், தன்னை முற்று முழுதாய் இறைசித்தத்துக்குக் கையளிக்கின்றாள்.

முதிய வயதில் தன்னைப்போலவே கருக்கொண்டிருக்கும் எலிசபெத்தைச் சந்திக்க மலைநாட்டிற்கு ஓடோடிச் செல்கின்றார். ஆறு மாதங்கள் தங்கியிருந்து அவளுக்கு உதவுகின்றாள். எங்கு தேவை இருக்கின்றதோ அங்கு மரியாள் இருக்கின்றாள். கானாவில் திருமண வீட்டில் அதே உணர்வு தேவமாதாவிடம் மேலோங்கி இருப்பதைக் காண்கின்றோம். இரசம் தீர்ந்துவிட்டது. இதைப்பற்றி மரியாளிடம் யாரும் கூறக்கூடிய வாய்ப்பு இல்லை. மதுவுக்கும் மாதருக்கும் தொடர்பிருக்கக் காரணம் இல்லை. வேறு பொருட்கள், உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதைத் தேவதாயிடம் தெரிவித்து இருக்கலாம். திருமண வீட்டில் மது இல்லையென்றால் இக்குடும்ப மாதிடம் யார் முறையிட முடியும். அதுவும் அவள் திருமண வீட்டிற்கு அழைக்கப்பட்ட அதிதியே அன்றி மணவிழாவை நடத்துபவர் அல்லவே.

ஆயினும் வீட்டின் நிலை அறிந்து, தேவை உணர்ந்த அன்னை கேட்காமலே உதவும் மாதாகத் தன்னை இனம் காட்டுகிறாள்.

### வேண்டுதல் :-

எமது தேவைகள் அனைத்திலும் சிறப்பாக இந்நாட்களின் உச்சத் தேவையான நாட்டின் சமாதானத்தை வேண்டி அன்னையிடம் செபித்தல்.

வழிபாடு பற்றிய ஆழமான அர்த்தங்களை இலகு தமிழில் வெளிக்கொணரும் புதிய தொடர்!

தருவது வலண்டின் ஜோசப்



# வாழ்வும் வழிபாடும்

## வழிபாடும் பண்பாடும்

தொடர் – 20

### பண்பாட்டுமயமாக்கல் (inculturation)

தழுவியமைத்தல் என்பது சில ஐரோப்பியப் பண்பாட்டுச் செயல்களுக்குப் பதிலாக அதற்கு இணையான நாட்டின் பண்பாட்டுச் செயல்களைப் பயன்படுத்துவது என்பதாகப் பொருள் கொள்ளப்பட்டது. வெளிநாடுகளில் முகமன் கூறும் நேரத்தில் முத்தம் தருவது பண்பாட்டுச் செயல். நம்முடைய நாட்டில் அவ்வாறு செய்வதில்லை. கைகூப்பி வணங்கி நமது மரியாதையைச் செலுத்துவதே நமது பண்பாடு.

இந்தத் தழுவியமைத்தல் அடிப்படையில் 12 அம்சத் திட்டத்தை 1969ஆம் ஆண்டே உரோமை அங்கீகரித்து அனுமதி வழங்கியது. கீழே உட்காருதல், கைகூப்பி வணங்குதல், நமது மரபுப்படி மெழுகுவர்த்திக்குப் பதிலாக எண்ணெய் விளக்கைப் பயன்படுத்துதல் போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்ட இந்தத் தழுவியமைத்தல் மக்கள் மத்தியில் எதிர்பார்த்த மாற்றத்தைக் கொண்டுவரவில்லை. தங்கள் வாழ்வுக்குப் பொருந்தி வருகின்ற சில அம்சங்களை மட்டுமே மக்கள் எடுத்துக் கொண்டனர்.

பண்பாட்டுமயமாக்குதல் என்பது தழுவியமைத்தலைவிட மிக ஆழமான செயல்பாடு என்பதை திருச்சபையே படிப்படியாகத்தான் உணரத்துவங்கியது. பண்பாட்டு மயமாக்குதல் என்பது மக்கள் மத்தியில் நற்செய்தியின் மதிப்பீடுகளை வெளிப்படுத்தும் அடையாளங்களை வழிபாட்டில் பயன்படுத்துதல் என்ற கருத்து திருச்சபையில் படிப்படியாக நுழைந்தது. பொங்கல் திருநாள், பல்வேறு தியான முறைகள், இலக்கியச் செல்வங்கள், இசை போன்றவை வழிபாட்டில் புகுத்தப்பட்டன.

இவை மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன. என்றோ செய்யப்பட்ட பழமையான பண்பாட்டுச் செயல்முறைகளை வழிபாட்டோடு இணைப்பது பொருத்தமானதுதானே! உரோமை வழிபாட்டு முறைக்கு மாற்றாக இந்திய வழிபாட்டு முறை ஒன்றை உருவாக்குவதே பண்பாட்டுமயமாக்குதலின் நோக்கமாக இருக்க முடியும். ஏனெனில் சொந்த மண்ணின் பண்பாட்டு வடிவமாக வழிபாடு அமையும் நேரத்தில்தான் மனிதன் தன்னுடைய உணர்வுகளை முழுமையாக வெளிப்படுத்தி இறைவனைப் போற்ற முடியும். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்வந்த திருச்சபையின் ஆவணங்கள் இந்த ஒரு கருத்தை ஏற்றுக் கொண்டு ஆக்கப்பூர்வமான செயல்பாட்டிற்கு வழிவகுக்கத் துவங்கின.

எப்படி இந்தப் பணியைத் துவங்குவது? யார் இந்தப் பணியைத் துவங்குவது? கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் காத்து வளர்த்து புதிய பண்பாட்டு வடிவங்களில் வழங்கும் பொறுப்பு யாருக்கு உண்டு? என்ற கேள்விகளை திருச்சபையே மிகக்கவனமாக ஆய்ந்து சில வழிமுறைகளை முன்வைக்கிறது.

### வழிமுறைகள்

முதன் முதலாக திருச்சபையின் கவனத்தை ஈர்த்தது வழிபாட்டுச் செபங்கள். உரோமைப் பூசைப் புத்தகத்தின் இலத்தீன் செபங்களை மொழி பெயர்த்து தமிழில் அல்லது வேறு மொழிகளில் பயன்படுத்துவதுதான் நமது வழிபாட்டு முறையாகக் கருதப்பட்டது. இன்று இலத்தீன் செபங்களை அப்படியே மொழி பெயர்ப்பது உரிய பயன் தராது என்ற அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தச் செபங்களின் உட்கருவை நமது மொழியில் நமது சிந்தனை முறையில் வெளிப்படுத்துவதுதான் பண்பாட்டுமயமாக்கலின் முதற்படி என்பதைத் திருச்சபை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. 'பண்பாட்டுமயமாக்கலும் உரோமை வழிபாடும்' என்ற ஆவணம் திருவழிபாடு எண் 37 – 40 எப்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்ற விளக்கங்கள் தாங்கி வெளிவந்தது.

இரண்டாவதாக, பண்பாட்டுமயமாக்குதல் என்ற ஆவணம் சுட்டிக்காட்டும் பகுதி திரு இசை. இசை வழிபாட்டில் பெறும் இடத்தைச் சுட்டிக்காட்டும் திருச்சபை பண்பாட்டின் அழகிய வடிவமாக இசை வழிபாட்டில் இடம்பெற வேண்டும் என்கிறது.

மூன்றாவதாக, திருச்சபை சுட்டிக்காட்டும் பகுதி வெகுஜன பக்தி முயற்சிகள். இவை குறிப்பிட்ட பண்பாட்டில் வடிவெடுப்பவை, இந்தப் பக்தி முயற்சிகளை அப்படியே வழிபாட்டோடு இணைப்பது அர்த்தமற்றது. அவற்றைத் தெளிவாக ஆய்வுசெய்து வழிபாட்டின் இயல்புக்கு இணைந்து செல்லும் அடையாளங்களை வழிபாட்டில் பயன்படுத்துவது மிகச்சிறந்த பண்பாட்டுமயமாக்குதலாகும். எடுத்துக்காட்டாக, நற்கருணை வழிபாட்டில் நாம் புகழுரையில் பயன்படுத்தும் தீப, தூப, மலர் அஞ்சலிகளும் ஆர்ப்பரிப்புக்களும் இயேசுவோடு சேர்ந்து இறைவனைப் புகழும் உன்னதமான நேரத்தில் இத்தகையப் பண்பாட்டுச் சின்னங்களும் செயல்களும் மக்களின் மனங்களை இறைவன்பால் எளிதாக எழுப்புகின்றன.

நான்காவதாக, திருச்சபை சுட்டிக்காட்டும் பகுதி செய்கைகளும், பாவனைகளும். நமது பண்பாட்டில் இறைவழிபாட்டிற்கு உடல் அசைவுகளும் வணக்க முறைகளும் மிக அடிப்படையானவை. அங்க அசைவுகள் அருமையான வழிபாட்டு மொழிகளாக அமைகின்றன. 'Body language' என்ற ஆங்கிலக் கருத்துருவம் இறைவனோடு மட்டுமல்ல, வந்திருக்கும் இறைமக்களோடும் நல்லுறவுகொள்ள, அனைவரும் இயேசுவின் உடல் என்ற ஆன்மீக உணர்வை ஏற்படுத்த உதவுகின்றன.

ஐந்தாவதாக, குறிப்பிட்ட பண்பாட்டின் மிக உன்னதமான வடிவங்களாகிய திருமணச் சடங்குகள், இறந்தவர்களுக்கான சடங்குகள் ஆகியவற்றைப் பண்பாட்டு மயமாக்க வேண்டும் என்பதைத் திருச்சபை ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. திருமணத்தில் மோதிரத்திற்குப் பதிலாக தாலியைப் பயன்படுத்துவதோடு நின்றுவிடாமல் முழுமையான திருமண வழிபாட்டையும் நமது பண்பாட்டு மயமாக்க வேண்டும் என்பது சிறந்த தூண்டுதல்தானே!

### சில எச்சரிக்கைகள்

பண்பாட்டு மயமாக்குதலைத் தவறாகப் புரிந்துகொண்டு பிற சமயங்களின் நம்பிக்கைகளை நமது சமயத்தில் உள்வாங்குவது மிகத் தவறான பாதை என்பதைத் திருச்சபையின் ஆவணங்கள் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை.

சில அடிப்படையான விவிலிய அடையாளங்கள் கிறிஸ்தவத்தின் தனித்தன்மையைச் சுட்டிக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக அப்பம், இரசம் போன்றவை அடிப்படையான விவிலிய அடையாளங்கள். அவற்றை மாற்றி நமது நாட்டின் உணவுப் பொருட்களை அறிமுகப்படுத்துவது பண்பாட்டு மயமாக்குதல் ஆகாது.

இங்கு சில தெளிவுகளும் தேவைப்படுகிறது. இந்து சமயத்தில் பயன்படுத்தப்படும் சில அடையாளங்கள் நமது பண்பாட்டுச் சின்னங்கள். அவற்றை எடுத்துக்கொண்டு கிறிஸ்தவப் பொருள் தந்து, கிறிஸ்தவ மதிப்பீடுகளையும் நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தி வளர்க்கும் அடையாளங்களாகப் பயன்படுத்துவதில் தவறு இல்லை.

வழிபாட்டில் நாம் பயன்படுத்தும் குத்துவிளக்கே இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, குத்துவிளக்கிற்கு ஆயிரமாயிரம் அர்த்தங்கள் தருகிறது இந்து சமயம். அதைப்பற்றிய கவலைகள் நமக்குத் தேவையில்லை. இது நமது பண்பாட்டுச் சின்னம். நமது வீடுகளில் பயன்படுத்தப்படும் ஆழமான கலைவடிவம். இதற்கு கிறிஸ்தவப் பொருள் உண்டு. உலகிற்கு ஒளியாகவும், அறிவுச் சுடராகவும், நெருப்புத் தூணாகவும் இருந்து நம்மை வழிநடத்தும் மூவொரு இறைவனின் பிரசன்னத்தைக் குறிக்கிறது இந்த விளக்கு. இதைப் பயன்படுத்துவதில் என்ன தவறு?

### தல ஆயர்களின் கடன்

பண்பாட்டுமயமாக்குதலின் முழுப்பொறுப்பையும் தல ஆயர்களிடம் விட்டுவிட்டது உரோமைத் திருச்சபை. கிறிஸ்தவ நம்பிக்கைக்கும் ஒழுக்கத்திற்கும் புறம்பாக பண்பாட்டு மயமாக்கல் நடந்துவிடக்கூடாது என்ற ஒரு கவலை மட்டும்தான் உரோமை ஆணையத்தின் மனச்சாட்சியாக இருப்பதை அண்மைக் காலத்து ஆவணங்கள் தெரிவிக்கின்றன. தல ஆயர்கள் இந்தப் பண்பாட்டுமயமாக்கல் முயற்சிகளில் இறங்க வேண்டும். நம்முடைய பண்பாட்டு வடிவங்களாக வழிபாட்டைச் சீரமைக்க வேண்டும். நம்முடைய ஆயர்களுக்கிடையே கருத்தொற்றுமை இல்லாத ஒரே சிக்கல்தான் பண்பாட்டு மயமாக்குதலை இத்தனைக் காலம் தாமதப்படுத்தியிருக்கிறது.

### மூன்று விதிமுறைகள்

பேராசிரியர் சிப்புங்கோ பண்பாட்டு மயமாக்குதலுக்கு மூன்று முறைகளைப் பரிந்துரைக்கின்றார். ***ஒன்று*** உயிரோட்டமுள்ள இணைச்செயல் (Dynamic Equivalance). உரோமை வழிபாட்டுப் புத்தகத்தில் உள்ள அடையாளச் செயல்களுக்கு இணையான, நடைமுறையில் இருக்கக்கூடிய அடையாளச் செயல்களைக் கொண்டு இருக்கின்ற வழிபாட்டுச் செயல்களை மாற்றலாம்.

***இரண்டு,*** படைப்பாற்றல் மிக்க உள்வாங்கும் திறன் (Creative Assimilation). உரோமை வழிபாட்டு முறையின் உள்ளியல்புகளை உள்வாங்கி, அவற்றை நமது பண்பாட்டுச் சின்னங்கள் வழியாக வெளிக்கொணரும் முறை. இந்த முறைக்கு வழிபாட்டியல் நிபுணர்களின் பணி சிறப்பாகத் தேவைப்படுகிறது. ***மூன்றாவது*** சீரான முன்னேற்றம் (Gradual Progress). சீரான முன்னேற்றம் என்பது இறைமக்கள் அனைவரையும் உள்ளடக்கிய முயற்சி. பண்பாட்டுமயமாக்குதல் என்பது அறிவு ஜீவிகளின் செயல் மட்டுமல்ல, குருக்களின் செயல்மட்டுமல்ல, இறைமக்கள் அனைவரின் ஒட்டுமொத்தமான செயல்பாடு. இந்தச் செயல்பாடு அறிஞர் பெருமக்கள் குழுவில் ஆக்கம் பெற்றாலும், மக்களின் சம்மதம் பெறவேண்டும். மக்கள் மத்தியில் பரிசோதனை செய்து வெற்றி பெறவேண்டும். இந்த முயற்சிகள் படிப்படியாகத்தான் வளர்ச்சி பெறமுடியும். மாற்றத்தை ஒரு நாளிலே உருவாக்க முடியாது.


### இன்றைய சவால்கள்

இந்த மூன்று வழிமுறைகளும் மிகச்சிறந்தவையாக மக்களாலும், அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் இன்றைய பின்நவீனத்துவ சமுதாயம் வேறுபல சவால்களை முன்வைக்கிறது. பண்பாட்டில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதாக தொடர்பு ஊடகங்கள் இன்று விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நாகரீக வளர்ச்சியைப் பண்பாட்டு வளர்ச்சியாக இந்தச் சமுதாயம் எடைபோட்டுக் குழப்பம் அடைந்துள்ளது.

பண்பாடுகள் வளர்ச்சிபெறும், ஆனால் ஒருபோதும் தலைகீழாக மாறாது. நாகரீகங்கள் காலத்து வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படலாம். ஆனால் பண்பாடுகள் காலங்களால் மெருகூட்டப்படுகின்றன. என்றுமே ஒளிவீசி எரிந்து கொண்டிருக்கின்றன. இப்போது எல்லாம் மாறிவிட்டதே! மேலை நாட்டு வாழ்க்கை முறை வந்தபின், ஏன் மேலைநாட்டு வழிபாட்டு முறையைப் புறக்கணிக்க வேண்டும் என்று சவால்விடும் நபர்கள் உண்டு. வழிபாடு என்பது நாகரீகம் சார்ந்த ஒன்று அல்ல, பண்பாடு சார்ந்த ஒன்று. தொடர்ந்து பண்பாட்டுமயமாக்குதல் நடைபெற வேண்டும். நல்ல விழுமியங்கள் மக்கள் மத்தியில் வளர இந்தப் பண்பாட்டுமயமாக்கல் மிகத் தேவையான ஒன்று.

*(தொடர்ந்து வழிபடுவோம்...)*

# மனித வாழ்க்கையில் உறவுகள்



றப்பாயல் சேவியர், கனடா.

'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்று கூறப்படுகின்றது. எனவே மனித வாழ்க்கையில் உறவுகள் மிகவும் முக்கியம் பெறுகின்றன. மகிழ்ச்சி என்பது பெருமளவிற்கு ஒருவர் மற்றவர்களுடன் கொண்டிருக்கும் சிறந்த உறவிலேயே தங்கியிருக்கின்றது.

முதிர்ச்சியடைந்த ஒருவரின் முக்கியமான பண்புகளில் ஒன்று அவர் ஏனையவர்களுடன் சிறந்த உறவுகளை நீண்ட காலத்திற்கு ஏற்படுத்தக்கூடியதாய் இருத்தலாகும். ஒருவர் மற்றவர்களுடன் எவ்வாறான உறவுகளைப் பேணுகின்றார் என்பதனையும் மற்றவர்கள் அவருடன் எவ்வாறான உறவுகளைக் கொண்டுள்ளனர் என்பதனையும் பொறுத்தே அவரது தனிமனிதப் பண்புகள் கணிப்புக்குள்ளாகின்றன.

ஒருவர் மற்றவர்களுடன் சேர்ந்து இருக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றார் என்பதையும் அவர்களுடன் எவ்வளவு தூரம் வெளிப்படையாக விடயங்களை பரிமாறக்கூடியதாக உள்ளது என்பதும் அவர்களுடன் சேர்ந்து எவ்வளவு தூரம் மனம்விட்டு சிரிக்கக்கூடியதாக உள்ளது என்பதும் கலந்துரையாடல்கள் எவ்வளவு தூரம் சுமூகமாக இடம் பெறுகின்றன என்பதையும் பொறுத்து அந்த உறவானது எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது என்பதனை அளவிட்டுக்கொள்ள முடியும்.

அன்பான உறவுகள் குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் மட்டும் உரியதொன்றல்ல. நிறுவனங்களுக்கும் அவை மிகவும் முக்கியமானவையாகும். நிறுவன ஊழியர்களிடையே அன்பான உறவுகள் நிலவும்போதுதான் அந்நிறுவனம் வெற்றிகரமான நிறுவனமாக இருக்க முடியும்.

ஒருவர் தனது வாழ்நாளில் எதிர்நோக்கும் அதிகமான பிரச்சினைகள் உறவுப் பிரச்சினைகளாகும். எனவே சிறந்த உறவு என்பது என்ன? யாருடன் உறவுகளைத் தவிர்த்துக்கொள்வது நல்லது என்பது தொடர்பில் தெளிவான தீர்மானங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒருவர் இன்னொருவருடன் உறவினைக் கொண்டிருக்கும்போது அந்த இருவரும் இந்த உறவினால் பயன் அடைபவர்களாக இருத்தல் வேண்டும். ஒருவர் மட்டும் பயன் அடைய மற்றயவர் ஏதோ ஒன்றினை இழப்பவராக இருப்பின் அவை சிறந்த உறவுகளாக இருக்க முடியாது. "நீங்கள் நண்பர்களை உருவாக்கிக்கொள்ளும் நோக்கில் மற்றவர்களை நாடிச் சென்றால் நண்பர்கள் கிடைக்கமாட்டார்கள். பதிலாக சிறந்த நண்பராக நீங்கள் அவர்களை அணுகினால் பெருந்தொகையான நண்பர்கள் கிடைப்பார்கள்" என சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

பலர் மற்றவர்கள் தங்களை நேசிக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆனால் தாம் மற்றவர்களை முதலில் நேசிக்கப் பழகவேண்டும் என்ற உண்மையை அவர்கள் உணர்வதில்லை. ஒருவர் மற்றவர்கைள நேசிக்கத் தொடங்குவார்கள். அது அன்பான உறவுகள் பெருக்கெடுக்க வழிவகுக்கும். எந்த மதத்தின் தத்துவத்தை எடுத்துப்பார்த்தாலும் "அனைவரையும் அன்பு செய்து வாழவேண்டும்" என்ற உண்மை வலியுறுத்தப்படுகின்றது. சிறந்த உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஐந்து வழிகள் முக்கியம் எனக் குறிப்பிடுகின்றார். ஓர் அறிஞர், அவையாவன.

1. மற்றையவர்களில் உண்மையான அக்கறையினைக் கொண்டிருத்தல்.
2. மற்றவர்களைக் காணும்போது அல்லது பழகும்போது புன்னகையுடன் இருத்தல் அல்லது பேசுதல்.
3. மற்றவர்கள் பேசும்போது அதனை அக்கறையுடன் கேட்டல். தங்களைப் பற்றியும் தாம் விரும்பும் விடயங்களைப் பற்றியும் அவர்கள் பேசுவதற்கு ஊக்குவித்தல்.
4. மற்றவர்களின் விருப்பு வெறுப்புக்களைக் கருத்தில்கொண்டு அவர்கள் விரும்பும் விடயங்களைப் பேசுவதுடன் விரும்பாதவற்றைத் தவிர்த்தல்.
5. மற்றயவர் தான் ஒரு முக்கியமான நபர் என்பதனை உணரச் செய்தல். இதனைப் போலியாகச் செய்யாமல் முழு மனதுடன் செய்தல் வேண்டும். ●

# வார்த்தை தரும் வாக்குறுதி

பீற்றர் கிறிஸ்பி குரூஸ்
பேசாலை

இறைவார்த்தை ஆண்டிலே இறைவார்த்தையை வாசிக்க வேண்டும் என மறைமாவட்டம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதற்கான முயற்சிகளையும் எடுத்து நிற்கின்றது. விவிலிய அரங்கேற்றம், கருத்தரங்கு, வழிபாடு என்று பலவழிகளிலே இறைவனை நாம் அண்டிச்செல்ல வழிசமைத்துத் தரப்படுகின்றது. 'வீட்டுக்கு ஒரு விவிலியம்' என்று நடைமுறையில் இருந்து வந்தது, இப்போது 'ஆளுக்கு ஒரு விவிலியம்' என்று நடைமுறைக்கு வந்துவிட்டது.

இன்றைய விஞ்ஞான உலகம் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அளவுக்கு உயர்ந்து நிற்கின்றது. எல்லாவற்றிற்கும் ஓர் எல்லை இருக்கிறது. ஆனால் இறை அரசுக்கு அணைகட்ட முடியுமா? அந்த இறை அரசுக்கு நாம் உரிமைகோர வேண்டுமானால் திருவிவிலியத்தை எடுப்போம், வாசிப்போம், தியானிப்போம், செபிப்போம், வாழுவோம். மேன்மையான வாக்குறுதிகள், ஆசீர்வாதமான வாக்குறுதிகள் வேதத்தில் நிறைய இருக்கின்றன. அள்ளிப்பருக இறைவார்த்தை ஆண்டு ஆசீர்வாதமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இதோ அந்த ஆசீர்வாதமான வார்த்தைகள்:

### 1. பேறுபெற்றிட

இறைவார்த்தையை வாசித்து அதன்படி வாழுவோர் பேறுபெற்றோர்.
(திருவெளி. 1:3) "இந்த இறைவாக்குகளைப் படிப்போரும், இவற்றைக் கேட்போரும், இந்நூலில் எழுதியுள்ளவற்றைக் கடைப்பிடிப்போரும் பேறுபெற்றோர்"
(திருவெளி. 22:7) "இந்த நூலில் உள்ள இறைவாக்குகளை கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர்".

### 2. நிலைவாழ்வு பெற்றிட

சீமோன் பேதுரு யேசுவிடம் சரணடைகிறார்.
(யோவா 6:68) "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம். நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன".

### 3. உயிர்வாழ்ந்திட

நாம் உயிர்வாழ இறைவார்த்தை அவசியம்.
(இ.ச. 8:3) "மனிதர் அப்பத்தினால் மட்டுமன்று மாறாக கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் உயிர் வாழுகின்றார்".

### 4. குணம் பெற்றிட

இறைவார்த்தை நோயில் இருந்து நமக்கு விடுதலை அளிக்கிறது.
(தி.பா.107:20) "தம் வார்த்தையை அவர் அனுப்பி அவர்களைக் குணப்படுத்தினார்"
(சா.ஞா 16:12) "பச்சிலையோ, களிம்போ அவர்களுக்கு நலம் அளிக்கவில்லை. ஆனால் ஆண்டவரே உமது சொல்லே எல்லா மனிதருக்கும் நலம் அளிக்கிறது".

### 5. புதுப்பிறப்பு அடைந்திட

நாம் புதுவாழ்வு பெறவேண்டுமானால் இறைவார்த்தை அவசியம்.
(1போது 1:23) "நீங்கள் அழியக்கூடிய வித்தினால் அல்ல, மாறாக உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்"

### 6. மன உறுதியடைந்திட

சோர்ந்துபோன நேரத்திலே நம்மை உந்தித்தள்ளுவது இறைவார்த்தை.
(உரோ 15:4) "மறைநூல் தரும் மன உறுதியினாலும், ஊக்கத்தினாலும் நமக்கு எதிர்நோக்கு உண்டாகின்றது."

### 7. வழிகாட்டிட

பாதைதவறி நாம் சென்றுவிடாமல் இறைவார்த்தை பாதுகாக்கும்.
(தி.பா. 119:105) "என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே."

### 8. நெறிப்படுத்திட

பண்புள்ள மனிதனாக வாழ இறைவார்த்தை வழிகாட்டுகின்றது.
(2திமொ 3:16) "மறைநூல் அனைத்தும் கடவுளின் தூண்டுதல் பெற்றுள்ளது. அது கற்பிப்பதற்கும், கண்டிப்பதற்கும், சீராக்குவதற்கும், நேர்மையாக வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனள்ளது."

### 9. அறிவித்திட

இறைவார்த்தையை அறிவிக்க நமக்கும் கடமை உண்டு.
(2திமொ 4:2) "இறைவார்த்யை அறிவி. வாய்ப்புக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச்செய்வதில் நீ கருத்தாயிரு. கண்டித்துப்பேசு, கடிந்துகொள், அறிவுரை கூறு மிகுந்த பொறுமையோடு கற்றுக்கொடு."

### 10. புதுப்படைப்பு

இறைவன் தனது வார்த்தையால் அனைத்தையும் படைத்தார்.
(எசா 43:19) "இதோ புதுச்செயல் ஒன்றை நான் செய்கிறேன். இப்பொழுதே இது தோன்றிவிட்டது. நீ அதைக் கூர்ந்து கவனிக்கவில்லையா? பாலைநிலத்தில் நான் பாதை ஒன்று அமைப்பேன். பாழ்வெளியில் நீரோடைகளைத் தோன்றச் செய்வேன்".

### 11. எப்போதும் பேசிட

என் வாயின் வார்த்தை எல்லாம் யேசு நாமம் சொல்ல வேண்டும்.
(இ.ச.6:7) "நீ அவற்றை உன் பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல். உன் வீட்டில் இருக்கும்போதும் உன் வழிப்பயணத்தின்போதும் நீ படுக்கும்போதும், எழும்பும்போதும் அவற்றைப் பற்றி பேசு."



### 12. சான்று பகர்ந்திட

நற்செய்திக்கு சாட்சியமான வாழ்வு வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார்.
(தி. பணி 8:25) "பிறகு அவர்கள் ஆண்டவரின் வார்த்தையை எடுத்துக்கூறி சான்று பகர்ந்தவாறே எருசலேமுக்கு திரும்பினார்கள். சமாரியாவின் பல ஊர்களிலும் நற்செய்தியை அறிவித்தார்கள்".

### 13. தீயோனை வென்றிட

தீமையில் இருந்து பாதுகாக்கின்றது:
(1யோவா 2:4) "சிறுவரே நீங்கள் தந்தையை அறிந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதியுள்ளேன். தந்தையரே தொடக்கமுதல் இருக்கும் அவரை நீங்கள் அறிந்துள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதியுள்ளேன். இளைஞரே, நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள். கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கிறது. தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள். எனவே உங்களுக்கு எழுதியுள்ளேன்"

### 14. பாவம் செய்யாதிருக்க

பாவத்தில் இடறி விழாதிருக்க இறைவார்த்தை பாதுகாக்கும்.
(தி.பா.119:11) "உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இருதயத்தில் இருத்தியுள்ளேன்."

### 15. படைப்புக்களை தூயதாக்க

படைப்புக்கள் அனைத்தும் இறைவார்த்தையினால் தூய்மை அடைகின்றன.
(1திமெ. 4:4-5) "கடவுள் படைத்தது அனைத்தும் நல்லதே. நன்றி உணர்வுடன் ஏற்றுக்கொண்டால் எதையும் விலக்க வேண்டியதில்லை. ஏனெனில் கடவுளின் வார்த்தையும் நமது மன்றாட்டும் அதைத் தூய்மையாக்கும்".

### 16. நம்மை தூய்மையாக்க

இறைவார்த்தை நமது உள்ளத்தையும், உடலையும் தூய்மை ஆக்குகின்றது.
(யோவா 15:3) "நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்"

### 17. திருச்சபையைத் தூய்மையாக்குகிறது

இறைவனுடைய வார்த்தை திருச்சபையை தூய்மையாக்கி வழிநடத்துகின்றது.
(எபே 5:26-27) "வார்த்தையாலும் நீரினாலும் அதனைக் கழுவி தூயதாக்குமாறு இவ்வாறு செய்தார். அத்திருச்சபை கறைதிரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும், மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு இப்படிச் செய்தார்."

### 18. சுவைத்திட

சுவையுள்ள உணவு இறைவார்த்தை
(எரே. 15:16) "நான் உம் சொற்களைக் கண்டடைந்தேன். அவற்றை உட்கொண்டேன். உம் சொற்கள் எனக்கு மகிழ்ச்சி தந்தன. என் உள்ளத்திற்கு உவகை அளித்தன"

### 19. தீர்ப்பு அளித்திட

தண்டனைத் தீர்ப்பு வழங்குவது இறைவார்த்தை.
(யோவா 12:47) "நான் கூறும் வார்த்தைகளைக் கேட்டும் அவற்றை கடைப்பிடியாதவருக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்குபவன் நானல்ல. ஏனெனில் நான் உலகிற்குத் தீர்ப்பு வழங்க வரவில்லை. மாறாக அதை மீட்கவே வந்தேன்".

### 20. ஆறுதல் அளிக்கிறது

அலைமோதும் உலகில் ஆறுதல் தருவது இறைவார்த்தை.
(தி.பா. 119:50) "உம் வாக்கு என் துன்பத்தில் எனக்கு ஆறுதல் அளிக்கிறது. ஏனெனில் அது எனக்கு வாழ்வளிக்கிறது".

### 21. எச்சரித்திட

நீதிநெறி தவறாத இறைவார்த்தை எச்சரிக்கை செய்கின்றது.
(தி.பா. 19:9-11) "ஆண்டவரின் நீதி நெறிகள் உண்மையானவை. அவை முற்றிலும் நீதியானவை. அவை பொன்னிலும் பசும் பொன்னிலும் மேலாக விலைமிக்கவை. தேனினும் தேனடையினின்று சிந்தும் தெளி தேனினும் இனிமையானவை. அவற்றால் அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவற்றைக் கடைப்பிடிப்போர்க்கு மிகுந்த பரிசுண்டு"

### 22. பற்றிக்கொள்ள

இறைவார்த்தையை வாழ்வில் ஆதாயமாக்கிக்கொள்ள வேண்டும்.
(பிலி 2:16) "கிறிஸ்துவின் நாளில் நான் பெருமை அடையும் வகையில் வாழ்வின் வார்த்தையைப் பற்றிக்கொள்ளுங்கள். வீணாக நான் ஓடவில்லை. வெறுமனே நான் உழைக்கவில்லை என்பது அதனால் தெளிவாகும்"

### 23. போர் வாள்

அனைத்து ஆபத்திலிருந்து என்னைக் காப்பது இறைவார்த்தை.
(எபே. 6:17) "மீட்பை தலைச்சீராவாகவும், கடவுளின் வார்த்தையை தூய ஆவி அருளும் போர் வாளாகவும் எடுத்துக் கொள்ளுங்கள்"

### 24. போற்றிட

இறைவார்த்தையை புகழ்ந்துபாடி இறைவனை ஆராதிப்பது நமது கடமை.
(தி.பணி. 13:48) "இதைக் கேட்ட பிற இனத்தார் மகிழ்ச்சியடைந்தனர். ஆண்டவரின் வார்த்தையைப் போற்றிப் புகழ்ந்தனர். நிலைவாழ்வுக்காகக் குறிக்கப்பட்டோர் அனைவரும் நம்பிக்கை கொண்டனர்."

### 25. வாழ்வுபெற

இறை ஆசீர்பெற்று வாழ்ந்திட இறைவார்த்தை ஆசீர்வாதமாகின்றது.
(யோவா 6:63) "வாழ்வு தருவது தூய ஆவியே. ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன.

### கடவுளுடைய வார்த்தை

(எபி 4:12) "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்கு குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது."

இறைவார்த்தையின் உன்னதத்தை இந்த வார்த்தைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. இதனை அறிந்தும் அறிவிலிகளாய் வாழ்ந்தால் இறைவார்த்தை தண்டனைத் தீர்ப்பு வழங்கும். எனவே இறைவார்த்தையை படைக்கலன்களாகவும், தலைச்சீராகவும் அணிந்துகொண்டு போர்வாள் என்னும் இறைவார்த்தையை கையில் எடுத்துக்கொண்டு நற்செய்தி அறிவித்து வாழ்வினால் சான்று பகர்வோம்.

## உங்களுக்குத் தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.63

தனது மூன்றாவது தூதுரைப் பயணத்தையும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு ஜெருசலேமுக்குப் புனித பவுல் திரும்புவதையும் அவர் யூத மக்களால் துன்புறுத்தப்பட்டு ஆயிரத்தவர் தலைவனால் சிறை வைக்கப்படுவதையும் பின்பு ஆளுனரிடம் அனுப்பப்படுவதையும் வினாக்கள் தொகுக்கப்பட்ட பகுதிகளில் காண்கின்றோம். புனித பவுலின் வாழ்வும் பணியும் திருச்சபை கட்டப்படுவதற்கும், வளர்க்கப்படுவதற்கும் சிறந்த ஒரு தளமாக, அத்திவாரமாக இருந்தமை இவற்றில் புலனாகின்றது.

*இனி வினாக்களுக்கு வருவோம். இம்மாதத்திற்கான வினாக்கள் திருத்தூதர்பணி 21ம் 22ம் அதிகாரங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன.*

1) தீர் என்ற நகரத்திலிருந்து பயணத்தைத் தொடர்ந்த பவுலும் திருத்தொண்டர்களும் தாலமாய் என்ற இடத்தை அடைந்தனர். அவர்கள் அங்கிருந்து சென்ற இடம் எது?
2) யெருசலேமில் பவுல் கட்டப்பட்டு பிற இனத்தவரிடம் ஒப்புவிக்கப்படுவார் எனத் தம் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு காண்பித்த இறைவாக்கினர் யார்?
3) யெருசலேமுக்குப் போகவேண்டாமென்று தம்மிடம் கெஞ்சிக் கேட்ட நண்பர்களுக்கு பவுல் கூறியது என்ன?
4) புனித பவுல் எத்தனை பேரோடு தூய்மைச் சடங்கு செய்து கொண்டார்?
5) தொடக்ககாலச் சீடரான மினாசோ வீட்டில் பவுல் சில நாட்கள் தங்கியிருந்தார். இந்த மினாசோ எந்த ஊரைச் சேர்ந்தவர்.?
6) யூத மக்கள் கூட்டம் புனித பவுலை எங்கு கைது செய்தது?
7) கோட்டைக்குள் செல்வதற்குமுன் பவுலடியார் படிக்கட்டுக்களில் நின்று மக்களோடு என்ன மொழியில் பேசினார்?
8) புனித பவுல் யாரிடம் திருச்சட்டங்கள் பற்றிப் பயிற்சி பெற்றார்?
9) புனித பவுல் ஆரம்பத்தில் தலைமைக் குருவிடமும், மூப்பரிடமும் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு தமஸ்கு நகருக்கு ஏன் போனார்?
10) கிறீஸ்துவின் சாட்சியாய் முதலில் கொலை செய்யப்பட்டவர் யார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 61 இற்கான கேள்விகளுக்கு 54 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத்**
**தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**
**ஆர்.யேசுராஜா, சின்னக்கரிசல், பேசாலை, மன்னார்.**
**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும்**
**10 அதிஸ்ரசாலிகள்**

1. ஜே.எஸ்.லிற்வினியா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
2. சு.மரிஸ்டெலா, இல - 329, சுந்தரபுரம், வவுனியா.
3. கே.மேரி அன்ரனிக்கா, 4ம் வட்டாரம், அனலைதீவு.
4. டா. சில்பேபியா, 8ம் வட்டாரம், நெடுந்தீவு, மத்தி.
5. பே.ஜேக்கப், பட்டித்தோட்டம், மன்னார்.
6. எ.ரேவதி, இல:152 பெரியகடை, மன்னார்.
7. திருமதி.ஜெ.சுமதி விமலன், ஆனாள்நகர், வங்காலை.
8. செ.ஜெசில்டா, இல.C 8, மடுக்கோவில், மடு.
9. அ.வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
10. பா.ஜெ.ரொணி திலீப்குமார், எமில்நகர், மன்னார்.

# குடும்பக் குவலயம்



## ஒழுக்கமும் குடும்ப வாழ்வும்

அருட்சகோதரர் றமேஸ் (அமதி)

"சோதனை செய்யப்படாத வாழ்வு, வாழத் தகுந்தது அல்ல" என்கின்றார் சோக்கிரட்டீஸ். "தன்னைத் தன்னால் தெரிந்து கொள்ள முடியாமல் ஒருவனால் தலைவன் ஆக முடியாது" என்றார் கவிஞர் கண்ணதாசன். மற்றவர்களைப் புரிந்து கொள்கிறவன் அறிஞன். தன்னைப் புரிந்துகொள்கின்றவன் ஞானி என்ற கருத்துக்கமைய மனிதன் தன்னைப் பற்றிய தெளிவிலே நாளும் வளர வேண்டும். நான் உருவாக.. என்னை என்னில் நான் காண... எனக்கு வித்திட்டது என் குடும்பம் என்று ஒவ்வொரு மனிதனும் உணர்வது இயல்பு.

உயிரைவிட மானிடப் பிறவிகளுக்கு பெரியதொரு பொருளொன்றில்லை என நினைக்கும்போது வள்ளுவப் பெருந்தகை உயிரிலும் மேலான அரிய பொருளாக ஒழுக்கத்தைக் காண்கின்றார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

ஒழுக்கத்தின் பிறப்பிடம் குடும்பம். தாய் தந்தையின் மடியில் கொஞ்சிக்குலாவும் குழந்தைப் பருவத்திலேதான் ஒழுக்கம் வித்திட்டு வளர்ச்சிபெறும். அன்றாட வாழ்வில் பெற்றோர் காட்டுகின்ற மாதிரிகையான வாழ்க்கையே மழலையின் மனதில் பதிந்துவிடுகிறது. வளரும் குழந்தை தன் வாழ்வில் அதனையே பிரதிபலிக்கிறது. தீயதை விலக்கி, வன்சொல்லகற்றி, இனியவை பேசி, நல்ல பாதையைக் குழந்தைகளுக்கு காட்டுகின்றபோதுதான் அவை நற்குணசீலராக சமுதாயத்தில் தலைதூக்கும். மனித வாழ்க்கையை எட்டுக் கட்டங்களாக வகுத்து, உள சமூக நிலைகளைப் பற்றி ஆழ்ந்த வரைவிலக்கணம் அமைத்துள்ள எரிக் எரிக்சன், குழந்தைப் பருவத்திலே நல்லொழுக்கம் விதைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந்
தீயொழுக்கம் என்றும் இடும்பைத் தரும்"

என்றார் செந்நாப் போதகர். ஒரு மனிதனின் வளர்ச்சிப் பாதையில் அவன் தீய வழியில் செல்லாது அறவழியில் வாழ்க்கை நடத்துவதற்கு வழிகாட்டுவது குடும்பமே. "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லது ஆவதும் கெட்டது ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்றாற்போல குழந்தைகள் கற்க வேண்டியதைக் கற்று, கடமையுணர்வைப் பெற்று, பெற்றோரையும், உற்றாரையும், மற்றோரையும் மதித்து வாழ்வதற்கு, பெற்றோர்களின் வாழ்வும் அவர்களின் வழிகாட்டலுமே படிக்கற்களாக அமைகின்றன. மாறாக குழந்தைகள் தீயவழி ஒழுகி, ஒழுக்கம் தவறி பிற்காலத்தில் சமுதாயக் கட்டுக் கோப்புகளை மீறி, தனக்கும் சமுதாயத்திற்கும் அழிவை ஏற்படுத்துவதற்கும் பிரதான காரண கர்த்தாக்கள் என்றால் அதுவும் பெற்றோரையே சாரும். கெட்ட பேச்சுகள், கெட்ட நடத்தைகள், துஷ்டத்தனமான செய்கைகளை பெற்றோர் தம் வாழ்வில் கொண்டிருக்கும்போது வளரும் சிறுவுள்ளம் அதனைத் தன்னில் அப்படியே பிரதிபலிக்கிறது, வளர்த்துக்கொள்கிறது, பிரயோகிக்க முற்படுகிறது என்று உளவியலாளர்கள் கருத்துக் கூறுகிறார்கள்.

மதுப் பழக்கத்திற்கும் புகைக்கும் பழக்கத்திற்கும் அடிமைப்பட்டுள்ள ஒரு குடும்பத்தலைவனது சீர்கெட்ட வாழ்வு, குழந்தையின் உள்ளத்தில் முளைத்து, வேரூன்றி நாளடைவில் அதைச் செய்யத் தூண்டுகிறது. அது மட்டுமின்றி தன் உற்ற மனைவி அருகிருக்க மாற்றான் மனை தேடி இச்சை வளர்க்கும் குடும்பங்களில் ஒழுக்கம் சீரழிகிறது. இதனால் அமைதி குலைகிறது. அமைதியின்மையால் குழந்தைகளின் எதிர்காலம் இருட்டுக் குகையாக்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் வளரும் குழந்தை வெறுப்பும், விரக்தியுணர்வுமுடைய மனிதனாக வளர்ச்சி பெற்று, தீச்செயல்களில் இறங்கக்கூடிய நிலைக்கு ஆளாகிறது.

குடும்பத்தில் பெற்றோர்களின் தாம்பத்திய உறவு வரம்பு மீறும் போது அவை குழுந்தைகளுக்கு முன்மாதிரிகையான வாழ்வாக அமையாமல், பெற்றோர் தங்களில் தாங்கள் மட்டும் சுகம் காணும் வாழ்வாக மட்டும் அமைகிறது.

பெற்றோர் பிள்ளைகளை அன்பால் அணைத்து, பாசமுடன் கண்ணோக்கி, நேசக் கரம் நீட்டாமல், அவர்களது மனநிலைகளைப் புரியாமல், அவர்களது சிறு விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், அவர்களது உரிமைகளைப் புரியாமல் வாழும்போது அத்தகைய பெற்றோர் மட்டில் பிள்ளைகளுக்கு வெறுப்பும், அவமரியாதையும் ஏற்படுவது மட்டுமல்லாமல் பிள்ளைகளின் மனோ வளர்ச்சி குன்றி எதிர்காலம் கேள்விக்குறியாகிறது.

பரந்த உலகில் பரவி வாழும் சமூகங்களின் மத்தியில் 'பிரச்சினை' என்பது பிரச்சினையாகவே கருதப்படுவதனால் அப்பிரச்சினை பிரச்சினையாகவே தொடர்கிறது. அதற்கு வழிகாண எம் வாழ்வை பின்பார்த்து முன்போகப் பழகிக் கொள்ளவேண்டும். மனித வாழ்க்கைப் பருவங்களில் பக்குவமடையப்படாத நிலைகளைத் தாண்டும் மனிதர்கள், வாழும் பருவங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்வதும், வாழ்வில் சலிப்படைவதும் இன்று இயல்பாகவுள்ளது. இப்பிரச்சினை தீர்க்கப்பட ஆரம்பப் பருவங்கள் விசேடமாக குழந்தைப் பருவம் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பது உளவியலாளர்கள் பலரினதும் கருத்து. இப்பருவத்தில் மிக முக்கியமாகக் குழந்தைகள் வாழ்வில் விதைக்கப்பட வேண்டிய நல்ல காரியங்களைப் பெற்றோர், பெரியோர் மாதிரிகையாக வாழ்ந்து காட்டும்போது அக்குழந்தை அவற்றைத் தன்னுள்ளத்தில் பதித்துப் பிரதிபலிக்கும். மாறாக தீயதை குழந்தைகள் தம் உள்ளத்தில் கற்க பெரியோர் காரணமாயிருந்தால் அதன் பிற்காலப் பருவங்கள், வாழ்வு நிலைகள் கேள்விக் குறியாகவே அமையும். வளருகின்ற குழந்தை சிந்திக்கும் காலம் வரும்போது, தான் எப்படி வாழவேண்டும் என்று தன் வாழ்வை மீட்டிப் பார்க்கும்போது பலவாறு சிந்திக்கும் என்பது யதார்த்தமாக எமக்குப் புரிகிறது.

'நான் என்னில் நானாக உருவாக, கருத்தந்த பெற்றோர் எனக்கு உருத்தந்து நல்திருத்தம் தரவேண்டும். அது என் வாழ்வில் திருப்பமாக வேண்டும். அதனால் நான் எனக்கும் பிறர்க்கும் சமூகத்திற்கும் விருப்பமாக வேண்டும். சமூகத்தின் ஊட்டத்தால் நான் பெரும் பொறுப்பேற்று உலகில் அறங்காக்க வேண்டும். அதற்கு நான் ஒழுக்கத்தில் நற்குணசீலனாக வளர வேண்டும்' என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும்.

நான் வளர்ந்து, என்னால் பிறர் வளர்ந்து, ஈற்றில் சமூகம் வளர நான் வழி சமைக்க வேண்டும்.
இல்லங்களிலும், மனித உள்ளங்களிலும் ஒழுக்கம் உயர்ந்து உயிர் கொடுக்க வேண்டும். ●

## சிந்தித்துச் செயற்பட சில குறிப்புகள்

* அயல் வீட்டாருடன் அன்பு கொள், ஆனால் வேலியை நீக்கிவிடாதே.
* வெற்றி என்பது இலட்சியத்தைப் படிப்படியாக புரிந்து கொள்வதேயாகும்.
* மகிழ்ச்சியான உணர்வுகளை நன்றாக அனுபவிப்பதற்கு சில சோகப்படுத்தும் உணர்வுகள் உதவுகின்றன. அவையே வாழ்விற்கு அர்த்தத்தையும் வழங்குகின்றன.
* அலைகள் உள்ள கடலில்தான், திறமையான மீனவனாக வரமுடியும்.
* யாருடைய நெஞ்சம் ஏழைகளுக்காக அழுமோ, அவரே மகாத்மா.
* மற்றொருவரின் வேதனையை உங்களால் தணிக்க முடிந்தவரை, நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை வீணாகவில்லை.
* இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவது நல்லது.
* பழிவாங்கும் பலத்தைவிட மன்னிப்பு சக்தி வாய்ந்தது
* அடுத்தவர் உணர்வுகளை புரிந்துகொள்ளாதவரை உறவுகள் ஒருபோதும் மேம்படுவதில்லை.

# மருத்துவப் பொழிவு

## தோல் நோயும், அதற்கான சித்தமருத்துவ சிகிச்சையும்

தொடர் - 03



டொக்டர்
எஸ். லோகநாதன் B.S.M.S, R.A.M.P
சித்தவைத்திய நிபுணர், மன்னார்

### தோல் நோயைத் தடுக்கும் முறைகள

சுத்தம் சுகாதாரம் அவசியம். எனவே தினசரி குளித்துத் தோலைச் சுத்தப்படுத்துதல் அவசியம். தோல் நோயாளிகளுடன் தொட்டுப் பழகுவதைத் தவிர்த்தல் வேண்டும். அவர் பயன்படுத்திய ஆடைகளை அணியவோ, படுக்கைகளைப் பயன்படுத்தவோ கூடாது. குடும்பத்தில் ஒருவருக்கு இத்தொற்று ஏற்பட்டால் அக்குடும்பத்தில் உள்ள அனைவரும் சிகிச்சை பெறுவது அவசியம்.

இச்சரும நோய் உள்ளவர்கள் கிரந்தித தன்மையுள்ள உணவுகளைத் தவிர்த்தல் அவசியம். நகங்களை வளர்க்கக் கூடாது. சுத்தப்படுத்தி வெட்டிவிடுதல் வேண்டும். பருத்தி ஆடைகளை அணிதல் நன்மை பயக்கும். உடலிற்கு அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நிறையுணவுகளை உட்கொள்ள வேண்டும். அதிலும் பச்சை நிறமுள்ள, மஞ்சள் நிறமுள்ள மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் உட்கொள்ளவேண்டும். உடலில் அதிக வியர்வை காணப்பட்டால் நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் இருத்தல் அவசியம். இரசாயனப் பொருட்களையோ, அமிலப் பொருட்க்ளையோ கையாளுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

மனக்கவலைகளை நீக்குதல் அவசியம். புண்களில் ஈ மொய்க்க விடக்கூடாது. புண்களில் இருந்து வரும் நிணநீரைச் சுத்தமான வெள்ளைநிறத் துணியால் ஒற்றி எடுத்தல் வேண்டும். இன்றைய கால கட்டங்களில் ஆங்கில மருத்துவத்திற்கு நிகராக சித்த ஆயர்வேத மருத்துவம் திகழ்ந்து வருகிறது. அவ்வண்ணமே மாவட்டங்கள் தோறும் மாவட்ட சித்த ஆயுர்வேத மத்திய மருந்தகங்களும், பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச சபைகளில் அரசாங்க இலவச சித்த ஆயுர்வேத மருத்துவ மனைகளும் இயங்கி வருகின்றன. எனவே நோயாளிகளுக்குத் தகுந்த முறையில் தரமான சித்த – ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை வழங்கி அவர்களை இந்நோயில் இருந்து முற்றாகக் குணமாக்க முடியும்.

### தோல் நோய்க்கு அரசாங்க சித்த ஆயுர்வேத மருத்துவமனைகளில் வழங்கப்படும் மருந்துகள் :

1. இரச கெந்திமெழுகு, இடிவல்லாதி மெழுகு, மகாவீர மெழுகு நந்தி மெழுகு இவைகளில் ஒன்றைத் தகுந்த அளவில் பனைவெல்லத்தில் பொதிந்து பல்லில் படர்மல் விழுங்கக் கொடுக்க வேண்டும்.
2. அமிர்தாதிக்குளிகை அல்லது குஷ்ட கஜகேசரி இவற்றில் ஒன்றை இரண்டு வேளை தகுந்த அனுபானத்தில் கொடுக்க வேண்டும்.
3. பறங்கிப்பட்டைச் சூறணம், பறங்கிப்பட்டை மாத்திரை, ஏலாதிச் சூறணம் இவைகளில் ஒன்றைத் தகுந்த அனுபானத்தில் கொடுக்க வேண்டும்.
4. கந்தகபஸ்பம், கருவங்க பஸ்பம், தாம்பிர பஸ்பம் இவைகளில் ஒன்றைத் தகுந்த அனுபானத்தில் கொடுக்க வேண்டும்.
5. அயவீர செந்தூரம் இரச்செந்தூரம் இவற்றில் ஒன்றைத் தகுந்த அனுபானத்தில் கொடுக்க வேண்டும்.
6. பறங்கிப்பட்டைப் பதங்கம் இதனைப்பனை வெல்லத்தில் பொதித்து விழுங்கக் கொடுக்கவும்.
7. அகஸ்தியர் குழம்பு, அகஸ்தியர் மெழுகு, இடிவல்லாதி மெழுகு, மகா வீர மெழுகு, நந்தி மெழுகு, வான்மெழுகு, இரசமெழுகு, இரசகெந்தி மெழுகு, இவைகளில் ஒன்றைத் தகுந்த அனுபானத்தில் கொடுக்கவும்.
8. மகா வில்வாதி லேகியம், சரபுங்கவில்லாதி லேகியம் இவற்றில் ஒன்றை 5 கிராம் வீதம் இரண்டு வேளை கொடுக்கவும்.
9. கந்தக இரசாயனம், பறங்கி இரசாயனம் இவற்றில் ஒன்றை 5 கிராம் வீதம் இரண்டு வேளை கொடுக்கவும்.
10. சேராங்கொட்டை நெய் 14 துளிகள் இரண்டு வேளை சர்க்கரையுடன் கலந்து கொடுக்கவும்.
11. சிரட்டைத் தைலம், கந்தக சுடர் தைலம், கருடன் கிழங்கு எண்ணெய், கரப்பன் தைலம், மேகநாமத் தைலம், இரசத்தைலம், சிவனார் வேம்புக்குழித்தைலம், சித்தாதி எண்ணெய் இவைகளில் ஒன்றைத் தகுந்த அளவில் கொடுக்கவும்.
12. மத்தன் தைலம், புங்கன் தைலம், வீரணசஞ்சீவித்தைலம் இவற்றில் ஒன்றைப் புண்ணிற்கு மேற்பூச்சாக பூசுலாம்.
13. இரு நெல்லிக் கற்பம் - தகுந்த அளவு இரண்டு வேளை நெய்யில் கொடுக்கவும்.

மேற்கூறப்பட்ட சித்த மருந்துகள் அரசாங்க இலவச சித்த ஆயுர்வேத மருத்துவமனைகளில் இலவசமாக நோயாளிக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இம்மருந்துகளில் நோயாளிகளின் குறிகுணங்களுக்கு ஏற்ப மருந்துகளை வழங்கி தோல் நோயைப் பரிபூரணமாகத் தீர்க்கலாம். *(தொடரும்...)*

# சமைப்போம் சுவைப்போம்

**தருவது:** கொன்சி குரூஸ்
தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.

## மாஸ்பு,ச்

### தேவையான பொருட்கள்

இறைச்சி - 500 kg தேவைக்கேற்ப
அரிசி - 1 கி. கிராம் (எந்த அரிசியும் பரவாயில்லை)
நெய் - தேவைக்கேற்ப
வெங்காயம், தக்காளி - 2
இஞ்சி, பூண்டு - 2 துண்டு
பச்சை மிளகாய் - 3
பச்சைக் கடலை (கிரீன் பீஸ்) - 100 கிராம் (அவித்து)
கறிவேப்பிலை - தேவையான அளவு
தனியாத் தூள் - 2 மேசைக்கரண்டி
கொத்தமல்லித் தூள் - ஒ்ரு தேக்கரண்டி
மஞ்சள் தூள் - ஒரு. மே. க
கரம் மசாலாத் தூள் - 3 தே. க
மிளகாய்த் தூள் - 1 தே.க.
ஏலக்காய் - 4
மஞ்சள் நிறம் - கொஞ்சம்
உப்பு - தேவையான அளவு
உருளைக் கிழங்கு - 250 கிராம்

### செய்முறை :

முதலில் இறைச்சியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி நன்கு கழுவி ஒரு பாத்திரத்தில் நெய்விட்டு இறைச்சியைப் பொரிக்க வேண்டும். அதனுள் நறுக்கிய வெங்காயம், தக்காளி, மிளகாய் என்பவற்றையும் சேர்த்து, கொஞ்சம் வறுத்தெடுக்க வேண்டும். அளவாக வறுத்து வந்ததும் அதனுடன் அவித்த கிரீன்பீஸ், பருப்பு, இஞ்சி, பூண்டு, ஏலக்காய், தனியாத்தூள், கரம் மசாலாத் தூள், மஞ்சள் தூள், மிளகாய் தூள், மிளகுத் தூள், கறிவேப்பிலை, கொத்தமல்லி தூள், அளவாக உப்பு சேர்த்து, நன்கு பிரட்டி எடுக்க வேண்டும். அது பொன்னிறமாக வந்ததும் அதனை இறக்கிவைக்க வேண்டும். பிறகு உருளைக் கிழங்கை தோல் சீவி நீள் வாக்கில் வெட்டி கழுவி மஞ்சள் தூள், உப்பு சேர்த்து பொரித்தெடுக்க வேண்டும். அதனையும்வேறாக்கி வைக்கவும். பிறகு அரிசியை உப்பு, மஞ்சள் சேர்த்து கொதிக்க வைக்கவும். அரிசி பதமாக வெந்ததும் இறைச்சி பிரட்டல் மற்றும் கிழங்கு பொரியல் என்பவற்றை சோற்றுடன் சேர்த்து கிளரிவிடவும். அதனுடன் கலரிங்கைக் கரைத்து மேலாக ஊற்றவும். பின்பு சுடச்சுட பரிமாறவும்.

# பெரியப்பா பதில்கள்




கேள்வி : எண்ணெய் விலை அதிகரிப்பு எல்லாப் பொருட்களின் விலையையும் அதிகரிக்கச் செய்கிறதே?
*- மதுமிசா, கல்லடி, மட்டக்களப்பு.*

பதில் : உண்மைதான். அந்த எண்ணெய் ஏழைகளின், நடுத்தர மக்களின் வயிற்றில் எரியும் நெருப்பை மேலும் அதிகமாக்கும்.

கேள்வி : 'அம்மா' வை 'அன்பு'க்கு அடையாளமாகக் காட்டுகிறார்கள். அப்படியானால் 'அப்பா'வை எதற்கு அடையாளமாகக் காட்டலாம்? *- மதுசன், செட்டிகுளம்.*

பதில் : அனுபவத்திற்கு!

கேள்வி : அண்மையில் தாங்கள் படித்த, நெஞ்சை நெகிழவைத்த புதுக்கவிதை ஒன்று?
*- அருண், மன்னார்*

பதில் : உறுத்தல்
உறக்கம் வர மறுக்கிறது...
முன்னோர்கள் வளர்த்த மரம்
கட்டிலாய்...!

கேள்வி : வாங்கிய கடனைத் திருப்பிக் கேட்டால் வம்புக்கு வரும் மனிதர்கள் பற்றி...? *- நிவேதனன், வவுனியா*

பதில் : சிலர் வம்புக்கு வருகிறார்கள். சிலர் கடனைத் திருப்பிக் கேட்டால் கதையளக்கிறார்கள்? எப்படி என்கிறீர்களா? இப்படித்தான்:
ஒருவர் : கல்யாணத்திற்காக வாங்கின கடன் எப்படி விவசாயக் கடனாகும்?
மற்றவர் : கல்யாணங்கிறது ஆயிரங்காலத்துப் பயிர்தானே?

கேள்வி : "உண்மையான நண்பன்', 'நல்ல நண்பன்' இரண்டு பேருக்கும் இடையில் என்ன வித்தியாசம்?
*- செந்தூரன், கோமரசன்குளம், வவுனியா.*

பதில் : நீங்கள் சிறைக்குப் போக நேர்ந்தாலும் உங்களோடு இருப்பவன் உண்மையான நண்பன்...! ஆனால் உங்களை உடனடியாகப் பிணையில் எடுப்பவன் நல்ல நண்பன்!

கேள்வி : 'அறிவு' என்பது என்ன? 'புத்திசாலித்தனம்' என்பது என்ன?
*- மரகதம், வேப்பங்குளம். வவுனியா*

பதில் : அறிவு என்பது ஒரு கிண்ணம் பால்!
புத்திசாலித்தனம் என்பது ஒரு பசுமாடு

கேள்வி : "அம்மா அப்பாவின் கனவை நிறைவேற்று" என்று சில பெற்றோர் சொல்கிறார்கள். தம்மைக் குறித்து தாமே கனவுகாணும் உரிமை குழந்தைகளுக்கு இல்லையா?
*- வடிவழகன், வேலணை, யாழ்ப்பாணம்.*

பதில் : ஒவ்வொரு குழந்தையும் பிறக்கும்போது கூடவே ஒரு கனவும் பிறக்கிறது. குழந்தையை மையமாக வைத்து அதன் பெற்றோர் காணும் கனவு! சில குடும்பங்களில் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் எனத் தனித்தனி கனவுகள் இருக்கும். குழந்தைகளின் எதிர்காலம் குறித்து கனவு காண்பதற்கு பெற்றோருக்கு உரிமை இருக்கிறது.

ஆனால் அதை நடைமுறைப்படுத்தும்போது குழந்தைகளுடைய கனவுகளையும், ஆசைகளையும் கவனிக்க மறந்துவிடுவதே தவறானது. குழந்தைகளோடு பேசி அவர்களின் கனவுகளையும் விளங்கிக்கொண்டு எதிர்காலத்தைத் திட்டமிடுவது உசிதமானது.

கேள்வி : குடும்ப உறுப்பினர்களோடு (தாய், தகப்பன், மனைவி, பிள்ளைகள்) அளவளாவிப் பேசி அன்பைப் பகிர்ந்துகொள்ளவே நேரம் இல்லாமல் அவதி அவதியாக - வேலை வேலையென்று ஓடித்திரியும் சிலரைப்பற்றி?
*- மதியழகன், மன்னார்.*

பதில் : வங்கியில் பணிபுரியும் ஒருவர் காலையில் ஏழரைக்குப் புறப்பட்டுப் போனால் இரவு பத்தரைக்கு வந்து உயிரற்ற உடலாய்ப் பொத்தென்று உடுப்புக்கூட கழற்றாமல் படுக்கையில் விழுவார். பசியைவிட அசதி அதிகம். பெண்டாட்டி, பிள்ளைகளைக் கவனிக்க ஏது நேரம்?

இத்தகையவர்களுக்கு ஒரு யோசனை. இவர்களுக்கு நாம் Quantity time (அதிக நேரம்) ஒதுக்க முடியாது. ஆனால் Quality time (தரமான நேரம்) ஒதுக்க முடியும்.

நேரமற்ற அந்த வங்கி அலுவலர்கூட ஒரு நிமிடம் ஒதுக்கி "என்னம்மா! சாப்பிட்டீங்களா? எப்படி இருக்கிறீங்க...! என்ன வேணும்!" என்று வாஞ்சையான மொழிகளில் அன்பான தொனியில் நான்கு கேள்விகளை மாற்றிப் போட்டும், புரட்டிப் போட்டும் தினமும் கேட்டால் போதும். அம்மாவுக்கு அடங்காத மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும்.

ஒரு சேட், ஜீன்ஸ் அணியும் நேரம், அவற்றைக் கழற்றும் நேரம், சப்பாத்தைப் போடும் நேரம், அதைக் கழற்றும் நேரம் இருக்கிறதே. அதற்கு ஆகும் ஒரு நிமிடத்தில்கூட குடும்ப உறுப்பினர்களிடம் நம் அக்கறையையும், அன்பையும் வெளிப்படுத்த முடியும்! அறுபது விநாடி அன்பைக்கூட அளிக்க முடியாதவர்களா நீங்கள்?

## திருமண வாழ்வின் 50 வது அகவை பொன் விழா



**(19.08.1959 - 19.08.2008)**

**திரு. திருமதி**
**பாக்கியம் மிராண்டா தம்பதிகள்** (பேசாலை)

ஐந்து பத்து ஆண்டளவாய் அன்பைச் சிந்தி வாழ்ந்த எங்கள்
அன்புத் தந்தையும், தாயும் தெய்வம் தந்த எங்கள் சொத்தல்லவோ
சொந்த எங்கள் இன்னுயிராம் சொல்லொண்ணா நல்லுறவாம்
அன்னவரை வாழ்த்தி நெஞ்சில் ஆனந்தம் நாம் கொண்டிடுவோம்
கைப்பிடித்த நாயகியார், கண்மணியாம் பிள்ளைகளும்
மெய்ப்படுத்தி அன்பைக் கொட்டும் பேரர்களும், பேத்திகளும்,
உற்ற உறவானவரும், உண்மை நண்பர், சோதரரும்
பெற்ற செல்வம் என்றவரை பேர்பதித்துப்பாடுகிறார்.

*இறையாசீர் வேண்டி இனிதாய் வாழ்த்துவோர்:*
*தாய் - சூசானா மஸ்க்கிறீஞ்ஞ,*
*பிள்ளைகள் - சகோதர சகோதரிகள், மச்சான், மச்சிமார், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், பேரப்பிள்ளைகள்.*
*தகவல் :* பேரப்பிள்ளைகள்.

# நீங்காத நினைவுகள்

## நினைவஞ்சலி

**15ம் ஆண்டு** **8ம் ஆண்டு**




தி. மனுவேல்பிள்ளை ம. இன்னாசியாப்பிள்ளை
(கங்காணிதீவு. நானாட்டான்)

மலர்வு: 10.04.1909
உதிர்வு: 27.10.1993

மலர்வு: 09.04.1925
உதிர்வு: 22.08.2000

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு."

*இவரின் பிரிவால் துயருறும்:*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினா*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 27 - 12 - 1971



உதிர்வு 31 - 07 - 2007

**ஜுவனா பியற்றிஸ் (ஜொன்சி)**
மறையாசிரியர்
(லுனுப்பொக்குன மோதரை-கொழும்பு)

**"சீவியத்தில் உம்மை நேசித்தோம்**
**மரணத்திலும் மறவோம்"**

உடலால் எம்மைப் பிரிந்தாலும்
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
அன்புப் பெற்றோர், கணவன், பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்.

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 14 - 09 - 1930



உதிர்வு 03 - 08 - 2006

**அருக்காஞ்சி சவேரியான**
**((செல்வரெட்டினம்) விடத்தல்தீவு)**

அன்பின் வழியில் வாழ்ந்திட்ட ஐயாவே!
ஆண்டவர் ஒளியில் நடத்திட்ட ஐயாவே!
இரண்டு ஆண்டுகள் கடந்திட்ட போதிலும்
ஈடில்லா சாட்சிய அனுபவ வாழ்வு - எம்
உள்ளத்தில் உணர்வுகளுடன் வாழுதையா.
ஊக்கமுடன் எமையெல்லாம் இறை வழியினிலே
எளிமையாய் நடத்திடக் கரம்பிடித்து - நீர்
ஏணியாய் ஏற்றமுடன் வளர்த்திட்டீர்.
ஐயா நீர் தந்த இறை நிறை வாழ்வு
ஒளிமயமாக எம்மில் வீசுதையா,
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும் - உம்
நினைவுகள் எமைவிட்டு மறையாது.

*உம் ஆன்ம சாந்திக்காக மன்றாடும மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளா.*

## 03ம் ஆண்டு நினைவு

மலர்வு 14 - 01 - 1920



உதிர்வு 21 - 08 - 2005

**அமரர் அ. லூயிஸ் குருஸ்**
**(அதிபர்) (தாழ்வுபாடு)**

ஆல விருட்சம்போல் அன்போடு அணைத்தீர்
வாழ வழிகாட்டி வலுவூட்டி எமை வளர்த்தீர்
சூழும் வினையகற்றி விழிமூடாதெமைக்காத்தீர்
நாளும் உம் நினைவு எம் மனதில் நிழலாடும்.
மூச்சடங்கி மூன்றாண்டு சென்றுவிட்டாலும்
உங்களின் பேச்சடங்காது எங்கள் நாவில்
மீண்டும் உமை நாங்கள் கண்டு மனமாறும்
காலம் வந்து சேரும்வரை ஆண்டவன் மடியில்
அமைதியுடன் இளைப்பாறுங்கள்!

*அன்னாரின் ஆன்மசாந்திக்காக தாழ்வுபாடு புனித வளனார் தேவாலயத்தில் 21.08.2008 அன்று காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.*

*இவரின் பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.*

## 10ம் ஆண்டு நினைவு

மலர்வு 03 - 03 - 1957



உதிர்வு 10 - 08 - 1998

**திரு. பிலிப்பு அமிர்தநாயகம்**

எம் வாழ்வின் ஒளிவிளக்கே
எமதருமைத் தந்தையே
பத்தாண்டு பறந்து சென்றாலும்
பாசம் அது மாறவில்லை ஐயா
பகலவனாய் வழிநடத்தி - எமைப்
பாதியில் பிரிந்து சென்றீர்.
நீங்காத நினைவுகளாய் உம் முகம்
நெஞ்சமதில் பதிந்துள்ளது
உம் ஆத்ம சாந்திக்காக
கண்ணீரோடு பிரார்த்திக்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 12 - 05 - 1925



உதிர்வு 27 - 07 - 2007

**இளையதம்பி பொன்னுத்துரை**
**(விடத்தல்தீவு)**

தந்தைக்கு இலக்கணமாய்
தாரணியில் நீர் திகழ்ந்தீர்.
தயவாக எம்மையெல்லாம்
பண்புடனே பாதுகாத்தீர்.

எந்தநிலை வந்தாலும்
இறுதிவரை தொழில் புரிந்தீர்.
சீர்பெறவே நாமும்
சோராது பாடுபட்டீர்.

மனங்கவரும் இசைமீட்டி
மக்களையும் நீர் கவர்ந்தீர்
மாறாத சோகமதில்
நாம் மூழ்கித் தவிக்கின்றோம்

*இவரின் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், , உற்றார், உறவினர்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி
## இல - 76 நீதிமொழிகள் 25 - 31

உங்கள் விடைகளை 10.09.2008க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | ★ | 03 | | | | 04 | ★ | 05 | |
| | | | | 06 | | | 07 | | | |
| | 08 | | | | 09 | | ★ | | | |
| | | | | | | | 10 | | | |
| | | | | | ★ | 11 | | | | 12 |
| ★ | | | | 13 | | | | | 14 | |
| | | 15 | | | | | 16 | | | |
| | | ★ | 17 | | | | | 18 | | |
| | 19 | 20 | | | | | | 21 | | |
| 22 | | | | | | | 23 | ★ | | |

### இடமிருந்து வலம்

1. அரசரின் அவையினின்று கெடுமதி .................. பொல்லாரை அகற்றி விடு.
3. வீணானவற்றில் காலத்தைக் கழிப்பவர் எப்போதும் ............... நிறைந்தவராய் இருப்பார்.
7. முறைகேடாய் நடக்கும் செல்வரைவிட ................ வராய் இருக்கும் ஏழையே மேல்.
8. தொலையிலிருக்கும் உடன் பிறந்தாரைவிட ............யிலிருக்கும் நண்பரே மேல்.
13. அடுத்திருப்பாரோடு உனக்குள்ள ............. அவருடனேயே பேசித்தீர்த்துக்கொள்.
17. தீய நெஞ்சத்தை ................ நயமாகப் பேசுவது மட்பாண்டத்திற்கு மெருகூட்டிப் பளபளக்கச் செய்வது போலாகும்.
20. .........................யாளர் ஊரையே கொளுத்திவிடுவர்.
22. நியாயம் வழங்குவதில் அரசர் .................. காட்டினால் நாடு செழிக்கும்.

### மேலிருந்து கீழ்

1. மடையரின் கேள்விக்கு அவரது மடமையை ............. வகையில் பதிலுரை.
2. உன்னை உன்னுடைய வாயல்ல ............களுடைய வாய் புகழட்டும்.
5. எப்போதும் கடவுளுக்கு அஞ்சி வாழ்பவர் ............. பெறுவார்.
6. கரியால் தழல் உண்டாகும், விறகால் ................. எரியும், சண்டை பிடிக்கிறவரால் கலகம் மூளும்.
8. ஒருவர் தம் .............. மற்றவரைக் கூர்மதியராக்கலாம்.
12. புறங்கூறுபவர் ................ சண்டை அடங்கும்.
14. ஏழைகளை ஒடுக்கும் கொடிய அதிகாரி ............... அழிக்கும் பெருமழைக்கு ஒப்பானவன்.
16. கொடுங்கோல் மன்னன் ஏழைக்குடிமக்களுக்கு ............ மிடும் சிங்கமும் இரைதேடி அலையும் கரடியும் போலாவான்.

### வலமிருந்து இடம்

2. வேறொருவரைப் பற்றிய ............... வெளிப்படுத்தாதே.
4. பொல்லார் ..................யிடத்திற்கு வந்தால் மற்றவர்கள் மறைவாக இருப்பார்கள்.
6. ஞானிகளின் ................. நடப்பவரோ தீங்கினின்று விடுவிக்கப்படுவார். (2வது எழுத்து 4வதாக உள்ளது)
10. ஞானமுள்ளவரோ பொறுமையோடிருப்பதால் அவர் ............ ஆறும்.
12. பொறுமை ஆட்சியாளரையும் ................ச் செய்யும். (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
16. மடையரின் கேள்விக்கு ................. தனமாகப் பதிலுரைக்காதே.
21. ஏழைகளின் உரிமைகளைக் காப்பதில் நேர்மையாளர் .............. கொள்வர்.
23. தன் சொந்தக் ............ யே நம்பி வாழ்பவன் முட்டாள்.

### கீழிருந்து மேல்

8. கனிவான ............... மனத்திற்குத் திடமளிக்கும்.
9. ஆனால் பொறாமையின் ............ எதிர்த்து நிற்க யாரால் இயலும்.
11. ஞானமுள்ளவர்களோ மக்களின் ..................த் தணிப்பார்கள்.
15. அவர்கள் சார்பாகப் பேசி நியாயமான ................. வழங்கு.
17. திறமை வாய்ந்த .............முள்ள மனையாளைக் காண்பது மிக மிக அரிது. .
18. ஆண்டவரை நம்புகிறவருக்கோ ............. கிடைக்கும்.
19. தக்கவேளையில் சொன்ன சொல் வெள்ளித் ............... வைத்த பொற்கனிக்குச் சமம்.
22. ஓயாது சண்டை பிடிக்கும் மனைவி ..................... நாளில் இடைவிடாத தூறல் போன்றவள்.

# விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 74ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

**முதலாம் பரிசு:**

**செல்வி.அலிஸ் பசில்**
**41/2, ரெம்பிள் றோட்,**
**யாழ்ப்பாணம்.**

**இரண்டாம் பரிசு:**
தர்சினி நடராஜா,
தி.கு. கன்னியர் மடம்,
தலவாக்கலை.

**மூன்றாம் பரிசு:**
வோ.அஞ்சலின்,
இல.186, பட்டக்காடு,
வவுனியா.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 183 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 152 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.74ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. அருள்நாதன் வதனி, முதலைகுத்தி, உயிலங்குளம்
2. ஆர். அகிலா, பாவிலுப்பட்டான் கட்டிகுடியிருப்பு, பேசாலை.
3. கு. மதுநிலா, திருக்குடும்ப கன்னியர் மடம், வவுனியா.
4. பா. மேரி சுகந்தினி, நித்தாவத்தை, கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
5. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
6. எம். றினோஷன், இல.383, பள்ளிமுனை, மன்னார்.
7. செல்ரன் மனோகரி, பட்டித்தோட்டம், மன்னார்.
8. திருமதி. வசந்தி பேரின்பநாயகம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
9. டா. சில்பேபியா, 8ம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு.
10. திரு. சி. வின்சன் யோட்ஸ், கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம்.
11. நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.
12. எம். நிரோஜன், பள்ளிவாசல் வீதி, கீரி, மன்னார்.
13. வே. நொயலின், பிச்சைகுளம், முருங்கன்.
14. அ. ஸ்டெலா, இல: 51, துட்டவாகை, நேரியகுளம்.
15. செ.யூலியன் ஜீவக்குமரார், புதுக்கமம்: உயிளங்குளம்.
16. யோ.ம.சமிஸரா, 144, கோவில்குளம், வவுனியா.
17. அ. சுபாசின், கனகராயன்குளம் தெற்கு, வவுனியா.
18. ரீ. யூலியானா, 3ம் வட்டாரம், பேசாலை.
19. பத்திநாதன் நான்சி, எழுத்தூர், மன்னார்.
20. வி. வின்சன் பற்றிக், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
21. செலஸ்ரீனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்
22. அ.க.கீர்த்திக்கா, 41A, புனித மரியாள் வீதி, திருகோணமலை
23. திருமதி. பெர்ணடேற், முருங்கன் பிட்டி, முருங்கன்.
24. அ. மேரி கொண்செப்ரா, அன்பகம், முழங்காவில்.
25. கு. சுதர்சன் றொபட், கீளியன்குடியிருப்பு, தலைமன்னார்.
26. எஸ். குணபாலசிங்கம், அண்ணா நகர், வவுனியா.
27. செ. ஸ்ரீபன்ராஜ், அரிப்பு, சிலாபத்துறை.
28. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
29. ரா. சுதர்னா, சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கு, யாழ்.
30. இ. ஒலின்ரா, அருப்பே சிறுமியர் இல்லம், பூவரசன்குளம்.
31. யோ. ஜெறோசன், கன்பொல்லை வீதி, கரவெட்டி, யாழ்ப்பாணம்.
32. பா. விஜிந்தினி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி, மன்னார்.
33. பெ. மேரி ஜஸ்மின், (மன் புனித சவே. பெ. கல்லூரி), சாந்திபுரம்.
34. ஞா. கிறிஸ்ஷாந்தா, சாளம்பன், ஆட்காட்டிவெளி.
35. என். ஜனார்த்தனா, மணற்குளம், உயிலங்குளம்.
36. ஜெபநேசன் ஜெபிஷன், பெரியகடை, மன்னார்.
37. பற்றிமா பெனாண்டோ, 58. சென்லூசியா வீதி, கொழும்பு-13
38. ஞா. கபோனியா, திருக்குடும்ப சிறுவர் இல்லம், சில்லாலை.
39. ஜெ. விமல்டா ஜெயசீலி, மதியாமடு, புளியங்குளம்.
40. கி. லூட்ஸ் டிலோஜனா, 10ம் வட்டாரம், நெடுந்தீவு.
41. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர் வீதி, மன்னார்.
42. ரீ. ஜெ. சகாயராணி பெர்னாண்டோ, 8ம்வட்டாரம், வங்காலை.
43. இ. ஜீவிதா, கற்கிடந்த குளம், முருங்கன்.
44. எ. ஜோய் மெலானியஸ், சுண்டிக்குளி, முருங்கன்.
45. செ. ஜென்சன் ஜீவராஜ், புதுக்கமம், உயிலங்குளம்.
46. எஸ். பப்ரிஸ் றொனி வாஸ், கோயில் வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
47. அ. இசைக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
48. ஜே. எஸ். சுகன்யா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
49. பி. எஸ். சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
50. எஸ். நதின், 88. சிறிய குருமட வீதி, மன்னார்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 75 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ந[1] | ல் | ல | றி | வோ | டு | ன் | ய | ப | ற் | ந[2] |
| ற் | ந[3] | ட | ப் | போ | ரை | வு | றி | அ[4] | ✻ | ல |
| ப | ற் | த[5] | ண் | டி | க் | க | ளோ | வ | ன் | த் |
| ய | பே | சி | ச் | ழ் | கி | ம[6] | க | ரு | பி | தை |
| ன் | று | ✻ | நே[7] | ர் | வ | ழி | ற் | டை | ப் | ம் |
| வ[8] | கு | ப் | போ | ர் | வு | ✻ | சொ[9] | ய | டை | ய |
| ரு | ல | போ | ழி | வ[10] | ழி | யி | ல் | ✻ | கி[11] | மை |
| வி | பி[12] | ன் | வி | ப | அ[13] | சை | க் | க | ளை | ய் |
| த் | ற | ய | செ[14] | ற் | ✻ | ழை | க | பு[15] | யு | வா[16] |
| து | ர் | ப[17] | ற் | ஏ[18] | ள | ன | மே | க | ஆ[19] | ✻ |
| ல் | த | ழ் | க | இ[20] | ✻ | சி | ச் | ழ் | கி | ம[21]. |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி
இல.75ற்கான முடிவுகளை 2008ம் ஆண்டு
செப்ரெம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# 42வது உலக தொடர்பாடல் தினத்துக்காக ........ 2ம் பக்கத் தொடர்சி

4. சமூகத் தொடர்பாடலுக்கான வழிகளின் பங்களிப்பாக சமுதாயத்தால் வேண்டிநிற்பவை 3வது மிலேனியத்தின் முதன்மையான சவாலாக வெளித்தோன்றும் மானிடவியல் வினாவோடு ஒருங்கிணைந்த பகுதியாகக் கணிக்கப்படுகின்றது. மானிட வாழ்வு, திருமணமும் குடும்பமும், சமகால பாரிய பிரச்சினையான அமைதி, நீதி, படைப்பைப் பாதுகாத்தல் போன்றவற்றில் நாம் காண்பவை போன்று சமூகத்தொடர்பாடலிலும் மானிட ஆளினதும், அந்த மானிட ஆளைப்பற்றிய உண்மையிலும் அத்தியாவசியமான பரிமாணங்கள் உள்ளன. தொடர்பாடல் தனது ஒழுக்க நிலையையும், சமூகக் கட்டுப்பாட்டையும் இழக்கும்போது தனது நடுநிலைத் தன்மையையும், மானிட ஆளின் மீறப்பட முடியாத மாண்பையும் இழந்து, மேற்கொண்டு கவனத்தில் எடுக்க முடியாத முடிவை எட்டுகின்றது. இதன் விளைவாக இது மக்களது மனச்சான்றின்மீதும், அவர்களது தெரிவுகளின்மீதும், அவர்களது சுயாதீனம், வாழ்வு ஆகியவற்றைத் திட்டமான முறையில் நிபந்தனைப்படுத்துபவைமீதும் எதிர்மறையான செல்வாக்குச் செலுத்தும் ஆபத்துக்கு உட்படுகின்றது. இத்தகைய காரணங்களின் நிமித்தம் சமூகத் தொடர்பாடல் விடாமுயற்சியுடன் ஒரு நபரைக் காப்பாற்றுவதுடன் மனித மாண்பையும் முழுமையாக மதிக்கின்றன.

5. ஊடகங்கள் எமது காலத்தின் உண்மையான தண்டனையான உலோகாயுத பொருளாதாரத்தினதும், ஒழுக்க சம்பந்தமானவற்றினதும் பேச்சாளராய் வருவதைத் தவிர்க்க வேண்டும். இதற்குப் பதிலாக இவை மனுக்குலத்தைப் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துவதில் பங்களிப்புச் செய்வதுடன் இதனை மறுதலிப்பதற்கு அன்றேல் அழிப்பதற்கு முயற்சிப்பவர்களுக்கு எதிராக அவற்றைக் காப்பாற்றுவதற்கும் தமது பங்களிப்பை நல்க வேண்டும். மனுக்குலத்தைப் பற்றிய உண்மைகளைத் தேடி அவற்றை முன்வைப்பதானது உயர்ந்த சமூகத் தொடர்பாடலை ஏற்படுத்தும் என்று ஒருவர் கூறக்கூடும். ஊடகங்கள் வெளிப்படுத்தும் அதிகளவில் மெருகூட்டப்பட்டதும், கவனத்தை ஈர்ப்பதுமான தொழில் நுட்பங்கள் நிர்வாகிகளுக்கும் இயக்குனர்களுக்கும் ஒப்படைக்கப்பட்ட முதல் தரமான வேலையாகும். இருந்தும் இவற்றுள் ஓரளவு வேலை எம்முடன் சம்பந்தப்பட்டது. காரணம் இந்த உலகமயமாக்கல் சகாப்தத்தில் நாம் அனைவரும் சமூகத் தொடர்பாடல்களின் நுகர்வோராகவும், இருக்கின்றோம். புதிய ஊடகமான தந்திதொடர்பாடல்கள் விசேடமாக இணையம் போன்றவை தொடர்பாடல்களின் தோற்றத்தை மாற்றுகின்றன. எனது முன்னோரான 2ம் யோண் பவுல் கூறியது போன்று மனித ஆளைப் பற்றிய அத்தியாவசியமானதும், ஈடுசெய்யமுடியாததுமான அம்சங்கள் சிலசமயம் மீள்உருச்செய்யப்பட்டு மேலும் காணக்கூடிய விதத்தில் உருவாக்குவதற்கான பெறுமதிமிக்க தருணமாகவும் இது அமையலாம். (அப்போஸ்தலிக்க மடல் : விரைவான வளப்படுத்தல் 10).

6. மனிதன் உண்மைக்குத் தாகமாயிருக்கின்றான், உண்மையைத் தேடுகின்றான். உண்மை, அழகு, மனிதனின் மேன்மை, மனிதனின் மதப் பரிமாணம் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டு முன்வைக்கப்படும்போது அதிகளவான வெளியீடுகள், நிகழ்ச்சித் திட்டங்கள், தரமான கட்டுக்கதைகள் ஆகியவற்றின் கவனம், அவற்றின் மூலம் பெறப்பட்ட வெற்றிகள் ஆகியவை மூலம் இந்த உண்மை தெளிவாக்கப்படுகின்றது. "நீங்கள் உண்மையை அறிவீர்கள் அந்த உண்மை உங்களை விடுவிக்கும்" (யோவான் 8:32) என்று இயேசு கூறியுள்ளார். எம்மை விடுவிக்கும் உண்மை கிறிஸ்துவே, ஏனென்றால் மனித இதயங்களில் காணப்படும் வாழ்வுக்கும் அன்புக்குமான தாகத்திற்கு அவர் மட்டுமே பதிலிறுக்க முடியும். அவரைச் சந்தித்து ஆர்வத்துடன் அவரது செய்தியை வரவேற்றவர்கள் இந்த உண்மையைப் பகிர்ந்து, ஏனையோருக்கு அளிக்கும் அளவிட முடியாத ஆவலை அனுபவிக்கிறார்கள். புனித யோவான் எழுதுவது போன்று "தொடக்கம் முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம், கண்ணால் கண்டோம், உற்று நோக்கினோம், கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்தவாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கிறோம். தந்தையோடு இருந்ததும், எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த 'நிலைவாழ்வு' பற்றி உங்களுக்கு அறிவிக்கிறோம். தந்தையுடனும் அவருடைய மகன் இயேசுக்கிறிஸ்துவுடனும் நாங்கள் கொண்டுள்ள நட்புறவை நீங்களும் கொண்டிருக்குமாறு நாங்கள் கண்டதை, நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம் (1யோவான் 1:1-3).

தைரியமுள்ள தொடர்பாளர்களையும், நேர்மையான விதத்தில் உண்மைக்குச் சான்று பகர்பவர்களையும், கிறிஸ்துவின் கட்டளைகளுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பவர்களையும் விசுவாசம் அளிக்கும் செய்திக்கு ஆவலுடன் காத்திருப்பவர்களையும், நவீன கலாச்சார தேவைகளுக்கு அர்த்தம் கொடுக்கும் தொடர்பாளர்களையும், தொடர்பாடல் சகாப்தத்தை வேற்றுமைப்படுத்தல், முரண்பாடு ஆகியவற்றின் சகாப்தமாகப் பாராது உண்மைக்கான தாகம் கொள்ளும் பெறுமதிமிக்க காலமாகக் காண்பதோடு, தனிநபர்களுக்கும் மக்களுக்கும் இடையேயான ஐக்கியத்தை வளப்படுத்துவதற்குத் தம்மை அர்ப்பணிப்பவர்களையும் தூய ஆவி எழுப்பும்படி வேண்டுவோம். (தொடர்பாடலும் கலாச்சாரமும் என்பதில் பணியாற்றுபவர்களுக்கான மாநாட்டின்போது திருத்தந்தை 2ம் யோண் பவுல் அளித்த செய்தி) (9 நவம்பர் 2002).

இந்த வாழ்த்துக்களுடன் நான் எனது ஆசீரை அளிக்கின்றேன்.

*வத்திக்கானிலிருந்து 24 ஜனவரி 2008 புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் திருவிழா*


- திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

# மன்னா

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 . 03 . 1968



உதிர்வு 07 . 09 . 2007


அமரர் **இராசையா யோகராஜா** (மோகன்) வவுனியா

ஐயிரண்டு திங்கள் ஆசையுடன் சுமந்து பெற்று அமுதூட்டி வளர்த்தேன் ஐயா
வீட்டுக்கு மூத்தவனாய் உடன் பிறந்தோருக்கு உற்றதோர் மந்திரியாய் இருந்தாய் ஐயா
இல்லறவாழ்வில் மழலையைப்பெற்று மகிழ்ந்தாய் ஐயா.
மின்னாமல், முழங்காமல் மழைபெய்வதுபோல் சொல்லாமல் மறைந்தாய் மகனே
நீ மறைந்து ஓராண்டு சென்றாலும் எம்மை விட்டு நீங்காது உன் நினைவு
உன் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் இறைவனை.

உன் நினைவால் ஏங்கும்
அன்பு அம்மா, ஐயா, மனைவி, மகள், சகோதரர்கள், மச்சான்மார், மச்சாள்மார், அன்ரிமார், மாமன்மார், மாமிமார், உற்றார், உறவினர்.

### 31ம் நாள் நினைவு

மலர்வு 16 . 08 . 1924



உதிர்வு 16 . 07 . 2008

**பேதுறுப்பிள்ளை சந்தியாப்பிள்ளை (ஆனந்தம்)** மணற்குளம்.

அன்பான தகப்பனே, பாசமாய் எம்மை அரவணைத்து, பக்குவமாய் வளர்த்து,
கருத்தாய் கல்வி அளித்து, கடமையில் கண்ணியமாய், கருணையின் வடிவமாய்,
கண்ணின் மணிபோல் காத்த எம் குரு தெய்வமே, எங்கள் கண்ணீர் பூக்களை
உங்கள் பாத மலர்களில் சமர்ப்பிக்கின்றோம்.
நித்திய இன்பத்தில் இருந்து எமக்காய் நிமலனை வேண்டுவீர்.

என்றும் உங்கள் நினைவலைகளில் சங்கமிக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 . 11 . 1982



உதிர்வு 05 . 08 . 2007

**மரியதாசன் ஜெறோம் (நியூமன்)**

(தோட்டவெளி, தாராபுரம்.)

பாசத்தின் மைந்தா
எங்களன்பு நியூமா...!
நீ ஆண்டவன் பாதம்
அடைக்கலம் புகுந்து
ஓராண்டு ஆனதையா..!
கடைசிவரை நீயிருப்பாய்
எம்மருகில் என நினைக்க
காலனவன் காவு கொண்டான்
நின்னுயிரை...!
காலனவன் கடமைதன்னை
இரக்கமின்றி செய்திட்டாலும்
இறைவனின் இனிய கரத்தில் இன்பமாய்
இளைப்பாறுவாய் எனவெண்ணி
நாம் மன அமைதியடைகின்றோம்.

உன் பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அக்கா, அண்ணா,
அண்ணி, அத்தான், தங்கை, மற்றும் உறவினர்கள்.

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 31 . 05 . 1933



உதிர்வு 22 . 08 . 2007

**திரு. அ. மரியதாசன் குருஸ்**

(இளைப்பாறிய அதிபர், வங்காலை)

ஆண்டொன்று கடந்தாலும்
ஐயா உம் அன்பினை மறக்கமுடியுமா?
ஆளாக்கி வைத்த எம் தந்தையே
உங்களை இழந்து நாம்
நித்தமும் வாடுகின்றோம்
கர்த்தனிடம் வேண்டிடுங்கள்
உங்கள் ஆன்மா சாந்திபெறட்டும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி: அன்னம்மா குருஸ் (இளைப்பாறிய ஆசிரியை)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 . 04 . 1939



உதிர்வு 17 . 08 . 2007

**தொம்மை சந்தான் (செல்வராஜா)**

(பிடாரிகுளம், முருங்கன்.)

"நீதிமான்கள் உரிய காலத்திற்கு முன் இறந்தாலும் இளைப்பாற்றியடைவார்கள்" (சால. ஞானம் 4:7)

செல்வ குண அழகின் ராஜா நீரேதான்
குடும்பத்தின் குலவிளக்காய்
ஆலயத்தின் அயராப்பணியாளனாய்
கிராமத்தில் மூத்தோனாய்
பூத்திருந்த எம் பூமலர் வாடி
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம்மனங்கள்.
தேவனடி உம் இதயம் பேரின்ப வாழ்வு பெற
இறைஞ்சுகிறோம் இணைந்து ஒன்றாய்.

இவரின் பிரிவால் தயருறும்:
மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

### 45ம் நாள் நினைவு

மலர்வு 02 . 12 . 1933



உதிர்வு 26 . 06 . 2008

அமரர் திருமதி

**ச. ஜேட்றூட் அழகேஸ்வரி**

(முருங்கன்பிட்டி, முருங்கன்.)

வாழ்ந்தாலும் இறந்தாலும்
நாம் ஆண்டவருக்கே உரியவர்கள் (உரோமர் 14:8)

காலன் உங்களை
கவர்ந்து சென்றதால்
கலங்கித் துடிக்கின்றோம்
இதயம் வெடிக்கின்றோம்.
எம் குடும்பத்தின் குலவிளக்கு
இறை விசுவாசத்தின் அடையாளம்
மனித நேயத்தின் வழிகாட்டி
சிலுவைகளை ஜெயித்த தியாகி
பிரார்த்திக்கின்றோம் நேசத்தாயே
உங்கள் ஆத்ம சாந்திக்காய்!

நீங்கா நினைவுடன்
கணவன், பிள்ளைகள், சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

### 2ம் வருட நினைவு / 1ம் வருட நினைவு





மலர்வு 20-05-1947
உதிர்வு 22-07-2006
**திருமதி. பிரான்சிஸ்கா அந்தோனிப்பிள்ளை**

மலர்வு 18-07-1942
உதிர்வு 24-04-2007
**திரு. நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**

3/23, ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவா 11:25)

எங்கள் அன்பு ஐயா! அம்மா! நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்தாலும் எங்கள் உணர்வுகளுடன் ஒன்றித்து வாழ்கின்றீர்கள். எங்களை அன்புடன் அரவணைத்துக் காத்து வழிநடத்தி வந்த உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளத்தை விட்டு நீங்காத பசுமையான நினைவுகளாக நிலைத்து நிற்கின்றன. இறை அமைதியில் இளைப்பாறி முடிவில்லா வாழ்வை சுதந்தரித்துக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஆறுதலடைகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

### 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 . 08 . 1952



உதிர்வு 15 . 08 . 2006

அமரர்

**சூ. குமாரகுலசிங்கம் (குமார்)**

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)

ஆண்டுகள் இரண்டு
உருண்டோடினாலும்
ஆறாது கவலைகள்
மாறாது சோகங்கள்
தேடும்விழிகள்
கலங்கும் மனது
துயரத்தை மறைத்து
செபத்தில் ஊக்கமாய்
இறைஞ்சுகின்றோம் பரமனிடம்
நித்திய வாழ்வை அளித்திடவே!

இவரின் பிரிவால் தயருறும்:
மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784/1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது